www.padippakam.com

கிரிமினல் அரசியலில் ஜெயா கும்பல் சாதனை

# புதிய ஜனநாயகம்




## விசுவாசத் தடுமாற்றம் சுருதியில் பேதம்

படிப்பகம்

www.padippakam.com

# 'மார்க்சிஸ்டு' நிலப்பிரபுக்கள்!

ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தில் சாணிப் பால் குடித்தனர்; கசையடி பட்டனர்; அவமதிக்கப் பட்டனர். இக்கொடுமைகளுக்கு எதிராக கம்யூனிஸ்டு கட்சியில் சேர்ந்து போராடினார்கள். ஆனால் இன்று நிலைமை தலைகீழாகிவிட்டது. போலிக் கம்யூனிஸ்டுகள் 'சிவப்பு நிலப்பிரபுக்களாக' மாறி தாழ்த்தப்பட்ட மக்களைக் கொடுமைப் படுத்துவதால் அவர்கள் அதிலிருந்து மீள்வதற்காக முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ கட்சிகளில் அடைக்கலமாகிறார்கள். 'மார்க்சிஸ்டு' கட்சியினரின் அடவாடி - அராஜக - அயோக்கியத்தனத்திற்கு , எல்லையே இல்லாமல் போய்விட்டது.

வேதாரண்யம் தாலுகா வெண்மணல் சேரி - கட்டியான் ஓடையைச் சேர்ந்த கணேசன் என்பவர் சி.பி.எம்.-ஐச் சேர்ந்த ரெத்தினவேல் என்பவரிடம் ரூ. 650-ஐ வட்டிக்கு கடனாக வாங்கினார். ரூ. 100-க்கு வட்டியாக 200 ரூபாய் மதிப்புள்ள நெல் மூட்டைகளை கேட்டே கடன் கொடுத்திருக்கிறார், ரெத்தினவேலு. வெள்ளத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டு கணேசனால் வட்டியாக 6 1/2 மூட்டை நெல்லும் அசலும் கொடுக்க முடியவில்லை. அடுத்த ஆண்டு விளைச்சலில் கடனை அடைத்துவிடுவதாக கூறியும் ரெத்தினவேலு ஒத்துக்கொள்ளவில்லை. முன்னாள் சி.பி.எம். கிளைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தியும் ஒன்றியச்செயலாளர் வைரவனும் கடனை வசூலித்துதர பொறுப்பேற்றுக் கொள்வதாகக் கூறியும் ரெத்தினவேல் ஒப்புக்கொள்ளாமல் அசிங்கமாகவும் அடாவடித்தனமாகவும் பேசி வற்புறுத்தினார். மேலும் ஊர்த் தலைவர்களிடம் முறையிட்டு பஞ்சாயத்துக்கூட்டி தண்டிக்க ஏற்பாடு செய்தார். கிராமத்தலைவர் தங்கவேல் என்பவரும் சி.பி.எம்-ஐச் சேர்ந்தவர் என்பதால் இதற்கு உடந்தையாகி 23-4-94 அன்று பஞ்சாயத்து கூட்டி கணேசனை குற்றவாளியாக்கி கையை கட்டி நிற்கவைத்தனர். புளியமாரால் 24 அடி கொடுக்க உத்தரவிட்டு தண்டனையை நிறைவேற்றினார்கள். இதைக் கண்டு அழுது புலம்பிய கணேசனின் தாய் மற்றும் தங்கை விமலாவையும் அடித்து இழுத்துவந்து பஞ்சாயத்தில் நிறுத்தினர். இத்தாக்குதலில் விமலா, ஆடைகள் கிழிக்கப்பட்டு அவமானப்படுத்தப் பட்டுள்ளார்.

இதனால் விரக்தி உற்ற கணேசனும் அவரது உறவினர் 10 குடும்பத்தினரும் சி.பி.எம்-விருந்து விலகி அ.தி.மு.க.-வில் சேர்ந்தனர். இவர்களில் அம்பிகாபதி என்பவர் 20 ஆண்டு காலமாக அனுபவித்து வந்த திடலில் இருந்த மரத்தை வெட்டி, சூறையாடி 'மார்க்சிஸ்டு'கள் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தினர். அக்குடும்பத்தினரை திட்டி அவமானப்படுத்தியும் உள்ளனர்.

மேலும் இதே ஊரில் சி.பி.எம்-ஐச் சேர்ந்த வேணுகோபால் என்பவரின் மகன், அ.தி.மு.க.-வில் சேர்ந்தார் என்பதற்காக அவரது டீக்கடைக்கு யாரும் செல்லக்கூடாது என மூன்று ஊரைக் கூட்டி கட்டுப்பாடு விதித்துள்ளனர், 'மார்க்சிஸ்டு' கட்சியினர்.

இதுவல்லாமல் தென்கரை ஈசனூர் கிராமத்தில் தனது நண்பர் திருமணத்திற்கு சென்ற பாலு என்பவரை வம்பிழுத்து தாக்கியுள்ளனர். சி.பி.எம் கிளைச் செயலாளர் சண்முகவேலும் வேறு சிலரும் சேர்ந்து குடித்துவிட்டு நீசத்தனமாகப் பேசி தாக்கியதற்கு பாலு, ஒரு ''புதிய ஜனநாயக'' வாசகர் - ஆதரவாளர் என்பதே காரணமாகும். பாலுவுக்கு ஆதரவாகப் பேசிய தோழர் பக்கிரிசாமியை அவரது வீட்டில் 25 அடியாட்கள் ஆயுதங்களுடன் இருப்பதாகவும் வந்து கைது செய்யும்படியும் கீழையூர் போலீஸ் நிலையத்தில் பொய் புகார் செய்து போலீசில் மாட்டிவிட சதி செய்தார்கள்.

'மார்க்சிஸ்டு'களின் கீழ்த்தரமான செயல்களால் பாதிக்கப்படுவோர் மாற்றாக பிற ஓட்டுக்கட்சிகளில் அணிதிரள்வதால் பிரச்சினை தீராது என்பதை உணர வேண்டும். போலி கம்யூனிஸ்டுகளுக்கு சரியான சூடுபோட புரட்சியாளர்கள் - புரட்சிகர அமைப்புகளாலேயே முடியும்.

**— தகவல் :. இருட்டு, தஞ்சை**

## நர்மதா ஆலைத்தொழிலாளர்கள் போராட்டம்



கரூர் நர்மதா மில் தொழிலாளர்கள் சம்பள உயர்வு, மற்றும் பஞ்சப்படி உட்பட 19 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி கடந்த இரு மாதங்களுக்கு மேலாக போராடி வருகின்றனர். தொடக்கத்தில் 2 சட்டங்களை மட்டுமே கொண்டிருந்த இந்த ஆலை, தற்போது 28 சட்டங்களைக் கொண்டு 5, 6 வருடங்களுக்குள் பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கு காரணமாக உழைத்த தொழிலாளர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுப்பதோடு எவ்வித தொழிலாளர் நலச் சலுகைகளையும் தராமல் இழுத்தடித்து வந்தது நிர்வாகம். இதற்கெதிராக சரியான போராட்டத்தை முன்னெடுக்காமல் இருந்த சி.ஐ.டி.யு., ஏ.டி.பி தொழிற்சங்கத்தைப் புறக்கணித்து தொழிலாளர்கள் தாமாக ஏ.ஐ.டி.யு.சி. சங்கத்தை உருவாக்கி 19 அம்ச கோரிக்கைகளை வைத்து போராடத் தொடங்கினர். ஆனாலும் போலித் தலைமைகளின் நீர்த்துப்போன உண்ணாவிரதம் போன்ற போராட்ட முறைகளால் பிரச்சினை தொடர்ந்து வருகிறது. அதிலும் சி.ஐ.டி.யு. ஏ.டி.பி. தொழிற்சங்கத் தலைமைகள் நிர்வாகத்துடன் சமரசம் செய்து கொள்ளவே முனைந்தன. மற்ற தொழிளார்கள் உறுதியுடன் போராடவே மீண்டும் வந்து போராட்டத்தில் இணைந்து கொண்டனர். ஏ.ஐ.டி.யு.சி. சங்கமும் போலிக் கம்யூனிஸ்டுகளின் தலைமையைக் கொண்டதால் பிற துரோக தொழிற்சங்கங்களை அம்பலப்படுத்தி போராட்டத்தை சரியாக முன்னெடுக்க முடியவதில்லை. எனவே தொழிலாளர்கள் அனைத்து துரோக தொழிற்சங்கத் தலைமைகளையும் புறக்கணித்துவிட்டு புரட்சிகர தொழிற்சங்கத் தலைமையின் கீழ் புதிய வடிவிலான போராட்டங்களை முன்னெடுக்கும் போதே விடிவு காண முடியும்.

**— தகவல், பு.மா.இ.மு., கரூர்**



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

15-16

15 ஜூன் - 15 ஜூலை '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

முகப்போவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

## சேஷன் அதிகார குறைப்பு: விசுவாச தடுமாற்றம், சுருதியில் பேதம்

தேர்தல் சீர்திருத்தம் என்கிற பெயரில் அரசியல் நிர்ணயச் சட்டத்துக்கு 82 -வது திருத்தம் மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத் திருத்தம் ஆகிய இரு மசோதாக்களை கொண்டு வந்து நிறைவேற்றுவதில் ஆளும் காங்கிரசுக் கட்சி காட்டிய அவசரமும் தீவிரமும் நாட்டின் 'ஜனநாயக அரசியல்' அமைப்பு முறையை வலுப்படுத்துவதில் அதற்குரிய அக்கறையினால் அல்ல. தனது கட்சி நலன்களைக் காப்பதற்கான அவசியம் கருதியே அவ்வாறு செய்துள்ளது. ஓர் அரசியல் நிர்ணயச் சட்டத் திருத்தம் நிறைவேற நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலுமே மூன்றில் இரண்டு பங்கு பலம் தேவை. அந்த அளவு பலம் ஆளும் காங்கிரசுக் கட்சிக்குக் கிடையாது. இருந்த போதும் அந்த இரண்டு மசோதாக்களைக் கொண்டு வந்து நிறைவேற்றும் அவசர முயற்சியில் அது இறங்கியது.

தேர்தல் சீர்திருத்தம் என்று சொல்லப்பட்ட இந்த முயற்சியின் அடிப்படையே, சமீப காலம் வரை காங்கிரசின் எடுபிடி அமைப்பாக இருந்த தலைமைத் தேர்தல் கமிசனை மீண்டும் தனக்கு விசுவாசமானதாக மாற்றுவதற்கானதுதான்; உண்மையில் காங்கிரசின் விசுவாசி என்கிற முறையில் தான் அந்தப் பதவிக்கு சேஷன் நியமிக்கப்பட்டார். 1990 -இல் பதவியில் இருந்த சந்திரசேகர் தலைமையிலான சிறுபான்மை அரசுக்கு ஆதரவளித்ததற்கு ஈடாக காங்கிரசு பெற்ற முறைகேடான நியமனம் தான் சேஷன் பெற்றது. அவரும் அதற்கு விசுவாசமாக நடந்து கொண்டு 1991 பொதுத் தேர்தல்களில் காங்கிரசுக்குச் சாதகமாக நடந்து கொண்டார். அவரது ''வானளாவிய'' அதிகாரத் தொல்லைக்கு இலக்கான தேசிய முன்னணி - இடது சாரி கூட்டணிக் கட்சிகள், சேஷனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தன. அதை பாரதீய ஜனதாவும், காங்கிரசும், அ.தி.மு.க.வும் எதிர்த்தன; ராஜீவ் காந்தி சிபாரிசினால் நியமனம் பெற்றவரை நீக்கக் கூடாது என்பதே அன்றைய அவர்களது வாதம். இதிலிருந்தே சேஷனின் பூர்வீகம் புரியும்.

அதே சமயம் சேஷன் பாரதீய ஜனதாவுக்கும் சாதகமாக நடந்து கொண்டு வந்தார். அயோத்தி ரத யாத்திரையில் அக்கட்சி தனது தேர்தல் சின்னத்தைப் பயன்படுத்தியது; இதோடு பகிரங்கமாகவே மதவெறியைத் தூண்டி தேர்தல் பிரச்சாரம் செய்தது. இதன் காரணமாக அக்கட்சியின் அங்கீகாரத்தை அவராகவே ரத்து செய்திருக்க வேண்டும். ஆனால் அப்படிக் கோரியதையும் நிராகரித்தார். உண்மை என்ன? இந்த நாட்டின் பார்ப்பன பனியா நலன்களைக் காப்பதற்கான இரண்டு பெரிய கட்சிகள் தாம் காங்கிரசும் பாரதீய ஜனதாவும். அவற்றிற்கு நல்லாசியும் உபதேசங்களும் வழங்கி வழி காட்டுவது தான் சங்கரமடம். அதன் பிரதிநிதிகளாக அரசு அமைப்பில் இருந்து இயங்கும் முக்கிய அதிகாரிகளில் ஒருவர் சேஷன். இதைப் பறை சாற்றும் வகையில் சேஷனும் நடந்து கொண்டுள்ளார். இந்த வகையில் நடுத்தர - மேட்டுக்குடி பார்ப்பனர்கள் மற்றும் அவர்களது பத்திரிக்கைகளின் ஒரு மனதான ஆதரவைப் பெற்று போற்றப்படுகிறார். சென்னை ''அக்கிரகாரங்க''ளின் சுவர்களில் ''பாலக்காடு பிராமணச் சிங்கம் சேஷன் வாழ்க!'' என்று தமிழ் நாடு பிராமண சங்கம் பெரும் அளவில் சுவரெழுத்து இயக்கமே நடத்தியுள்ளது.

பார்ப்பன - பனியா ஆளும் வர்க்கங்களும் அதன் அரசியல் பிரதிநிதிகளும் தவிர்க்க முடியாத தேவையாக கிரிமினல்மயமான அரசியலில் தஞ்சம் புகுந்துள்ளன. இதனால் பார்ப்பன - பனியா நடுத்தர அறிவு ஜீவி வர்க்கப் பிரிவினர் கணிசமான அளவு அதிருப்தியுற்றிருக்கின்றனர். இதற்கு முந்தைய அரசியல் தேர்தல் முறைகேடுகள் இப்பிரிவினருக்கு ஏற்புடையதாகவே இருந்தன. ஆனால் கிரிமினல்மயமான அரசியலில் வேறு பிற சாதித் தலைவர்கள் முன்னுக்கு வருவதை இவர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. பார்ப்பன - பாசிச ஜெயலலிதா அரசுக்கு எதிராக தமிழக பார்ப்பன நடுத்தர - அறிவு ஜீவிப் பிரிவினர் காணும் குறைபாடே இதுதான். ஆகவே, தேர்தல் முறைகேடுகளுக்கு எதிராக முக்கியமான நடவடிக்கைகள் எடுக்காவிட்டாலும் (தமிழக இடைத்தேர்தல்களே இதற்குச் சான்று) சேஷன் பெருங்கூச்சல் போடுவது அப்பிரிவினரிடையே பரவலான ரசிகர்களை உருவாக்கி இருக்கிறது. சேஷன் நேர்மை தவறாத, நடுநிலை வழுவாத அதிகாரி என்பதாகவும், தேர்தல் கமிசன் சுதந்திரான அமைப்பு என்பதாகவும் அவர்கள் பிரச்சாரம் செய்கின்றனர்.

ஆனால் சேஷன் அடிப்படையில் காங்கிரசு, பாரதீய ஜனதா, அ.தி.மு.க., சிவசேனா போன்ற கட்சிகளுக்கு பாதகமாக இல்லாத அதே சமயம், தனது ''வானளாவிய'' அதிகாரத்தைப் பயன்படுத்தி, நாடாளுமன்ற ஜனநாயகம், தேர்தல் முறைகளின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையைத் தடுத்து மீண்டும் பிரமையூட்டும் வகையிலான சில நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார். அவற்றில் சில தமது உடனடி, குறுகிய நலன்களுக்கு இடையூறாகி விடுவதால் காங்கிரசு, அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் சேஷன் மீது வெறுப்புற்றிருக்கின்றன என்பது உண்மைதான். தேர்தல்களுக்கு கால அட்டவணை போடுவது, அடிக்கடி தள்ளி வைப்பது, தேர்தல் அதிகாரிகளை நியமிப்பது - அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது, மத்திய - மாநில போலீசை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துவது, அரசு வாகனங்களை மந்திரிகள் பயன்படுத்துவது, தேர்தல் கால அரசு சலுகைகள், போலிக்

படிப்பகம்

www.padippakam.com

(தலையங்கம் தொடர்ச்சி)

குடியிருப்பு சான்றிதழ்கள் கொடுத்து மந்திரிகள் உட்பட சிலர் எம்.பிக்கள் ஆகியிருப்பது, வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது - இப்படிப் பலவற்றில் சேஷனுடைய நடவடிக்கைகள் காங்கிரசுக்குப் பிரச்சினையாகி விடவே, அவரது அதிகாரத்தைக் குறைப்பதற்காக சில மாதங்களுக்கு முன்பு மூன்று உறுப்பினர் கமிசன் அவசரச் சட்டம் போட்டு அமுலாக்கினர். காங்கிரசின் விசுவாசிகள் இருவரை கூடுதல் கமிசனர்களாகவும் நியமித்தனர். ஆனால் பார்ப்பனத் தலைவர்கள், பத்திரிக்கைகளின் ஆதரவைப் பெற்ற சேஷன் அதை மதிக்கவே இல்லை. உச்ச நீதிமன்றத்துக்குப் போய் அதைச் செல்லாததாக்கினார். இதனால் அவசரச் சட்டத்துக்கு சட்ட அங்கீகாரம் கொடுப்பதற்காகக் கொண்டு வந்த இரு மசோதாக்களை விலக்கிக் கொள்ளும்படி காங்கிரசு நிர்பந்திக்கப்பட்டது.

அவற்றுக்குப் பதிலாக காங்கிரசு கொண்டுவந்த மசோதாக்களுக்கு எதிராக ஒரு அரசியல் கட்சி வேட்பாளரைப் போல எதிர்க் கட்சியினரிடமும் சேஷன் ஆதரவு கோரினார். அதற்கு முதலில் ஒப்புதல் தெரிவித்த சி.பி.எம் மற்றும் அ.தி.மு.க. கட்சிகள் பிறகு திடீர் ''பல்டி'' அடித்து விட்டன. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து கமிசனர்களை நியமிக்க வேண்டும் என்று சி.பி.எம்.மும், நாடாளுமன்ற அவைகளின் தலைவர்களையும் எதிர்க் கட்சித் தலைவரையும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று ஜனதா தளமும் நிபந்தனை விதித்து .மசோதாக்களை ஆதரிப்பதாக முடிவு செய்தன. ஆனால் குறைந்த உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும், தலைமைத் தேர்தல் கமிசனருக்கே உயர் அதிகாரம் இருக்க வேண்டும் என்று கூறி போலிக் கம்யூனிஸ்டு கட்சி (சி.பி.ஐ) எதிர்த்ததன் காரணமாக மாநிலங்களவையில் தோல்வி உறுதியாக விட்ட நிலையில் மசோதாக்களை நிறுத்திக் கொண்டு இரண்டாவது முறையாக தன் முயற்சியில் தோல்வி கண்டது, காங்கிரசு. ஆனால் மீண்டும் அவற்றை விரைவிலேயே கொண்டு வந்து எதிர் வரும் தேர்தல்களில் வெற்றியை உறுதி செய்து கொள்ளத் துடிக்கிறது. தேசிய முன்னணி - இடது சாரி கூட்டணிக் கட்சிகளின் நிபந்தனைகளை ஏற்று கமிசனர் நியமன முறையில் மாற்றங்கள் வந்தாலும் அதனால் அடிப்படையில் தேர்தல்கள் ஜனநாயகமானவையாக ஆகிவிட மாட்டா என்பது தான் உண்மை. ஏனென்றால் பணபலம், ஆள் பலம், சாதி சமூக - மத பலத்தைக் கொண்டு கிரிமினல் கும்பல்கள், போலீசை வைத்து அரசியல் கட்சிகள் நடத்தும் அராஜகமே இறுதியில் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதாக உள்ளது. ●

# கிரிமினல் அரசியலில் ஜெயா கும்பல் சாதனை

## அரசியல் கொலைகளும் தாக்குதல்களும் அரசியல் வாதிகளின் சமூக விரோத செயல்களும் தமிழகத்தில் அதிகரித்துள்ளன.

மாஃபியா - கிரிமினல் கும்பல்களுக்கிடையிலான மோதல்கள் (கேங் வார்), பம்பாய், கல்கத்தா, டில்லியைப் போன்று சென்னையிலும் அதிகரித்து விட்டன. பம்பாய் கிரிமினல் - மாஃபியா உலகத்தின் அளவை எட்டிப் பிடிக்க நாலு கால் பாய்ச்சலில் முன்னேறி வருகிறது, சென்னை கிரிமினல் - மாஃபியா உலகம். துபாயிலிருந்து பம்பாய் கிரிமினல் - மாஃபியா உலகத்தை இயக்குகிற தாவூத் இப்ராஹிம்மைப் போல, சிறைக்குள்ளிருந்து சென்னை நகர கிரிமினல் - மாஃபியா உலகத்தை அயோத்தி குப்பம் வீரமணி, பாக்சர் வடிவேலு முதலானவர்கள் இயக்கிக் கொண்டுள்ளனர். இவர்கள் அரசியல் வாதிகள். போலீசு அதிகாரிகள், முதலாளிகள் - தொழிலதிபர்களுடன் ஏன் சர்வ தேச மாஃபியா கும்பல்களுடன் கூட வலைப்பின்னலையும் தொழில் முறை கூட்டையும் வைத்துக் கொண்டு அனைத்து துறைகளிலும் நுழைந்து செல்வாக்கும் செலுத்துகிறார்கள். இதே தன்மை கொண்ட கிரிமினல் கும்பல்கள் பல்வேறு அளவுகளில் - மட்டங்களில் சிறு சந்தை நகரங்கள் வரை விரவிக் கிடப்பதைப் பார்க்கிறோம்.

அரசியல்வாதிகள், அதிகாரிகள், தொழிலதிபர்கள், முதலாளிகள், பண்ணையார்கள் இக்கிரிமினல் கும்பல்களை கூலிக்கு அமர்த்தி நிழல்யுத்தம் நடத்துகிற போக்கு ஒருபுறம் இருந்தாலும் மறுபுறம் கிரிமினல் கும்பல் தலைவர்களே மேற்படி நபர்களாகி வருகிற போக்கு அதிகரிப்பதால் நிஜ யுத்தங்களும் அடிக்கடி நிகழ்கின்றன. குறிப்பாக அரசியல், கிரிமினல் மயமாகி அரசியல்வாதிகள் நிழல் - நிஜ யுத்தங்களால் மோதிக் கொள்வது அடிக்கடி நிகழ்கிறது. வடக்கில் செல்வாக்கு செலுத்திய கிரிமினல் அரசியல் தமிழகத்திற்குப் பரவி வெகுகாலமாகி விட்டது என்றாலும் - வேர்விட்டு, கிளை விட்டு, மரமாகி நிற்கிறது என்றாலும் - அண்மைக்காலமாக மேல்நிலைக்கு வந்துள்ளது. அதாவது வளர்ச்சியில் புதிய பரிமாணத்தைத் தொட்டு வருகிறது. வட மாநிலங்களில் அரசியல்வாதிகளும், நில - பண முதலைகளும் தங்களுக்கென்று தனியான ஒரு கிரிமினல் கும்பலை ஒரு படையை வைத்துக் கொண்டு, மோதிக் கொண்டே பிழைப்பு நடத்துகிறார்கள். தமிழக அரசியல்வாதிகள், நில - பண முதலைகள் அத்தகைய நிலையை விரைவில் எட்டிப்பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

லஞ்சப் பணம் கொள்ளை போனதாகப் புலம்பும் ஐ.ஏ.எஸ். அதிகாரி பாண்டா.



தமிழகத்தில் நடக்கும் கொலை, கொள்ளை, தாக்குதல் முதல் தேர்தல் தில்லுமுல்லுகள் - மோதல்கள் வரை அனைத்திலும் ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் தமது கிரிமினல் முத்திரையைப் பதிக்கிறார்கள். நாளிதழ்களில் வரும் கொலை, கொள்ளை, தாக்குதல், தில்லுமுல்லுகள் முதலான கிரிமினல் செய்திகளில் கணிசமானவை அரசியல்வாதிகள் தொடர்புடையவையாக உள்ளன. இது போன்ற எந்நிகழ்வையும் சாதாரண கிரிமினல்கள் தனிப்பட்ட சுயநலத்திற்காக - தன்னிச்சையாக செய்ததாக குறைத்து மதிப்பிட்டு விட முடியாத அளவிற்கு அதில் உள்ள ரகசியம், அரசியல் பின்னணியை அவதானிக்க வேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளார்கள். அரசியல் கொலைகளும் தாக்குதல்களும் அரசியல் வாதிகளின் சமூகவிரோத செயல்களும் அதிகரித்துள்ளதை கடந்த மே மாதத்திலிருந்து நடந்த சில சம்பவங்களே நிரூபிக்கின்றன.

வை.கோ. அணியைச் சேர்ந்த ஏழுமலையை தொழில் முறை விரோதத்தோடு டீக்காரம் என்ற கிரிமினல் கும்பல் தலைவன் (அமைச்சர் மதுசூதனனின் வலதுகரம்) கொன்றதற்கான ஆதாரங்



படிப்பகம்

www.padippakam.com

கள் வெளிவந்தும் போலீசு உண்மைக ளோடு வழக்கையும் மூட முயற்சித்து வருகிறது. இக்கொலை தொடர்பாகவே தொடர்ந்து பல தாக்குதல்களும் கொலை களும் நிகழ்ந்துள்ளன.

தமிழக அரசின் வேளாண்மைத் துறை செயலாளர் பாண்டா, வேளாண் மைத் துறை அமைச்சர் கு.ப. கிருஷ்ணன், செங்கோட்டையன், சசிகலா - நடராஜன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து விவசாயத் திற்கு தேவையான ''டிராக்டர்'' மற்றும் உரம் வாங்கியதில் பல லட்சங்களை சுருட்ட பேரம் பேசியுள்ளனர். இத்தொ கையில் பாதியை பிறருக்குத் தெரியாம லேயே பாண்டா மட்டும் சுருட்டி விட் டார். அத்தொகையை அபகரித்துவர மேற்படி நபர்களால் அனுப்பப்பட்ட கூலி யாட்கள்தான் பாண்டாவிடம் வெற்றுத் தாளில் கையெழுத்தையும் பணம், நகைக ளையும் மிரட்டி வாங்கிச் சென்றுள்ளனர். உண்மைகள் மேலும் வெளிவராத வண் ணம் மேற்படி நபர்களுக்குள் சமரசம் செய்வித்து விசயத்தையே அமுக்கி விட் டார், ஜெயலலிதா.

சென்னை - ஆண்டர்சன் பேட்டை யில் தனது கம்பெனிக்கு அருகே குடியி ருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை காலி செய்து விட்டு புறம்போக்கு நிலத்தை கைப்பற்ற முயன்ற ஜி.ஜி. கெமிக்கல்ஸ் முதலாளிக்கு பக்கபலமாக செயல்பட் டார் முன்னாள் அ.தி.மு.க., எம்.பி. ஜெகந்நாதன். இதற்கு எதிராக தாழ்த்தப் பட்ட மக்களுக்கு ஆதரவாக அம்பேத் கார் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த மூர்த்தி என்பவர் செயல்பட்ட தால் இவரது வீட்டை தரைமட்டமாக்கி விட்டனர். ஜெகந்நாதன் ஆட்களால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் சிலரது குடும்பங் கள், ஜூன் 3-ந் தேதி மீண்டும் தங்கள் வீடு திரும்பிய போது ஜெகந்நாதனும், அவ ரது உறவினர் ஜெகதீசனும் ஏ.கே. 47 துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டு பலரை படுகாயப்படுத்தினார்கள்.

செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத் துணைத் தலைவர் பூவை. ஞானம், சேகர் என்ற பினாமி மூலம் லாரிகளில் பெட் ரோல் திருடி விற்கும் தொழிலில் லட்சக்க ணக்கில் சம்பாரித்து வந்தவர் அண்மை யில் கைது செய்யப்பட்டார். இது கூட போலீசு அதிகாரிகளில் ஒரு பிரிவினரை பகைத்துக் கொண்டதால் நிகழ்ந்ததுதான். பூந்தமல்லி, நெற்குன்றம், காஞ்சிபுரம் முதலிய பல பகுதிகளில் தனி திறந்த வெளி கூடாரம் அமைத்து பெட்ரோல் லாரிகளிலிருந்து பெட்ரோல் திருடி விட்டு அந்த அளவிற்கு மண்ணெண் ணையைக் கலந்து விடுகிற 'தொழில்' நடத்தி வருகிறார், ஞானம். மண்ணெண் ணையை மேலேற்றுகிற மோட்டாருக்கு ரிய மின்சாரத்தையும் தெரு மின்கம்பிக ளில் கொக்கி போட்டு திருடிக் கொண் டும், அரசு மண்ணெண்ணையை 'சிவில் சப்ளை' அதிகாரிகளை ஊழல்படுத்தி வாங்கிக் கொண்டும் பகிரங்கமாகவே போலீசு உடந்தையோடு 'தொழில்' நடத் தியுள்ளார். தற்போது கூட இவரது தொழில் பூந்தமல்லி பகுதியில் மட்டும் தான் முடக்கப்பட்டுள்ளது.

வடசென்னை மாவட்ட இளைஞர் காங்கிரசு தலைவர் பாலகிருஷ்ணனும் அ.தி.மு.க. 54-வது வட்ட பொறுப்பாளர் மதனும் கூட்டு சேர்ந்து சென்னையில் இருந்து சந்தனமரக் கடத்தல் செய்து வந்து பின் தொழில் முறை விரோதிகளா னார்கள். மதன் 450 கிலோ சந்தனக் கட்டை கடத்திய போது பல்லாவரம் போலீசால் கைது செய்யப்பட்டான். பால கிருஷ்ணனும் அவரது ஆட்களும்தான் போலீசிற்கு இத்தகவலை கொடுத்ததாகத் தெரிந்து வீடுபுகுந்து தாக்கி பாலகிருஷ் ணனை மதன் கோஷ்டியினர் கொன்று போட்டனர்.



அ.தி.மு.க. ரவுடியைக் கொன்றவர்கள் நீதிமன்றக் காவலில் பாதுகாப்பாக

காங்கேயம், கின்னத்துக்கடவைச் சேர்ந்த உழவர் உழைப்பாளர் கட்சி எம். எல்.ஏ. பழனிச்சாமி கோஷ்டிக்கும் ருத்தி ரவதியைச் சேர்ந்த பெரியசாமி கவுண்டர் கோஷ்டிக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நடக்கும். ஒரு வழக்கு தொடர்பாக இரு கோஷ்டியினரையும் ஆர்.டி.ஓ. முன்னிலையில் கையெழுத்து போட உத்தரவிட்டிருந்தனர். ஆர்.டி.ஓ -வை சந்திக்க காத்திருந்த பெரியசாமி கோஷ்டியினர் மீது பழனிச்சாமியின் கும் பல் தாக்குதல் நடத்தி ஒருவரை கொன் றது; பலரை படுகாயப்படுத்திவிட்டு வாக னங்களில் தப்பி தலைமறைவானது. எம். எல்.ஏ. மற்றும் இதில் சம்பந்தபட்டவர் கள் மீது போலீசு கண்துடைப்புக்காக வழக்கு பதிவு செய்து பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டது.

பெரம்பலூர் எம்.எல்.ஏ. பூவை செழியனுக்கும் நகர அ.தி.மு.க. செயலா ளர் செல்வராஜுக்கும் இடையே இருந்து வந்த கோஷ்டித்தகராறு மோதலாகவும் வெடித்தது. செல்வராஜ் கோஷ்டியைச் சேர்ந்த பொன். கலியபெருமாள் கடையை எம்.எல்.ஏ. ஆட்கள் அடித்து நொறுக்கி சிலரை படுகாயப்படுத்தவும் செய்தனர். இதற்கு பதில் தாக்குதலாக செல்வராஜ் கும்பல் கோவை செழிய னின் வீட்டில் புகுந்து பொருட்களையும் ஆட்களையும் நொறுக்கியது. மேலும் எம்.எல்.ஏ -வைக் கைது செய்யக் கோரி இக்கோஷ்டி பஸ் மறியல் செய்ததோடு பகுதியில் உள்ள கடைகளை எல்லாம் மூடக்கோரி அராஜகம் செய்தது.

மயிலாப்பூர், பெருந்துறை இடைத் தேர்தலில் சேஷன் போட்ட புதிய விதி கள் - கட்டுப்பாடுகள் எல்லாம் மீறப் பட்டு அனைத்திற்கும் மேலான கிரிமி னல் செயல்கள் நடந்தேறின. தேர்தல் பிரச்சாரத்தின் போதே கொடிகம்பம், தோரணம், சுவரெழுத்து, தேர்தல் பனிம னைக் கூடாரம் தொடர்பாக ஓட்டுக்கட்சி கள் ஆங்காங்கே மோதிக் கொண்டன. பெருந்துறையில் தி.மு.க., ம.தி.மு.க. கோஷ்டிகளுக்கிடையே வெட்டுக்குத்து நடந்தது. மயிலாப்பூரில் அ.தி.மு.க. வைச் சேர்ந்த ரவுடி இருதயம், தி.மு.க. வைச் சேர்ந்த ரவுடி பாரதி கோஷ்டியால் வெட்டிக் கொல்லப்பட்டான். இருதயத் தின் சித்தப்பா மகன் ராசுவை கொலை செய்த பாரதியை கொன்று பழிதீர்த்ததற் காக கைதாகி சிறையிலிருந்தான், இருத யம். ஜாமீனில் விடுவிக்கப்பட்டு ஜெயா வின் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக செயல்பட்டான். இவனைக் கொன்ற பாரதி கோஷ்டியினர் நீதிமன்றத்தில் சர ணடைந்து ஜாமீனில் வெளியேவர முயற் சித்து வருகின்றனர்.

இதுவல்லாமல் பிற அனைத்து வகை தேர்தல் தில்லுமுல்லுகளும் சர்வ கட்சி கிரிமினல் கும்பல்கள் மூலம் சேஷ னின் 'கண்களில் மண்ணை தூவிவிட்டு' எளிதாக நிகழ்த்தப்பட்டன.

வேட்பாளர்கள் புதிய தேர்தல் விதி முறைகளுக்குப் பயந்து கொண்டு குறை வாக பிரச்சாரச் செலவு செய்ததாகவும் செயல்பட்டதாகவும் எழுதி பத்திரிக்கை கள் சேஷனுக்குப் புகழாரம் சூட்டின. இது உண்மை இல்லை. குறைத்துக் கொண்ட விளம்பரத்திற்கும் கொடிக்கும் தோரணத் திற்கும் கட் அவுட்டிற்கும் உரிய பணத் தையும் சேர்த்து வாக்காளர்களுக்கு ஓட் டுப் போட லஞ்சமாக வாரி இறைத்தார் கள். வழக்கம் போலவே வாகனங்களில் வாக்காளர்களை அழைத்து வந்தார்கள்; கொடி மட்டும் இல்லை. தொகுதியிலும் வாக்கு பதிவு கூடங்களிலும் கட்சிக்காரர் களும், எம்.எல்.ஏ.க்களும், மந்திரிக ளும் சகஜமாக உலாவினார்கள்; கரை வேட்டி மட்டும் இல்லை. அடிதடி - மோதல்களும், கள்ள ஓட்டும், ஓட்டுப்



படிப்பகம்

www.padippakam.com

பெட்டி மாற்றங்களும் நடந்தன; பகிரங்கமாக்கப்படவில்லை; போலீசாலும் பத்திரிக்கைகாரர்களாலும் அமுக்கப்பட்டன.

இவற்றில் தனது கிரிமினல் கும்பல் பலத்தோடும் ஆட்சி - அதிகார பலத்தோடும் முன்னணியிலிருந்தது, ஜெயா கும்பல்தான். ஜெயாவின் தேவையறிந்து அவருக்கு வெற்றியைத் தேடித்தர போட்டிப் போட்டுக் கொண்டு ஊழியஞ்செய்து நற்பெயர் ஈட்ட முந்தின, எம்.எல்.ஏ., அமைச்சர் பட்டாளங்கள். கிழங்கட்டை எஸ்.டி.எஸ்., ஒற்றைக்காலில் ஜெயலலிதா - சசிகலா அமர்ந்திருந்த தேர்தல் பிரச்சாரவேனின் ஓரத்தில் தொங்கிக் கொண்டும் மற்ற நடுத்தர வயதுடைய கொழுத்த சகபாடிகள் வேன் பின்னாலேயே ஓடிக்கொண்டும் ஊழியஞ் செய்தார்கள். வாக்காளர்களுக்கு 50 ரூ, 150 ரூ. என்க் கொடுத்து பகிரங்கமாகவே வலம் வந்தனர். மதுசூதனன், எஸ்.டி.எஸ். தென்னவன், முத்துச்சாமி, லாரன்ஸ், ஆனந்தன், ரகுபதி, நடேசன் பால்ராஜ், செங்கோட்டையன், அரசு கொறடா ஜெயக்குமார், துணை சபாநாயகர் காந்திராஜன் முதல் எம்.எல்.ஏ -க்கள், வட்டங்கள் வரை பல பகுதியிலிருந்து 100, 200 என கும்பல் கும்பலாக திரட்டி வந்த கூலியாட்களால் கள்ள ஓட்டு போடப்பட்டது.

பெண்களுக்கு சம உரிமை வழங்குபவரல்லவா ஜெயலலிதா, கள்ள ஓட்டு போடுவதிலும் வழங்கினார். அமைச்சர்கள் இந்திரகுமாரி, வளர்மதி, எம்.எல்.ஏ -க்கள் சக்குபாய், கவிநிலவு தர்மராஜ், சுந்தராம்பாள் முதல் உள்ளூர் மகளிர் அணித் தலைவிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் மயிலாப்பூரிலும் பெருந்துறையிலும் கும்பல் கும்பலாக வந்து கள்ள ஓட்டுப் போட்டார்கள். பெண்கள் என்றால் சந்தேகம் வராது, எளிதில தப்பித்துக் கொள்ளலாம் என்ற சாதகத்தைக் கருதி இம்முறை கள்ள ஓட்டிற்குப் பெண்கள் கணிசமானோர் ஜெயா கும்பலால் இத்தொகுதிகளில் இறக்குமதி செய்யப்பட்டனர். ''இன்று ஓட்டுப் பதிவு'' என்று எதேச்சையாக, ஒரு பெண்மணி ஓட்டுப் போடுவதை படம் பிடித்து போட்டது தினமலர். பின்னர் அப்பெண்மணியும் கள்ள ஓட்டு போட வந்தவர் என அம்பலமாகி மாட்டிக் கொண்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

தேர்தல் அதிகாரிகளும், போலீசு அதிகாரிகளும் கும்பல் கும்பலாக கள்ள ஓட்டுப் போட வந்த அ.தி.மு.க.வினரைப் பார்த்துக் கொண்டு வாளா இருந்தனர். எதிர்க்கட்சியினர் பிடித்துக் கொடுத்தோ, மோதல் வந்தோ மாட்டிக் கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுபோல் காட்டிக் கொண்டு வாகனங்களில் ஏற்றி சென்று வேறு இடத்தில் விடுவித்துள்ளனர். தேர்தல் மேலதிகாரி குரோஷி, சந்திரசூடன், போலீசு அதிகாரி ராதாகிருஷ்ண ராஜா உட்பட அனைவரும் இவற்றிற்கு உடந்தையாக இருந்துள்ளனர். ஏன், சேஷனும் விசாரணை நடத்தி கள்ள ஓட்டுக்கான - தில்லுமுல்லுகளுக்கான ஆதாரங்கள் கிடைத்தும் சுயநலன் கருதி (நாடாளுமன்றத்தில் தனக்கு எதிரான தீர்மானத்தில் ஜெயா ஆதரவு வேண்டி) ஜெயாவுக்கு சாதகமாகத்தானே தீர்ப்பு வழங்கியுள்ளார்?!


கள்ள வோட்டு: காவல் துறையின் போலி விசாரணை நாடகம்

கிரிமினல் நடவடிக்கைகளில் தனக்கு நிகரில்லை என்பதை நிரூபித்து வருகிறார், ஜெயலலிதா. பத்திரிக்கைத் துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை, தேர்தல் கமிஷன் என அனைத்தையும் தனது கிரிமினல் தாக்குதலுக்கு இலக்காக்கியுள்ளார். தன்னை எதிர்ப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தனது கட்சி எம்.எல்.ஏ -க்களிலிருந்நது கவர்னர், பிரதமர், தேர்தல் கமிஷனர் என எந்த உயர் பதவியிலிருந்தாலும் தாக்குகிற தைரியம், தனது முதல்வர் பதவியால் மட்டும் ஜெயலலிதாவுக்கு கிடைத்ததல்ல; அதையும் தக்க வைப்பதற்கு கிரிமினல் வலைப்பின்னலோடும், கவர்ச்சி அரசியல் மூலதனத்துடனும் கட்டியமைக்கப்பட்டிருக்கும் அ.தி.மு.க. என்ற அமைப்பு கையிலிருக்கிற தைரியம் தான். எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னும் ஜானகி அணி பிரிந்து இணைந்ததற்குப் பின்னும் தொடங்கி இன்று வரை ஜெயலலிதா, அ.தி.மு.க.-வில் இத்தகைய கிரிமினல், கவர்ச்சி, பிழைப்புவாதிகளில் கூட ஒத்துவராதவர்களை, பக்தியோடு விசுவாச நாய்களாக இல்லாத வரையெல்லாம் கழித்துக் கட்டுவதாலும் ஓரங்கட்டுவதாலும் மேலும் சசிகலா - நடராஜனின் உதவியோடு எதிர்கட்சிகளை பிளவுறச் செய்ததாலும் கூடுதல் பலம், தைரியம் கிடைத்துள்ளது.

ஜெயா, ஆட்சியைப் பாதுகாக்க எதையும் செய்யத் தயங்காதது போல் அவரது அடிவருடிகள் தமது சமூக விரோத செயல்களைப் பாதுகாக்க எதையும் செய்ய தயங்குவதில்லை. இதைக் கண்டு கொள்ளாமல் விடுவதோடு மாட்டிக் கொண்டு அம்பலப்பட்டுப் போனால் பல வகையில் உதவி செய்து அவர்களை பாதுகாத்து தட்டிக் கொடுப்பதுதான் ஜெயலலிதா இவர்களுக்கு செய்யும் கைமாறு. மிகவும் பிரச்சினைக்குரியவற்றில் மட்டுமே கண்துடைப்பு நடவடிக்கை எடுக்கிறார். போலீசு நிலையக் கொலை, கற்பழிப்புகளில் இன்னும் பல கிரிமினல் செயல்களில் அம்பலமாகும் போலீசார் மீது என்ன நடவடிக்கை, என்ன அணுகுமுறை வைத்திருக்கிறாரோ அதையே தான் தனது அடிவருடிகளிடமும் கடைபிடிக்கிறார்.

கட்டுப்படாதவர்கள், வேண்டாதவர்கள் பதவிகளைப் பிடுங்கி தூக்கியெறிவதோடு அவர்கள் மீது கிரிமினல் மற்றும் போலீசு தாக்குதலை கட்டவிழ்த்து விடுவதால் (கஞ்சா கடத்துவதாக பொய் வழக்கு போட்டது போன்று) சில அடிவருடிகள் ஜெயாவால் ஓரங்கட்டுப்பட்டு, பாதிக்கப்பட்டு இருந்தாலும் மௌனமாக இருந்து மீண்டும் ஜெயாவின் நம்பிக்கையைப் பெறவே முயல்கிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் தமிழகத்தில் வளர்ந்து வரும் கிரிமினல் அரசியலில் இன்றைய முடிசூடா அரசியாக விளங்குகிறார் ஜெயலலிதா. அந்த அளவிற்கு சட்ட பூர்வ கிரிமினல்களோடும் சட்ட விரோத கிரிமினல்களோடும் ஜெயாவின் அடிவருடிகள் ஐக்கியமாகி ஜெயா பாதந்தாங்கி சேவை செய்கிறார்கள். இக்கும்பலின் கிரிமினல் செயல்கள் அத்தனையும் தமது ஊழல், கொள்ளை, சமூக விரோதத் தொழில்களைப் பாதுகாக்கவேயாகும். அரசியல் கிரிமினல் மயமாகி வருவதையும் சரி, மக்களை மலைப்பாம்பாக சுற்றியிருக்கும் ஜெயா கும்பலின் கிரிமினல் ஆட்சியையும் ஒழித்துக்கட்ட புரட்சிகர அரசியல் மற்றும் நடைமுறையாலேயே முடியும்.

● ராசு

தன்னை எதிர்ப்பவர்கள் யாராக இருந்தாலும் தாக்குகிற தைரியம், தனது முதல்வர் பதவியால் மட்டும் ஜெயலலிதாவுக்கு கிடைத்ததல்ல; அதையும் தக்க வைப்பதற்கு கிரிமினல் வலைப் பின்னலோடும், கவர்ச்சி அரசியல் மூலதனத்துடனும் கட்டியமைக்கப் பட்டிருக்கும் அ.தி.மு.க. என்ற அமைப்பு கையிலிருக்கிற தைரியம்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழரிடமிருந்து ஒரு கடிதம்

**விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும் எழுபதுகளின் ஆரம்பத்தில் முனைப்புடன் இயங்கிய தமிழ் இளைஞர் பேரவை போன்ற அமைப்புகளின் உந்து சக்திகளில் ஒருவரும், எழுத்தாளரும், வெளியீட்டாளருமான சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள் பாரீஸ் நகரில் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.**

மே மாதம் 1-ம் தேதி பிற்பகல் ஒரு மணியளவில் துப்பாக்கிகளுடன் அவரது வீட்டிற்குள் நுழைந்த இரண்டு தமிழர்கள் அவரது மனைவி, குழந்தையின் முன்னிலையில் சபாலிங்கத்தின் மீது பல துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தபின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசம் செய்து குடும்பத்தினரையும் எச்சரித்துத் தலைமறைவாகி விட்டனர்.

1970 -களில் விடுதலைக்காக போராட்டத்தில் இறங்கிய தமிழ் இளைஞர்களை பயங்கரவாதிகள் என்ற போர்வையில் சிறீலங்கா அரசு கைது செய்த வேளையில் சபாலிங்கம் பாலம் ஒன்றுக்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறையிலிடப்பட்டார். மாடிச் சிறையிலிருந்து தப்பியோடும் போது நாரியில் முறிவேற்பட்டு 5 வருடங்கள் சிறீலங்கா அரசின் தேடுதல் வேட்டைக்கு தலைமறைவாக வாழ்ந்த அவர், அதன்பின் பிரான்ஸ் வந்து சேர்ந்தார்.

புலம் பெயர்ந்து பாரிஸில் வாழ்ந்து வந்த சபாலிங்கம் மனித நேயம் பேணும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நேசிப்பவராகவும், ஈழத்து கலை இலக்கியங்களின் பதிப்பாளராகவும் இருந்து வந்தார். ASSEAY (ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம்) எனும் இடம் பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனராக இருந்து, சமகால கவிஞர்களான வ.ஐ.ச. ஜெயபாலன், சேரன், அருந்ததி, செல்வம், சோலைக்கிளி ஆகிய கவிஞர்களின் கவிதைத் தொகுதிகளையும், தாரகி அவர்களின் "Eluding Peace" ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பத்தி எழுத்துக்களையும் வெளியிட்டுள்ளார். மேலும் 'புத்தளம் முஸ்லீம் வரலாறு', இயக்க உட்படுகொலைகளைச் சித்தரிக்கும் 'புதியதோர் உலகம்', இலங்கையில் தடை செய்யப்பட்ட 1958' கலவரத்தைப் பற்றிய தாச்சிவித் தாச்சி அவர்களின் 'Emergency 58' மற்றும் 'யாழ்ப்பாண வைபவ மாலை' போன்ற நூல்கள் மீண்டும் வடிவம் பெற உழைத்திருக்கின்றார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரெஞ்சு மொழியில் வெளிக் கொணர்ந்ததுடன் புகலிடத்தில் தமிழர்களின் அரசியல் செயற்பாடுகளில் தன்னை முடிந்தவரை ஈடுபடுத்திக் கொண்டார்.

மாற்றுக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் துப்பாக்கிக் குண்டுகள் மூலம் அழித்தொழித்து வருகின்ற இயக்க பாரம்பரியத்தில் மற்றெல்லோரையும் விட முன்னணியில் இருந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளே சபாலிங்கம் அவர்களின் படுகொலக்குப் பொறுப்பானவர்கள் என்று நாம் கருதுகின்றோம். பாரீஸ் நகரில் இருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான லோரன்ஸ் திலகர், சபாலிங்கம் அவர்களின் படுகொலைக்கு தாங்கள் பொறுப்பல்ல என்று மறுத்திருந்த போதிலும் அதனை ஏற்றுக் கொள்வதில் எங்களுக்கு மிகுந்த சந்தேகம் உண்டு. அனுராதபுரம் சிங்கள மக்கள் படுகொலை, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் படுகொலை, கிழக்கு முஸ்லீம்களின் படுகொலை போன்ற பல சம்பவங்களுக்கு தாம் பொறுப்பாளிகளல்ல என்று அறிக்கை விட்டு, பின்னர் மெல்ல மெல்ல உண்மையை வெளிப்படுத்தல் என்பது விடுதலைப் புலிகளின் வரலாற்றில் உள்ளார்ந்து காணக்கிடக்கிறது.

மாற்றுக் கருத்துள்ளவர்களை அழித்தொழிப்பதை இலங்கையிலும், இந்தியாவிலும் மட்டுமே இதுவரை மேற்கொண்டிருந்தவர்கள் இன்று ஐரோப்பாவிலும் தமது படுகொலைகளை ஆரம்பித்திருப்பது சர்வதேச அரங்கில் விடுதலைப் போராட்டத்தின் நலன்களுக்கு மிகுந்த பாதகமாக அமையுமென்பது அனைவருக்கும் தெரிந்ததே.

விடுதலைப் போராட்ட நலன்களுக்கு மேலாக சொந்த இயக்க நலன்களை முதன்மைப்படுத்துவது, ஒட்டு மொத்தமாக தமிழ் பேசும் மக்களின் எல்லாவகையான சுதந்திரத்தையும் புதைகுழியில் தள்ளுவதாகும். இது மிகவும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது மட்டுமல்லாது வெறுக்கப்பட வேண்டியதுமாகும்.

விடுதலைப் போராட்டத்தையும், மானிட விழுமியங்களையும் நேசித்து இரண்டையும் இணைத்து இயங்கி வந்த ராஜினி திரணகம போன்ற புத்திஜீவிகளின் படுகொலையின் வரிசையிலேயே இன்று சபாலிங்கம் அவர்களின் படுகொலையும் நிகழ்ந்துள்ளது. ராஜினி, சபாலிங்கம் போன்றோர்கள் தனிமனிதர்களாக இயங்கி வந்த போதும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளுக்கும் சர்வதேச அளவில் கிடைத்து வந்த அங்கீகாரமே கொலையாளிகளை பீதியுறப் பண்ணியுள்ளது.

சபாலிங்கம்



தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ஆவணங்கள் பேணப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த சபாலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றை கூறும் 'யாழ்ப்பாண வைபவ மாலை' என்னும் நூலின் புதிய பதிப்பொன்றை வெளியிட்டிருந்தார். தமிழ் பேசும் மக்கள் தொடர்பான தொல்லியல் ஆவணங்களையும் வரலாற்று நூல்களையும் தொடர்ந்து வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். 70 -களிலிருந்து இன்று வரையான விடுதலைப் போராட்ட வரலாற்றை தகவல்களுடனும், வாக்குமூலங்களுடனும், புகைப்படங்களுடனும் ஆவணப்படுத்தும் பெரும் முயற்சியின் இறுதிக் கட்டத்தில் சபாலிங்கம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டமை பலத்த சந்தேகத்தினை எழுப்புகின்றது. கடந்த காலப் போராட்டத்தில் மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்து விடுமென கொலையாளிகள் அச்சமுற்றிருந்தனர்.

இத்தகைய படுகொலைக்கு எதிராக உலகமெங்கும் குரல் எழுப்பப்பட வேண்டுமென்பது மிகவும் குறைந்த பட்சத் தேவையாகும். எதிர்காலத்தில் இவ்வாறான படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்காக தீவிரமாக உழைப்பதே விடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவரதும் கடமையாக இருக்க வேண்டும்.

மாற்றுக் கருத்துக்களை துப்பாக்கிக் குண்டுகளால் அழித்து விடலாம் என்று நம்புபவர்கள் வரலாற்றுக் குருடர்கள் மட்டுமே ஆவர். சபாலிங்கம் அவர்களின் பணியை இன்னும் ஒருபடி மேலெடுத்து செல்ல உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

**—இவ் அராஜகத்துக்கெதிராகக் குரல் கொடுக்கும் புலம்பெயர்ந்த சஞ்சிகைகளும் மனித உரிமை அமைப்புக்களும்.**

**பின்குறிப்பு:** சபாலிங்கம் புலிகளால் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கனடா - டொரன்டோவில் கூட்டத்தை நடத்திய தேடகம் குழுவினரின் நூல்நிலையக் கட்டிடம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. சாதாரணமான சமூகப் பங்களிப்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக்கூட தடை செய்து, எதைச் சிந்திப்பது, எதைச் செய்வதென்பதை துப்பாக்கி முனையில் ஆணையிடவும் முயல்கிறார்கள், பாசிச புலிகள்.



படிப்பகம்

www.padippakam.com

# சர்க்கரை: கசப்பு!

**காங்கிரசு கும்பலின் தாராளமயக் கொள்கையும் ஆலை அதிபர்கள் - அரசியல்வாதிகள் - அதிகாரிகளின் கூட்டுக் கொள்ளையும் சர்க்கரையை இன்று ஆடம்பரப் பொருளாக்கி விட்டது.**

அத்தியாவசியப் பொருளான சர்க்கரை இன்று ஆடம்பரப் பொருளாகிவிட்டது. இதுவரை காணாத அளவுக்கு விலை உயர்ந்து, ஒரு கிலோ ரூ. 17-க்கும் அதிகமாக வெளிச்சந்தையில் விற்கப்படுகிறது. ரேஷன் கடைகளிலும் மலிவு விலை சர்க்கரை கிடைப்பதில்லை; அல்லது தட்டுப்பாடு நிலவுகிறது. குழந்தைகளுக்குப் பாலில்லையே என்று ஏழைத் தாய்மார்கள் வெந்நீரில் சர்க்கரை கலந்து புகட்டக்கூட முடியாமல், அதையும் தட்டிப்பறித்து மீண்டும் ஒரு விலையேற்றத் தாக்குதலை ஆளும் காங்கிரசு கும்பல் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

பருவமழை பொய்த்துப் போனதால், கரும்பு உற்பத்தி குறைந்துவிட்டதாலும் வங்கதேசம், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய அண்டைநாடுகளுக்கு சர்க்கரை கடத்தப்படுவதாலும் தட்டுப்பாடு ஏற்பட்டு விலையேற்றம் நிகழ்ந்துள்ளதாக அரசு விளக்கமளிக்கிறது. கரும்பு உற்பத்தியைப் பெருக்கவோ, கடத்தலையும் பதுக்கலையும் தடுக்கவோ வக்கற்ற அரசு, விலையேற்றத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, தும்பைவிட்டு வாலைப் பிடித்த கதையாக, இப்போது வெளிநாடுகளிலிருந்து அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்து தட்டுப்பாட்டை நீக்கப் போர்வதாக அறிவித்துள்ளது. இக்கோமாளித்தனமான நடவடிக்கையால், ''அந்நியச் செலாவணி விரயமாகி பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரிக்கும்; ராவ் அரசின் நிலைகுலைந்த நிர்வாகத்தையே இது நிரூபித்துக் காட்டுகிறது'' என்று முதலாளித்துவ பொருளாதாரவாதிகளே பரிகசிக்கின்றனர். ஒருபுறம் விலையேற்றத்தின் மூலம் சர்க்கரை ஆலை அதிபர்களின் பகற்கொள்ளைக்கு ஏற்பாடு செய்துள்ள காங்கிரசு கும்பல் மறுபுறம், சர்க்கரை இறக்குமதி பேரத்தின் மூலம் கோடிகோடியாய் கமிஷன் பெற்று கொள்ளையடித்துள்ளது.

### சர்க்கரை - சாராய அதிபர்களோடு மந்திரிகளின் கள்ளக்கூட்டு

1991-92-ம் ஆண்டில் 134 லட்சம் டன்னாக இருந்த சர்க்கரை உற்பத்தி, அடுத்த இரு ஆண்டுகளில் 96 லட்சம் டன்னாகக் குறைந்துவிட்டது. 1994-ம் ஆண்டுக்கான இலக்கு 115 லட்சம் டன் என தீர்மானிக்கப் பட்டிருந்தாலும், அது 95 லட்சம் டன்னைத் தாண்டாது என பொருளாதாரவாதிகள் மதிப்பிடுகின்றனர். ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கப்படும் லெவி சர்க்கரை தற்போதைய நிலையில் ஜூலை மாதம் வரையிலான விநியோகத்திற்கு மட்டுமே இருப்பாக உள்ளது. வெளிச்சந்தையிலும் கையிருப்பு குறைவாகவே உள்ளது.

இப்படி திடீரென உற்பத்தி குறைந்து தட்டுப்பாடு ஏற்படக் காரணம் என்ன? பருவமழையின்மையால் கரும்பு உற்பத்தி குறைந்துவிட்டதாக அரசு கூறுவது பிரச்சினையின் ஒரு பகுதிதான். ஏகாதிபத்தியங்களின், தரகுப் பெருமுதலாளிகளின் பகற்கொள்ளைக்காக அரசு மேற்கொண்டு வரும் தாராளமயக் கொள்கைதான் சர்க்கரை உற்பத்திக் குறைவுக்கு முக்கிய காரணமாகும். கடந்த ஆண்டில் மத்திய உணவு அமைச்சர் கல்பனாத்ராய் ''மொலாசஸ்'' எனப்படும் கருப்பஞ்சாறு விலைக் கட்டுப்பாடு சட்டத்தை ரத்து செய்தார். பழைய சட்டப்படி, கருப்பஞ்சாற்றிலிருந்து சர்க்கரை உற்பத்திக்கு ஒதுக்கியது போக, எஞ்சிய சாறுதான் சாராய உற்பத்திக்கு அனுப்பப்படும். இதனால் சாராய அதிபர்கள் பற்றாக்குறையை ஈடுகட்ட கள்ளச்சந்தையில் அதிக விலை கொடுத்து கருப்பஞ்சாற்றைப் பெற்று வந்தனர். சர்க்கரை உற்பத்திக்கு முன்னுரிமை தர வேண்டும் என்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட இச்சட்டத்தை உணவு அமைச்சர் ரத்து செய்ததும், கருப்பஞ்சாற்றை சாராய ஆலைகளுக்கு அதிக விலைக்கு விற்று சர்க்கரை ஆலை அதிபர்கள் கொள்ளை லாபமடித்தனர். சர்க்கரை உற்பத்திக்குப் பதிலாக சாராயத்துக்குத் தேவையான கண்டசாரி வெல்லம் - நாட்டு சர்க்கரையை உற்பத்தி செய்தனர். இதனால் சர்க்கரை உற்பத்தி குறைந்து தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கியது.

**சர்க்கரை மொத்த விலை**
(ஒரு கிலோ / ரூபாயில்)

| | | |
|---|---|---|
| '93 | செப்டம்பர் | 11.00 |
| | அக்டோபர் | 11.40 |
| | நவம்பர் | 12.00 |
| | டிசம்பர் | 12.60 |
| '94 | ஜனவரி | 12.95 |
| | பிப்ரவரி | 13.05 |
| | மார்ச் | 13.25 |
| | ஏப்ரல் | 14.00 |
| | மே | 16.50 |
| | ஜூன் | 18.00 |
| | ஜூலை | ??? |

சாராய உற்பத்திக்கு அவசியமான கருப்பஞ்சாற்றின் விலை 200% உயர்ந்ததும் சர்க்கரை ஆலை அதிபர்களுக்கு கொண்டாட்டமாகி விட்டது. புதிய சர்க்கரை ஆலை துவக்கவும், ஏற்கனவே உள்ள ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் உரிமம் கோரி உணவு அமைச்சர் கல்பனாத் ராயின் அலுவலகத்தில் அவர்கள் குவியத் தொடங்கினர். ஏனெனில் புதிதாக துவக்கப்படும் ஆலைகள் 9 ஆண்டுகளுக்கு லெவி சர்க்கரை தர வேண்டியதில்லை. கடந்த இரு மாதங்களில் மட்டும் இப்படி 84 ஆலைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. சர்க்கரை உற்பத்தியைப் பெருக்குவது, டங்கல் திட்டப்படி உலகச் சந்தையில் போட்டியிடுவது என்ற பெயரில் உரிமங்கள் தாராளமாக வழங்கப்பட்டன.

### ஆலை அதிபர்களின் விலையேற்றக் கொள்ளை

இந்நிலையில், சர்க்கரை தட்டுபாட்டைப் போக்க வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யலாம் என்று பிரதமர் அலுவலகம் பரிந்துரைத்தது. இம்முடிவைக் கண்டு சர்க்கரை ஆலை அதிபர்கள் அதிர்ச்சி அடைந்தனர். செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி விலையேற்றம் செய்து கொள்ளையடிக்கும் அவர்களது நோக்கத்திற்கு இது எதிராக இருந்தது. மேலும், அரசு நிறுவனங்கள் மூலமாக இறக்குமதி நடந்தால், தமக்கு ஆதாயமிருக்காது என்பதால் அவர்கள் உணவு அமைச்சர் கல்பனாத் ராயிடம் முறையிட்டுப் புலம்பினர். அவர்களது நலன்காக்க அவதாரம் எடுத்துள்ள ராய், வெளிநாட்டிலிருந்து சர்க்கரை இறக்குமதியே கூடாது என்று எகிறிக் குதித்தார். ''இந்திய உணவுக் கழகம் மூலமாக இறக்குமதி செய்யக்கூடாது; ஏற்கனவே அது முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக புகார்கள் உள்ளது. சர்வதேசச் சந்தையில் பேரம் நடத்தவும், இறக்குமதியை முறையாகக் கையாளவும் அதற்கு அனுபவம் கிடையாது'' என்று 6 லட்சம் டன் இறக்குமதிக்கான உத்தரவை ரத்து செய்தார்.

தற்போது சர்க்கரை ஆலை அதிபர்களிடம் 60 லட்சம் டன் இருப்பு உள்ளது. இந்நிலையில் வெளிநாடுகளிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்தால், செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி சர்க்கரை அதிபர்களால் கொள்ளையடிக்க வாய்ப்பில்லாமல் போய்விடும். இதற்காகவே ராய், அந்நிய இறக்குமதியை ரத்து செய்தார். சர்க்கரை ஆலை



படிப்பகம்

www.padippakam.com

அதிபர்கள் - பெருவியாபாரிக ளின் பதுக்கலை ஊக்குவித்தார். செயற்கைத் தட்டுப்பாடு பெரு கத் தொடங்கியது. சர்க்கரை விலை கிடுகிடுவென கிலோ ரூ. 17-க்கு உயர்ந்தது. இவ்விலை யேற்றக் கொள்ளையின் மூலம் மட்டும் சர்க்கரை ஆலை அதிபர் களும் வியாபாரிகளும் ரூ. 500 கோடிக்கும் மேலாக ஆதாயம டைந்துள்ளனர்.




இந்திய உணவுக் கழகம் (FCI) மூலமாக சர்க்கரை இறக்கு மதி செய்வதை கல்பனாத்ராய் ரத்து செய்ததும், அரசு வர்த்தகக் கழகம் (STC), தாது - உலோக வர்த்தகக் கழகம் (MMTC) மூல மாக இறக்குமதி செய்வதென உணவு, நிதி, வர்த்தக அமைச்சக அதிகாரிகள் தீர்மானித்தனர். இவ்வாறு இறக்குமதி செய்யப்ப டும் சர்க்கரைக்கு நிதி அமைச்ச கம் மானியம் அளித்தால்தான் அதை சற்றே குறைவான விலைக்கு விநியோகிக்க முடி யும். ஆனால் நிதி அமைச்ச கமோ பொருளாதார நெருக்கடி யைக் காரணம் காட்டி மானியம் அளிக்க மறுக்கிறது. 10 சதவீத சுங்கத்தீர்வை விதிப்பதாகவும் கூறியது. சர்க்கரையை அத்தியாவசியப் பொருளாகக் கருத முடியாது என்பதே நிதி அமைச்சகத்தின் கருத்தாக உள்ளது. இதனால் இறக்குமதி தாமதப்பட்டதோடு இறக்குமதியாகும் சர்க்கரையின் விலை யும் கிலோ ஒன்றுக்கு ரூ. 13-க்கும் மேலாக உள்ளது. இதோடு விநியோக செலவுகளைச் சேர்த்தால் ரூ. 15-க்குக் குறையாது என்றே அதிகாரிகள் மதிப்பி டுகின்றனர். இறக்குமதி செய்வதில் ஏற் பட்ட தாமதத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சுங்கத் தீர்வையற்ற பொது உரி மத்தின் கீழ் தனியார் முதலாளிகள் பலர் வெளிநாடுகளிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்து அதிக விலைக்கு விற்று கொள்ளை லாபமடித்துள்ளனர்.

### அமைச்சர் - அதிகாரிகள் லடாய்

இத்தனைக்கும் காரணமாக உணவு அமைச்சர் ராய் மீது குற்றச்சாட்டுகள் பெருகத் தொடங்கியதும், அவர் உண வுக் கழக அதிகாரிகள் மீது பழிசுமத்தி தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார். "சர்க்கரை தட்டுப்பாடு பற்றி அதிகாரி கள் எனக்குத் தெரிவிக்கவில்லை. எனது கவனத்துக்கு வராமலேயே முறைகே டாக இறக்குமதி செய்ய வெளிநாட்டு நிறு வனங்களுக்கு "டெண்டர்" அறிக்கை விடுத்தனர். அவர்கள் மீது அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டும்" என்கிறார். ஆனால் உணவுக் கழக அதிகாரிகளோ, பிரதமர் அலுவலகக் குறிப்பின் அடிப்ப டையில் செயல்பட்டதாகவும், நிதி, வர்த் தக அமைச்சகங்கள் பரிந்துரைத் துள்ளதாகவும், அமைச்சர் ராய் ஊரில் இல்லாததால் அவரிடம் கலந்தலோசிக்க இயலவில்லை என்றும் நழுவிக் கொள்கின்ற னர். உண்மை என்னவென்றால் பிரதமர் அலுவலகம் இறக்கும திக்குப் பரிந்துரைத்துள்ளதே தவிர, உணவுக் கழகத்தை "டெண்டர்" அறிக்கை விடுமாறு கோரவில்லை. பரிந்துரையைச் சாதகமாக்கிக் கொண்டு, உண வுக் கழக அதிகாரிகள் இறக்கு மதி பேரத்தில் கொள்ளையடிக்க முயற்சித்தனர். தனக்கு உரிய பங்கு கிடைக்காமல், அதிகார வர்க்கமே அனைத்தையும் சுருட் டிக் கொள்ளக் கிளம்பியதைக் கண்டு ஆத்திரமடைந்த ராய், விதிமுறைகளை மீறிவிட்டதாகக் கூறி இறக்குமதிக்கான உத்தி ரவை ரத்து செய்தார். அமைச்சர் ராய்க்கும் அதிகாரிகளுக்கும் இடையிலான லடாயின் பின் னணி இதுதான்.

### வெள்ளை யானைகளின் பகற் கொள்ளை

1993-ம் ஆண்டின் பொதுக்கணக்கு, தணிக்கை கமிட்டி அறிக்கையின்படி, இந் திய உணவுக் கழகம் சர்க்கரை இறக்குமதி பேரங்களை நடத்தக்கூடாது என்பதால், இப்போது அரசு வர்த்தகக் கழகம் (STC) மூலமாக இறக்குமதி செய்யப்படுகிறது. வழக்கம் போலவே, முறைகேடான பேரங்கள் மூலம் வெள்ளை யானை எனப்படும் அதிகார வர்க்கம் கோடிகோ டியாய் கொள்ளையடித்துள்ளது. அமெ ரிக்காவைச் சேர்ந்த "ஈ.டி.எப்.மான்" எனும் வர்த்தக நிறுவனத்திடம் ஒரு கிலோ ரூ. 13.75 பைசா வீதம் சர்க்க ரையை இறக்குமதி செய்ய அரசு வர்த்த கக் கழகம் தீர்மானித்துள்ளது. ஆனால் வேறு சில நிறுவனங்கள் ஒரு கிலோ ரூ. 13.25 பைசாவுக்கு கொடுக்க முன்வந்த போதிலும், அவர்களுக்கு ஒப்பந்த உரிமை தரப்படவில்லை. ஒரு கிலோ வுக்கு 0.50 பைசா எனில் ஒரு டன்னுக்கு ரூ. 500 வீதம் கொள்ளை நடந்துள்ளது. தற்போது குறைந்தபட்சம் 8 லட்சம் டன் சர்க்கரையை இறக்குமதி செய்ய அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி 40 கோடி ரூபாயை அதிகார வர்க்கமும், அமெரிக்க வர்த்தக நிறுவனமும் விழுங்கி ஏப்பம் விட்டுள்ளது.

இத்தனைக்குப் பிறகும் சர்க்கரை தட்டுப்பாடு நீங்கிவிடப் போவதில்லை. ஏனெனில் ஈ.டி.எப்.மான் நிறுவனத்தி டம் 8 லட்சம் டன் அளவுக்கு இருப்பு இல்லை. தென் அமெரிக்க நாடுகளிலி ருந்து இந்தியப் பெருமுதலாளிகள்

## தட்டுப்பாட்டின் போது தாராள ஏற்றுமதி

கடந்த ஆண்டில் சர்க்கரை உற்பத்தி குறைவாக இருந்த போதிலும், அமெரிக் காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் தாராளமாக சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட் டுள்ளது. ஏற்றுமதிச் சந்தையில் இந்தியாவுக்குள்ள கௌரவத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவே இவ்வாறு செய்யப்பட்டதாக அரசு விளக்கமளிக்கிறது. முன்னுரிமை ஒதுக்கீடு முறையின் கீழ் இந்தியா ஏற்றுமதி செய்வதால், எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் ஆண்டிற்கு குறிப்பிட்ட அளவு ஏற்றுமதி செய்தே ஆக வேண்டும். இதன்படி கடந்த நவம்பரில் ஒரு லட்சம் டன் சர்க்கரை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ்வாண்டு பிப்ரவரியில் 16,600 டன் சர்க்கரை அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டது. ஏற்கனவே பற்றாக்குறையாக உள்ள நிலையில் இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டதால், சர்க்கரை விலை தாறுமா றாக உயர்ந்தது. விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பதாக மாய்மாலம் செய்யும் காங்கிரசு துரோகிகளுக்கு, மக்கள் நலனில் மயிரளவும் அக்கறை கிடையாது என்பதையே இது மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

தனியே இறக்குமதி செய்யும் சர்க்கரையை, நடுக்கடலியே பேரம் பேசி இந்நிறுவனம் வாங்கிக் கொண்டு, தனது பெயரில் அதை இந்தியாவுக்கு அனுப்பப் போகிறது. இதனால் தனியார் முதலாளிகள் மூலமாக சர்க்கரை இறக்குமதியாவது குறைந்து மீண்டும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

கடைசியில், சர்க்கரைத் தட்டுப்பாட்டைச் சாதகமாக்கிக் கொண்டு சர்க்கரை ஆலை அதிபர்களும், அமைச்சர்களும், அதிகார வர்க்கமும் கோடிகோடியாய் கொள்ளையடித்ததுதான் நடந்துள்ளது. சர்க்கரை தட்டுப்பாடும் நீங்கவில்லை; விலை குறையவும் வாய்ப்பில்லை. மானியங்களும் குறைக்கப்பட்டுவிட்டதால் ரேஷனில் வழங்கப்படும் சர்க்கரையின் அளவு இனி குறைக்கப்படும் அல்லது விலையேற்றம் செய்யப்படும். மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு முதலான அத்தியாவசியப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளை லாபத்துக்கு விற்க தனியார் முதலாளிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைப் போல், இப்போது சர்க்கரை சந்தையும் தனியார் முதலாளிகளின் இரும்புப் பிடியில் தள்ளப்பட்டுவிட்டது.

> தட்டுப்பாட்டை உருவாக்கி விலையேற்றத்தின் மூலம் ஆலை அதிபர்களும், சர்க்கரை இறக்குமதி பேரத்தின் மூலம் அதிகாரிகளும் கொள்ளையடிக்கின்றனர்.

''காட்'' ஒப்பந்தத்தால், சர்வதேசச் சந்தையில் போட்டியிடும் அளவுக்கு உற்பத்தி பெருகும் என்று காங்கிரசுத் துரோகிகள் காதில் பூ சுற்றினார்கள். கடைசியில் உற்பத்தி குறைந்து, விலையேற்றம் அதிகரித்து, இறக்குமதி பெருகியதுதான் கண்ட பலன். அத்தியாவசியப் பொருட்களுக்கான மானியத்தைக் குறைத்து, விலையேற்றம் செய்து, மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளுவதுதான் ''காட்'' ஒப்பந்தத்தின் சுடுகாட்டுப் பாதை. அடுத்தடுத்து விலையேற்றத் தாக்குதலின் மூலம் காங்கிரசு துரோகிகள் வேகமாக நாட்டைச் சுடுகாடாக்கி வருகின்றனர். சர்க்கரை விலையேற்றம் - ஊழல் கொள்ளைக்கு எதிராக கூப்பாடு போடும் எதிர்க்கட்சிகளோ, விசாரணை கமிஷன் கோரி மீண்டும் செக்கு மாட்டுப் பாதையில்தான் செல்கின்றன. உழைக்கும் மக்கள் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு விலையேற்றத் தாக்குதலுக்கு எதிரான போராட்டத்தை ''காட்'' எதிர்ப்புப் போராட்டத்துடன் இணைத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டியதுதான் இன்றைய உடனடிக் கடமையாக உள்ளது.

● குமார்

# பகாசுர கம்பெனிகளின் பிடியில் சிக்கியது உலகம்

உலகப் பொருளாதாரத்தின் தலைவிதியைத் தாங்கி நிற்பவை சர்வதேச வர்த்தக நடவடிக்கையினுடைய நான்கு சிலந்தி வலைப்பின்னல்கள்; அவற்றின் மீது ஒரு சில நூறு தேசங் கடந்த தொழில் கழகங்கள் (TNCs) ஆதிக்கம் வகிக்கின்றன. உண்மையில் தேசிய அரசாங்கங்களைக் காட்டிலும் கூடுதலாக இந்த தேசங் கடந்த தொழில் கழகங்கள் (TNCs) தாம் உலக மக்களின் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றன; இந்தப் பூதாகரமான தொழிற் கழகங்களைக் கட்டுப்படுத்துவது இருக்கட்டும்; இவை என்ன செய்கின்றன என்பதை அறிந்து கொள்வதுகூட இந்த தேசிய அரசாங்கங்களுக்கு மேலும் மேலும் கடினமாகி வருகின்றது.

★★★

உருவாகிவரும் உலக ஒழுங்கமைப்பில் ஒரு சில நூறு பகாசுரத் தொழில் கழகங்கள்தாம் முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றன; அவற்றில் பலவும் பெரும்பாலான சுதந்திர தேசங்களைவிட பெரியவையாகத் திகழுகின்றன. சௌதி அரேபியா, நார்வே ஆகிய இரு நாடுகளையும் சேர்த்தாலும் அவற்றைவிட ஃபோர்டு (Ford) நிறுவனத்தின் பொருளாதாரம் பெரியதாக உள்ளது. நியூசிலாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஃபிலிப் மோரிஸ் (Philip Morris) நிறுவனத்தின் ஆண்டு விற்பனை தாண்டிவிடுகிறது. 20 ஆண்டுகளுக்கு முந்தைய பன்னாட்டு தொழிற்கழகங்கள் (MNCs) பல்வேறு நாடுகளிலும் தனித்தனியே தமது செயல்பாடுகளைக் கொண்டிருந்தன. அச்செயல்பாடுகள் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்பவும் அமைக்கப் பட்டிருந்தன. 1990-களில் பெரும் தொழில் நிறுவனங்கள் மட்டுமல்ல, சில சிறிய நிறுவனங்களும்கூட காலம், இடம், தேசிய எல்லைகள், மொழி, பழக்க வழக்கம், சித்தாந்தம் ஆகிய பழைய வரம்புகளைத் தகர்க்கக் கூடிய தொழில் நுட்ப வழி வகைகள் - சாதனங்களையும், நீண்ட காலத் தொலை நோக்கும் பெற்றிருக்கின்றன.

> புதிய உலகப் பொருளாதாரம் பெருமளவு நிலை கொண்டுள்ள சர்வதேச வர்த்தக நடவடிக்கையினுடைய நான்கு சிலந்தி வலைப் பின்னல்கள் மீது ஆதிக்கம் வகிக்கின்றன, உலகு தழுவிய பிணைப்புகளைக் கொண்ட கையளவேயான சில கம்பெனிகள்.

## உலகப் பேரரசுகள்

பூபாகம் முழுவதும் விரவிய தொழில் நுட்பத்தைப் பெறுவதன் மூலம் எங்கு வேண்டுமானாலும் உற்பத்தி செய்து, எங்கு வேண்டுமானாலும் விற்கக் கூடியதாக பொருளுற்பத்தியை முன்னேற்றியதன் மூலம், கடன் வழங்கும் முறையை உலகம் முழுவதும் பரவச் செய்ததன் மூலம், அண்டை அயலானாலும் சரி, அல்லது எந்தக் கிராமமானாலும் சரி அங்கெல்லாம் ஊடுருவக் கூடிய உலகு தழுவிய தகவல் தொடர்பு வழித்தடங்களால் அவற்றை இணைத்ததன் மூலம் இந்த நிறுவனங்கள் 21-ஆம் நூற்றாண்டின் உலகப் பேரரசுகளாக மாறி வருகின்றன; இவை அரசியல் தன்மையுடையன அல்ல, பொருளாதாரத்தின் தன்மையுடையன என்றும் பொதுத்துறை வகைப்பட்டதல்ல, தனியார் வகைப்பட்டது என்றும் சாதாரணமாக நாம் நம்புகின்றோம். சமீப ஆண்டுகளில் உலக அரசியலின் அதிகார பலம் என்பது பிராந்திய அடிப்படையிலான அரசாங்கங்களிடம் இருந்து உலகம் முழுவதும் சுற்றிவரக்கூடிய கம்பெனிகளுக்கு மாறிவருவதாக இந்த விண்வெளி யுகத் தொழில் நிறுவனங்களின் நிர்மாணிகளும் நிர்வாகிகளும் புரிந்து கொண்டுள்ளார்கள். அரசாங்கங்களின் நம்பிக்கைகளும் நடிப்புகளும் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் சுருங்கிவருவதால் இந்தத் தொழில் கழகங்கள் பொது இடங்களை ஆக்கிரமித்துக் கொள்கின்றன; தொடர்ந்து அதிகரித்துவரும் எண்ணிக்கையிலான மக்களது வாழ்க்கையில் இவை கூடுதலான செல்வாக்கு செலுத்துகின்றன.

ஒரு உலகுதழுவிய அளவில் சிந்தித்துத் திட்டமிடும் மனிதர்களால் (ஒரு சில ரேயான பெண்களாலும்) நடத்தப்படும் இந்த உலகு தழுவிய தொழிற்கழகங்கள் தாம் முதலில் எவ்வித மதச்சார்புமற்ற நிறுவனங்கள். ஒரே சமயத்தில் பல பத்து லட்சம் பேரைச் சென்றடையக் கூடிய கோகோ - கோலா விளம்பரங்கள்; ஆசியாவின் திடீர் - புதுப்பணக்காரர்களுக்கு சிட்டி வங்கியின் கடன் வழங்கு



படிப்பகம்

www.padippakam.com

அட்டைகள் (Credit cards) ஒப் பந்தத் தொகை கொடுத்து அடுத்தவர்களின் ஆலைக ளில் பல பத்தாயிரக் கணக் கானவர்களுக்கு விளையாட்டுக் காலணி களை உற்பத்தி செய்யும் ''நைக்'' கம்பெனியின் வலை பின்னல் — இப்படி பலதேசிய தொழிற்கழகங்க ளின் நிர்வாகிகள் 20 ஆண்டு களுக்கு முன்பு கனவு கண் டவை எல்லாம் இப்போது யதார்த்த நடப்புகளாகிக் கொண்டிருக்கின்றன. **உல கச் கலாச்சாரச் சந்தை, உல கப் பொருள் அங்காடி, உல கத் தொழிலகம், உலக நிதி வலைப்பின்னல்** ஆகி யவை தாம் புதிய உலக பொருளாதாரம் பெருமளவு நிலை கொண்டுள்ள சர்வ தேச வர்த்தக நடவடிக்கையி னுடைய நான்கு சிலந்தி வலைப்பின்னல்கள்; இவற் றின் மீது ஆதிக்கம் வகிப் பவை, உலகு தழுவிய பிணைப்புகளைக் கொண்ட ஒப்பீட்டு ரீதியில் சிலவே யான கம்பெனிகள்.




எந்தவொரு உலகப் பேரரசோ அல் லது, தேசிய அரசோ முன்னெப்போதும் சாதித்திராத ஒரு அளவுக்கு உலக ஒரு மைப்பாட்டை இந்த உலகுதழுவிய வலைப் பின்னல்களின் பொருளாதார நடவடிக்கை ஏற்கனவே சாதித்துவிட் டன. இவை ஒவ்வொன்றின் பின்னாலும் இருந்து இயக்கும் சக்தி அமெரிக்கா, ஜப் பான், ஜெர்மனி, பிரான்சு, சுவிட்சர் லாந்து, நெதர்லாந்து, பிரிட்டன் ஆகிய வற்றைத் தலைமையகங்களாகக் கொண்டு செயல்படும் அதே சில நூறு பகாசுரத் தொழிற் கழகங்கள்தாம் என்ப தைப் பெரும்பாலும் கண்டு பிடித்துவிட முடியும். மேல்மட்டத்தில் உள்ள 300 நிறு வனங்களின் கூட்டுச் சொத்து உலகின் மொத்த உற்பத்திச் சொத்துக்களின் ஏறக் குறைய கால்பங்காக உள்ளது.

உலக வலைப்பின்னல்களில் புத்தம் புதிதானது உலகக் கலாச்சாரச் சந்தை; அது மிகப் பெரும்பாலும் அகில உலக வீச்சுடையது. திரைப்படங்கள், வானொலி, வானொளி, இசை, பத்திரிக் கைகள், T - சட்டைகள், விளையாட்டு கள், பொம்மைகள், கருத்து - கதைப்பூங் காக்கள் ஆகிய இவை உலகக் கற்பனைப் பாத்திரங்களை மிதக்கவிடக் கூடிய, உல கக் கனவுகளைப் பரப்பக் கூடிய மக்கள் திரள் தொடர்புச் சாதனங்கள். குலுக்கல் இசை - நடன (Rock Stars) நட்சத்திரங்கள், அமெரிக்க திரையுலக (ஆலிவுட்) தடை களைத் தகர்க்கும் சாதன்னை சினிமாக்கள் ஆகியவை உண்மையில் உலகத் தயாரிப் புகள். பூபாகம் எங்கும் வாழும் மக்கள் அனைவரும் ஒரே சந்தைத் தயாரிப்பான பாடல்களையும் கதைகளையும், ஒரே மின்னணு சாதனங்களைக் கொண்டு பார்க்கிறார்கள் அல்லது கேட்கிறார்கள். செயற்கைக் கோள், கம்பி வழி, ஒலி-ஒளி பதிப்பான்கள் வந்ததன் விளைவாக, மிக மிக ஏதேச்சதிகாரமான அரசாங்கங்க ளும் செய்திகள் பரவுவதன் மீது முன்பு கொண்டிருந்த கடுமையான கட்டுப்பாட் டையும் தமது குடிமக்களது கற்பனை கனவு வாழ்க்கையின் மீது அவற்றுக்கி ருந்த பிடிப்பையும் இழந்து கொண்டிருக் கின்றன.

> இந்த உலக அமைப்பின் மிகவும் உறுத்தக் கூடிய அம்சம் என்னவென்றால் தமது மக்களுக்காக தேசிய அரசாங்கங்கள் மேற்கொள்ளும் அத்தியாவசிய கொள்கைகளின் செயல்தன்மைகளைத் தகர்க்கும்படி அந்த உலக தொழிற் கழகங்களின் பூதாகரமான சக்தியும் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன.

மூன்றாம் உலகம் என்று இன்னமும் அழைக் கப்படும் பழம் பண்பாட்டு சமூகங்களில்கூட சாப் பாட்டு இடைவேளையை வானொளிகள் பிடித்துக் கொண்டு வருகின்றன. உல கம் முழுவதும் உள்ள மது பான விடுதிகளில், தேநீர் கடைகளில், சிற்றுண்டிச் சாலைகளில், வாழ்விடங்க ளில் ஒரே நிலைமைதான், தனித்திருந்தாலோ, சேர்ந்தி ருந்தாலோ, குடும்ப உறுப்பி னர்களாக இருந்தாலோ எப் படியானாலும் பேசிக் கொள் ளும். உரையாடல்கள் கிடை யாது; ஒருவருக்கொருவர் மனித உறவுகள் கிடையாது; வானொளியின் ஒளிக்கு ழாய் (Cathode Tube) முன்பு ஆணி அடித்தாற்போன்று உட்கார்ந்து கொள்கிறார்கள். அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பாவில் உள்ளதைப் போல முன்னேறிய தகவல் தொடர்பு தொழில் நுட்பங்க ளின் தாக்கத்தினால் பல நூற் றாண்டு காலப் பழக்க வழக் கங்கள் அழிந்து போகின்றன.

## ''அமெரிக்கத் தயாரிப்பு''

உலகம் முழுவதும் மிகவும் பரவ லாக விற்கப்படும் கலாச்சாரத் தயாரிப்பு கள் ''அமெரிக்கத் தயாரிப்பு'' என்ற முத் திரை தாங்கியுள்ளது. ஏறக்குறைய எந்த அமெரிக்கத் திரையுலக (ஆலிவுட்) சினி மாவானாலும் சரி, ஒளிநாடா(வீடியோ) வானாலும் சரி, ஏதாவது ஒரு இடத்து மரபு, மதிப்பீடு - ஒழுக்கக் கோட்பாடுக ளைத் தாக்கக் கூடியதாக இருக்கிறது. தனியாக உள்ள பெண்கள், காமாந்திர காதலர்கள், பெற்றோரை புறம்பேசும் சிறு வர்கள் போன்றவற்றைக் காட்டும் காட்சி கள், குடும்பம், மதம், மற்றும் ஒழுங்கு முறையின் மீதான தாக்குதல்களாக உள் ளன; எனவே, அவை உலகமெங்கும் வாழும் எல்லா வித மக்களையும் அதிர்ச்சி - நிலைகுலைவு அடையச் செய் கின்றன. உலக வர்த்தகத் தயாரிப்புகள் தொடர்ந்து ஆறாகப் பாய்வதால் அமெ ரிக்காவின் சில பகுதிகள் உட்பட பல இடங்களிலும், அவை பிராந்திய, தேசிய எதிர்விளைவுகளை, கடுமையான எதிர்த் தாக்குதல்களைத் தூண்டுகின்றன; இவை அடிக்கடி கடவுள் - மதத்தின் பெயரால் நடத்தப்படுகின்றன.

உலகப் பொருள் அங்காடி என்பது இந்த பூமி முழுவதுமான அதிநவீன சந்தை (Super Market); இதில் உண்ணவும், குடிக்கவும், அணியவும், அனுபவிக்க வும் தேவையான பொருட்கள் திகைப்



படிப்பகம்

www.padippakam.com

பூட்டும் வகையில் பரப்பிக் கிடக்கின்றன. செல்வச் செழிப்புமிக்க வாழ்க்கைக் கனவுகள் உலகின் மூலைமுடுக்கெல்லாம் சென்றடையும்படி பரிமாறப்படுகின்றன. ஆனால் உலக மக்களில் ஒரு சிறுபான்மையினர் மட்டுமே இந்த உலகப் பொருள் அங்காடியில் வாங்கக் கூடிய வசதி படைத்தவர்களாக உள்ளனர். உலகில் வாழும் 540 கோடி மக்களில் ஏறக்குறைய 360 கோடிப் பேர் இதில் எதையும் வாங்கக் கூடிய ரொக்கப் பணமோ, கடன் வசதியோ இல்லாதவர்கள். பூமியில் வாழும் மக்களின் பெரும்பான்மையானோர் பெட்டிக் கடைகளில் பொருட்கள் வாங்கும் அளவே அதிகபட்சம் வசதி படைத்தவர்கள்.

உலகத் தொழிலகங்கள் என்பவை பொருட்களை உற்பத்தி செய்யும், செய்தித் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யும், எல்லாவிதமாக சேவைகளும் புரியும் ஆலைகள், தொழிற் கூடங்கள், சட்ட அலுவலகங்கள், மருத்துவமனைகள், உணவகங்கள் இன்ன பிற எல்லா வகையான இடங்களும் அடங்கிய ஒரு வலைப்பின்னல். உலக அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட இணைப்பக (Assembly) வரிசைகளில் ஒரு கிரம அடிப்படையிலான பொத்தான்களின் வரிசையினால் இயக்கப்பட்டு ஒன்று சேர்க்கப்படும் சிகரெட்டுகள் முதல் கார்கள் வரை ஒவ்வொன்றும் பல பத்து நாடுகளில் இருந்து வரும் பாகங்களைக் கொண்டிருக்கின்றன. புள்ளி விவர - தகவல் பகுப்பாய்வுகள், சட்ட அலுவலகங்கள், விளம்பர நிறுவனங்கள், காப்பீட்டுக் கழகங்கள் இன்னொருவகை இணைப்பக வரிசைகளாக மாறியுள்ளன. ஒரு உலக உழைப்பாளிகள் அடங்கிய சிறு கடலுக்கு அக்கம்பக்கமாகவே ஆக்கபூர்வமான வணிக - வர்த்தக சிந்தனைகள், மின்னணு - கணிப்பொறி அறிவு, நுண்பொருள் இயக்குநர்கள் - மருத்துவர்கள், நிர்வாகத் தொழில் நுட்பம் மற்றும் விற்பனையாகக் கூடிய பிற எல்லா திறன்களும் கொண்ட ஒரு உலகு தழுவிய உழைப்பாளர் சந்தை ஏற்பட்டிருக்கிறது; அதில் தலைமை நிர்வாக இயக்குநரில் இருந்து குப்பைக் கூடை சுத்தம் செய்பவர்கள் வரை நம்மில் மேலும் மேலும் பலர் ஒன்றாக நீச்சலடிக்கிறோம். அதில் குதிப்பதற்காக சொந்த மண்ணின் பிடிப்புகளை இழந்தவர்கள், ஏதுமற்றவர்களான உலகின் பல கோடி மக்கள் மிகவும் வெறிபிடித்து அலைகின்றனர்.

## ''சூதாட்டப் பொருளாதாரம்''

உலக நிதி வலைப்பின்னல் என்பது நாணயப் பரிமாற்றங்கள், உலகப் பங்குப் பத்திரங்கள், பெரும் மூல அட்டைகள் (Master Cards), ஈரோயென் எனப்படும் ஐரோப்பிய - ஜப்பானிய நாணயம், பண்டமாற்றுகள், குறியீட்டு அட்டைகள் போன்றவை என்று தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும் திகைப்பூட்டக்கூடிய, சிக்கல் நிறைந்தது; இன்னும் மறு முதலீடு, மறுவிற்பனைப் பணத்திற்காகப் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக்கப்படும் ஊக வழி வகைகள் பலவும் அடங்கியது. இந்த வலைப்பின்னல் அந்தக் காலத்து, மூப்பு தட்டிய மந்தமான வங்கிகளைக் காட்டிலும் சூதாட்ட விடுதிகளின் சங்கிலிப் பிணைப்புக்கு நெருக்கமானது. ஒரு நாளின் 24 மணி நேரமும் உலகின் பெரும் அன்னியச் செலாவணிச் சந்தைகளுக்கிடையே புள்ளி விவரங்கள் வினாடித்துளி வேகத்தில் போய் வந்து பல நூறு கோடி டாலர்கள் பரிமாறப்படுகின்றன. பிரமிப்பூட்டும் இந்தத் தொகையின் 10 சதவீத அளவு கூட பொருள்கள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தில் சம்பந்தப்படுவதில்லை. ஒரு லாப விளையாட்டாகிப் போன இந்த சர்வதேசப் பணப்போக்குவரத்து தன்னளவில் தனித்து இயங்குவதாகிவிட்டது. (பொருளுற்பத்தி - விற்பனை, சேவைப் பணிகளுக்கான கட்டணம் என்றில்லாமல், அவற்றோடு தொடர்பின்றி வெறும் நிதிச் சூதாட்ட விளையாட்டாகத் தனித்தே நடக்கிறது, பணப் பரிமாற்றச் சந்தை — மொ-ர்) மறு உற்பத்தியுடன் தொடர்பற்ற சூதாட்டத்துக்கு சேவை செய்வதற்கென்றே தொழில் நுட்பம் ஒருநாள் தகவமைக்கப்

> மூன்றாம் உலகம் என்று இன்னமும் அழைக்கப்படும் பழம் பண்பாட்டு சமூகங்களில் கூட சாப்பாடு இடைவேளையை வானொளிகள் பிடித்துக் கொண்டு வருகின்றன.

படும்; இதற்கான தகவல்களைக் கொண்டுள்ள ஜான் மெனார்டு கெய்ன்ஸ், ''சூதாட்டப் பொருளாதாரம்'' என்றழைத்த இதன் தோற்றத்தை முன்னுரைத்தார். இருந்த போதும், வங்கி நடவடிக்கைகள் உலகு தழுவியதாகவும் ஊக அடிப்படையிலானதாகவும் மேலும் மேலும் மாறுவதனால் பலபத்து லட்சம் மக்களுடைய, பல பத்தாயிரம் சிறுதொழில்களுடைய கடன் தேவைகள் நிறைவேறுவதில்லை.

★★★

இந்த நான்கு சிலந்தி வலைப் பின்னல்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது, அது உலகுதழுவிய கிராமம் என்பதில் இருந்து மிகவும் மாறுபட்ட சித்திரத்தையே தருகின்றன. உலகக் கலாச்சாரச் சந்தை அதன் உலகக் கனவுகளோடு பெரும்பான்மை குடும்பங்களை அடைகிறது. உலகின் பொருட்களையும் சேவைப் பணிகளையும் நிதியளித்து, தயாரித்து, விற்பனை செய்யும் பிற மூன்று வலைப்பின்னல்களில் மிகமிகச் சிறிய எண்ணிக்கையிலானவர்கள் தாம் ஏதாவது பாத்திர மாற்றுகின்றனர். புது உலகப் பொருளாதாரத்தில் ஆதாயம் அடைபவர்களுக்கும் அவ்வாறின்றி விடுபட்டுப் போனவர்களுக்கும் இடையே ஒரு மிகப் பெரும் இடைவெளி நிலவுகிறது; உலக மக்கள் தொகை பெருகப் பெருக இந்த இடைவெளி விரிவடைந்து கொண்டே போகிறது.

இந்த உலக அமைப்பின் மிகவும் உறுத்தக் கூடிய அம்சம் என்னவென்றால் தமது மக்களுக்காக தேசிய அரசாங்கங்கள் மேற்கொள்ளும் அத்தியாவசியக் கொள்கைகளின் செயல் தன்மைகளை தகர்க்கும்படி அந்த உலக தொழிற்கழகங்களின் பூதாகரமான சக்தியும் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன. தேசிய அரசுத் தலைவர்கள் தமது சொந்த மண்ணின் மீது ஒரு காலத்தில் கொண்டிருந்த கட்டுப்பாட்டை வெகுவாக இழக்கிறார்கள். மேலும் மேலும் அதிக அளவு வெளி உலகின் நிர்பந்தங்களால் அவர்கள் கட்டுப்படுகிறார்கள்; ஏனெனில் வெளியாட்கள் ஏற்கனவே உள்ளே புகுந்து விட்டார்கள். வழக்கமாக எல்லைகளைத் தாண்டி இயங்கும் தொழில் நிறுவனங்கள் வெகு தொலைவிலுள்ள துண்டு துண்டான பிராந்தியங்களையும் ஒரு புதிய உலகப் பொருளாதாரத்தில் இணைக்கின்றன; அது ஏற்கனவே நிறுவப்பட்ட அரசியல் ஏற்பாடுகள்-அமைப்புகள் மற்றும் பழக்க வழக்க மரபுகளை கடந்து செல்கிறது. வேறு ஒரு காலக் கட்டத்திற்கான வரிச் சட்டங்கள், அனைவருக்கும் முழு வேலை வாய்ப்புக் கொள்கைகள், மூலாதார வளப்படுத்துதல் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான பழைய அணுகுமுறைகள் ஆகிய அனைத்தும் காலாவதியாகும்படி, நடைமுறைப்படுத்த முடியாதவைகளாக, பொருத்தமற்றவையாக மாறுகின்றன.

தேசியத் தலைவர்கள் இனி இந்தப் பகாசுர நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவது இருக்கட்டும், புரிந்து கொள்ளும் திறனும் அற்றவர்களாகி விட்டார்கள். ஏனென்றால் அவை இடம் விட்டு இடம் பெயரக் கூடியவை; கிரேக்க இதிகாசப் பாத்திரமான புரோட்டியஸ் (அதாவது பச்சோந்தி போன்று— மொ-ர்) சுற்றுச்சூழலுக்கு ஏற்ப தொடர்ந்து தோற்றத்தை மாற்றிக் கொண்டே போகின்றவை. இந்த உலகத் தொழிற் கழகங்களின் நிர்வாகிகளுக்கும் அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் இடையில் மாறும் உறவு ஏறக்குறைய எல்லா இடங்களிலும் ஒரு புதிய பொருளாதார யதார்த்தத்தை உருவாக்குகிறது.

*(ரிச்சர் ஜெ. பெர்னட் என்பவர் எழுதிய ''உலகக் கனவுகள்: ஏகாதிபத்திய தொழிற் கழகங்களும் புதிய உலக ஒழுங்கும்'' என்ற நூலின் ஒரு அத்தியாயத்தின் சுருக்கம். நன்றி : தேர்டு வோர்ல்டு ரிசர்ஜன்ஸ்)*



படிப்பகம்

# கேள்வி பதில்



● இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களும் ஆயுதப் போராட்டப் பாதையில் முன்னேறும் போது தமிழ் தேசிய இனம் மட்டும் தூங்கிக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்?

— அ. சீதா, ஊத்தங்கரை.

★ தமிழ் தேசிய இன விடுதலையே தமது இலட்சியம் என்று பிரகடனப்படுத்தியிருக்கும் குழுக்களில் பலவும் காரியவாத பிழைப்புவாதத் தலைமையையோ, வெறும் வாய்ச் சவடால் தலைமையையோ கொண்டிருப்பதுதான் காரணம். தெளிவான திட்டம், வழி முறைகளை வைத்து விடுதலைப் போராட்டங்களை நடத்துவதற்கு பதில் ஈழத்தின் புலிகளின் சாகசங்களை சொல்லியே தமக்கு போர்க்குண சாயம் பூசிக் கொள்கிறார்கள்.

● தமிழீழ விடுதலையை ஆதரிக்கும் நீங்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் புலிகளை பாசிச சக்திகள் என்ற கோணத்தில் விமர்சனம் செய்வது சரிதானா?

— அ. சீதா, ஊத்தங்கரை.

★ சரிதான்! சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் வாழத்தான் தமிழீழ மக்கள் விடுதலையைக் கோருகிறார்கள். அவை மறுக்கப்பட்டு தன் இனத்தானுடைய பாசிசக் கொடுங்கோன்மையின் கீழ் வாழ்வதற்காக அல்ல. சிங்களப் பேரின ஒடுக்குமுறையைச் சாக்கு வைத்து, தமிழீழச் சிறுபான்மை இனவெறியை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. புலிகள் இயக்கம். சிங்கள இனவெறி இராணுவம், அதிரடிப்படை - போலீசு, ஆளும் வர்க்க நபர்கள், அவர்களின் அரசியல் பிரதிநிதிகள், துரோகிகள், அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக புலிகள் இராணுவ நடவடிக்கைகள் எடுப்பதை நாம் ஒருபோதும் குறை கூறியதில்லை. ஆனால் சிங்களப் பேரின ஒடுக்கு முறையைச் சாக்கு வைத்து சிங்களச் சிவிலியன்கள் குறிப்பாக வயோதிகர்கள், பெண்கள், குழந்தைகளை திட்டமிட்டு குரூரமாக - கை - கால் வெட்டி, கண்களைத் தோண்டி வக்கிரமான முறையில் - படுகொலை செய்கிறது. (இதற்காக "ரா" முதலிய இந்திய உளவுப் படையின் உத்தரவுகளை ஏற்று அமுலாக்கியது). அதேபோல முஸ்லீம் சிறுபான்மையினருக்கு எதிராக - புத்தலம் மசூதியில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த முஸ்லீம்களை சுட்டுக் கொன்றது உட்பட - படுகொலை செய்து வருகிறது. இலங்கை, இந்திய ஆதிக்க ஆக்கிரமிப்புகளை எதிர்த்துப் போராடி, தமிழீழ விடுதலையை ஆதரிக்கும் பல ஜனநாயக அமைப்புகளை தடை செய்து, அவற்றின் அணிகளை வதை முகாம்களில் வைத்து வக்கிரமான முறையில் கொல்லுகிறது. ரஜினிதிரணகம யாழ் புத்தக நிலைய மணி அண்ணாச்சி, யாழ் பல்கலை மாணவர்கள், கவிஞர் செல்வி போன்ற இயக்கம் சாராத ஜனநாயக சக்திகளைக்கூட இரகசியமாகக் கொன்றொழிக்கிறது. இந்த நடவடிக்கைகளை அந்நிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்களுக்கு எதிராகவும் விரிவுபடுத்தியிருக்கிறது.

புலிகளின் சந்தேகத்துக்குரியவர்கள் என ஏறக்குறைய ஆறாயிரம் பேர் ஈழச் சிறைகளில் அடைத்து வைத்து சித்திரவதை செய்யப்படுகின்றனர். ஈழ விடுதலையை அடகு வைப்பதற்காக பிரேமதாசா, ராஜீவ் அரசுகளுடன் பேரம் பேசி ஆயுதங்களும் நிதியும்கூடப் பெற்றது. இனவெறி பிடித்த இஸ்ரேலின் "மொசாத்" படையிடம் பயிற்சி பெற்றதோடு போதை மருந்து கடத்தல், கட்டாய கப்பம் வசூலித்தல் போன்ற சமூக விரோத செயல் புரிபவர்கள்தாம் பல நாடுகளில் புலிகளின் பிரதிநிதிகளாக உள்ளனர். தன் நிழலையே நம்பாத புலிகள் தமது "போராளித் தோழர்கள்" பலரையும்கூட படுகொலை செய்தது; இதன் ஒரு பகுதியாகவே இப்போது பிரபாகரன் - மாத்தையா விவகாரம் வெடித்துள்ளது. ஆகவே, புலிகளின் தலைமையில் அமையும் தமிழீழம் சுதந்திரமானதாகவும், ஜனநாயக உரிமை பெற்றதாகவும் அமையாது என்று நாம் கருதுகிறோம். புலிகளைப் பாசிச சக்திகளாகக் கருதுவதற்கு நாம் முன்வைத்த இந்தக் காரணங்களுக்கு புலிகளோ, அவர்களது இந்திய ஆதரவாளர்களோ எவரும் பதில் கூறவில்லை. இலங்கை - ஈழப் பிரச்சினைக்கு புதிய ஜனநாயகப் புரட்சியைத் தீர்வாக முன்வைக்கும் அதே சமயம் அதற்காக தமிழீழ விடுதலை காத்திருக்க வேண்டியதில்லை என்பதே நமது நிலைப்பாடு. இதற்காக "ஈழத்துக்கு தேசிய இனவிடுதலை, பிறகு இலங்கைக்குப் புதிய ஜனநாயகப் புரட்சி என்று இரண்டு கட்ட புரட்சித் திட்டம் வைக்கிறார்கள்; புதிய ஜனநாயகப் புரட்சித் தீர்வுக்குப் பதில் தனித் தமிழீழத்தை ஆதரிக்கிறார்கள்" என்று நம்மீது அப்போதைய கேடயம் - மனஓசை கும்பல் அவதூறு செய்தது. பின்னர் "பல்டி" அடித்து ஈழம் மட்டுமல்ல தமிழ் நாடும் தனி நாடாகும் தீர்வை வைக்கிறார்கள், ஆனால் தனித் தமிழீழத்தை புதிய ஜனநாயகம் எதிர்ப்பதாகவும், அதனால்தான் புலிகளை பாசிச சக்திகள் என்று நாம் கூறுகிறோம் என ம.ஜ.இ.க - சமரன் குழு சில வெளியீடுகள் மூலம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு குற்றஞ்சாட்டி இருந்தது. நமது நிலைப்பாடுகளுக்கு இவர்களாகவே உரை எழுதி அவதூறு செய்வது மட்டுமல்ல; இதே குழு புலிகளை பாசிச சக்திகள் என்று இதற்கு முன்பு எழுதியுள்ளது.

## தோழர் சுப்பாராவுக்கு அஞ்சலி

தோழர் சி.வி. சுப்பாராவ், ஜனநாயக உரிமைக்கான மக்கள் சங்கம் (PUDR) டெல்லி அமைப்பின் செயலாளர். அவர்கள் கடந்த ஏப்ரலில் திடீர் மாரடைப்பினால் அகால மரணமடைந்தார். இந்தியப் புரட்சிகர - ஜனநாயக இயக்கத்துக்கு அவரது மரணம் ஒரு பேரிழப்பாகும்.

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த தோழர் சுப்பாராவ், மாணவராக இருந்தபோதே புரட்சிகர இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். ஆந்திர முற்போக்கு மாணவர் சங்கத்தின் முன்னோடிகளில் ஒருவராக இருந்து பல போராட்டங்களில் பங்கேற்றவர். அதன்பிறகு டெல்லி பல்கலைக்கழக பேராசிரியராகவும் பி.யு.டி.ஆர். அமைப்பின் செயலராகவும் இருந்து புரட்சிகர - ஜனநாயக இயக்கங்களுக்கும், விவசாயி - தொழிலாளர்களுக்கும் எதிரான அரசு பயங்கரவாத அடக்குமுறைகளுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் எதிராக உறுதியாகப் போராடியவர். இவற்றின் மூலம் புரட்சிகர இயக்கத்தை முன்னெடுப்பதற்குப் பெரிதும் உதவினார். ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப், பீகார், அசாம் மற்றும் வடகிழக்கிந்திய மாநிலங்களில் அரசு பயங்கரவாதக் கொடுமைகளுக்கு எதிராக உண்மை அறியும் குழுக்களில் பங்கேற்று அரிய பணியாற்றினார்.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து, "புதிய ஜனநாயக"த்தின் மீது சி.பி.ஐ. தொடுத்த தாக்குதலை எதிர்த்து பத்திரிக்கை கவுன்சிலில் நாம் வழக்குத் தொடுத்தபோது, அதற்காக டெல்லி சென்று வாதிடுவதற்குப் பெரிதும் உதவினார் என்பதை இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். புரட்சிகர அமைப்புகள் எதுவானாலும் திறந்த மனதுடன் வரவேற்பதிலும், உதவுவதிலும் ஆர்வம் காட்டினார்.

தோழர் சுப்பாராவுக்கு, கனத்த இதயத்தோடு, சிகப்பு அஞ்சலி செலுத்துவோம்! அவரது பணி தொடர்வோம் என உறுதி கூறுவோம்!

www.padippakam.com

## தோல்விப் பாதையில் போலிகள்

மே. வங்கத்தை ஆளும் 'மார்க்சிஸ்டு'களின் மாணவர் அமைப்பான இந்திய மாணவர் சங்கம் (SFI) தொடர்ச்சியாகப் பல கல்லூரி - பல்கலைக் கழக தேர்தல்களில் படுதோல்வி அடைந்து வருகிறது. வடக்கு வங்கப் பல்கலைக்கழகம் (NBU), பிதான்சந்திரா கிரிஷி விஸ்வவித்யாலயா (BCKV), ஜாதவ்பூர் பல்கலைக்கழகம் (JU), ஆகியவற்றில் 'மார்க்சிஸ்டு'களின் மாணவர் சங்கம் தோல்வியைத் தழுவியுள்ளது. இந்திய மாணவர் சங்கத்தின் பரம்பரைக் கோட்டையாகக் கருதப்படும் வங்கவாசி வர்த்தகக் கல்லூரியின் மாணவர் பேரவைத் தேர்தலில் இம்முறை இது வெற்றி பெறவில்லை. பல்கலைக்கழக மாணவர் சங்கம், விஞ்ஞானபீட மாணவர் சங்கம் முதலான அரசியல் சார்பற்ற மாணவர் அமைப்புகள் இவற்றில் வெற்றி பெற்றுள்ளன.

மாணவர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு, போராடாமல் இருந்ததும், வெளியிலிருந்து 'மார்க்சிஸ்டு'களின் அரசியல் தலையீடும் மாணவர்களிடமிருந்து அவர்களைத் தனிமைப்படுத்திவிட்டது என்று வெற்றி பெற்ற அரசியல் சார்பற்ற மாணவர் அமைப்புகள் கூறுகின்றன. இந்திய மாணவர் சங்கத்தின் மே. வங்கத் தலைவரான சுபீர் சௌத்திரி, "நாங்கள் எங்கள் வட்சியத்திலிருந்து விலகிச் சென்று விட்டோம்; மாணவர்களின் பிரச்சினைகளை எதிரொலிக்கத் தவறிவிட்டோம்" என்று தோல்விக்கான காரணங்களை விளக்குகிறார். "இத்தோல்வி தற்காலிகமானது; வரும் கல்வியாண்டில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தேர்தலில் நாங்கள் வெற்றி பெறுவோம்" என்கிறார். ஆனால், ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்தில் கடந்த 16 ஆண்டுகளாக வெற்றி பெற்று வந்த இந்திய மாணவர் சங்கம், இம்முறை படுதோல்வி அடைந்துள்ளதைக் கண்டு

**செல்வாக்கும் ஆதரவும் சரிந்த நிலையில் 'மார்க்சிஸ்டு' மாணவர்கள் நடத்தும் போராட்டம்.**



ஆளும் 'மார்க்சிஸ்டு'களே பீதியில் உறைந்து போயுள்ளனர். ஆளும் கட்சி சார்பான சங்கம் என்ற அகந்தையுடன் அடாவடித்தனங்களில் இறங்குவது, மாணவர்கள் தமது நியாயமான கோரிக்கைகளுக்காக அரசுக்கு எதிராகப் போராடினால் அதனை எதிர்ப்பது, பல்கலைக் கழகங்களில் காங்கிரசு குண்டர்களுடன் தீராத வன்முறை, மோதல்களில் ஈடுபடுவது முதலான நடவடிக்கைகளால் இம்மாணவர் சங்கத்தின் மீது வெறுப்புற்ற மாணவர்கள், அரசியலே வேண்டாம் என்ற கடை கோடி நிலைக்குத் தள்ளப்பட்டு அரசியலற்ற சங்கங்களை வெற்றி பெறச் செய்துள்ளனர். இந்நிலையில் மீண்டும் இந்திய மாணவர் சங்கம் வெற்றி பெறுமா என்பது கேள்விக் குறியாகி விட்டது.

போலிக் கம்யூனிஸ்டுகளின் பித்தலாட்டக் கொள்கைகளால் வெறுப்புற்று, அதன் விவசாய சங்கமான "பிரதேசிக் கிசான் சபா" விலிருந்து அண்மைக் காலமாக நூற்றுக்கணக்கானோர் வெளியேறி வருகின்றனர். இப்போது அதன் மாணவர் சங்கமும் தொடர்ச்சியாக படுதோல்வி அடைந்து வருகிறது. நல்ல முன்னேற்றம்தான்!

## ஏமன் பிளவு: சர்வாதிகாரிகளிடையே போர்

நான்காண்டுகளுக்கு முன்பு ஒரே நாடாக ஐக்கியப்பட்ட தெற்கு ஏமனும் வடக்கு ஏமனும் உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து இப்போது மீண்டும் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து விட்டன. கடந்த மே 21-ம் நாளன்று வடக்கிலிருந்து பிரிந்த தெற்கு ஏமன் தன்னை "ஏமன் ஜனநாயகக் குடியரசு" என தனி நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளது.

அரேபிய தீபகற்பத்தில் சௌதி அரேபியா, ஓமன் ஆகிய நாடுகளால் சூழப்பட்ட செங்கடலை ஒட்டியுள்ள நாடுகள்தான் தெற்கு, வடக்கு ஏமன்கள். இரு நாடுகளுமே பிரிட்டனின் காலனியாக இருந்து பின்னர் பெயரளவிலான சுதந்திரம் பெற்று ராணுவ சர்வாதிகாரிகள் ஆட்டிப் படைத்த நாடுகள். அரேபிய தீப கற்பத்தில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட, சௌதி அரேபியாவுக்கு அமெரிக்க வல்லரசு அதிநவீன ஆயுதங்களைக் கொடுத்து தனது விசுவாச நாடாக்கியது. அமெரிக்காவுடன் மேலாதிக்கப் போட்டியில் ஈடுபட்டிருந்த அன்றைய சோவியத் ஒன்றியம், தெற்கு ஏமனுக்கு பெருமளவு ஆயுதங்களும் பயிற்சியும் அளித்து, ராணுவ சர்வாதிகாரிகளின் தலைமையிலான சோசலிசக் குடியரசை நிறுவி பகடைக் காயாகப் பயன்படுத்திக் கொண்டது.

சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பிறகு, போலி சோசலிச ஆட்சிகளை வீழ்த்தி தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் முயற்சியாக வடக்கு தெற்கு ஏமன்களின் இணைப்புக்காக ஏகாதிபத்தியங்கள் நிர்பந்தித்தன. கம்யூனிச எதிர்ப்பு கொண்ட இஸ்லாமிய நாடுகளும் இதற்கு ஆதரவாகத் திரண்டன. ஏகாதிபத்திய நிர்பந்தம் காரணமாகவும், சோவியத் ஒன்றிய ஆதரவு இல்லாத நிலையில் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீளவும் தெற்கு ஏமன் வடக்குடன் சேர உடன்பட்டது.

இருப்பினும், இருநாடுகளின் ஐக்கியம் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டதே தவிர, செயல் பூர்வமானதாக, சுய விருப்பத்தின் அடிப்படையிலானதாக அமையவில்லை. வடக்கு - தெற்கு படைகள் பிளவுபட்டு அடிக்கடி மோதிக் கொண்டன. இதற்கிடையே கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் 301 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் 56 இடங்களைத்தான் தெற்கு ஏமன் சோசலிஸ்டு கட்சி பெற்றது. வடக்கு ஏமன் சர்வாதிகார அதிபர் அப்துல்லா சலேயின் கட்சி 121 இடங்களைப் பெற்றது. சௌதி அரேபியாவால் ஊட்டி வளர்க்கப்படும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கட்சி 124 இடங்களைப் பெற்றது.


படிப்பகம்

சலேயின் கட்சியும் சோசலிஸ்டு கட்சியும் கூட்டணி அரசை நிறுவின. அப்துல்லா சலே அதிபராகவும், தெற்கு ஏமனின் சலீம் பியத் துணை அதிபராகவும் பொறுப்பேற்றனர். ஆனால் ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே அதிபர் அப்துல்லா சலே சோசலிஸ்டுகளைப் புறக்கணிக்கத் தொடங்கினார். ரஷிய ஒன்றிய வீழ்ச்சிக்குப் பிறகு போலி சோசலிஸ்டுகள் நீடித்து நிற்க முடியாது என்று இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் கள்ளக் கூட்டு சேர்ந்து கொண்டார். போலி சோசலிஸ்டுகளைப் புறக்கணிப்பது, அவர்களது ஆயுத பலத்தைக் குறைக்க வடக்கு ஏமன் படைகளைக் கொண்டு தாக்குவது, எண்ணெய் வளமிக்க தெற்கு ஏமனை தமது காலடியின் கீழ் கொண்டுவருவது, இதற்காக இஸ்லாமிய அடிப்படைவாதிகள், சௌதி அரேபியாவின் உதவியையும் ஆதரவையும் பெறுவது என்ற நோக்கத்துடன் அவர் காய்களை நகர்த்தத் தொடங்கினார்.

இச்சூழ்ச்சிகளைப் புரிந்து கொண்ட போலி சோசலிஸ்டுகள் எதிர்த்தாக்குதலில் இறங்கினர். தெற்கு - வடக்கு படைகளுக்கிடையே உக்கிரமான உள்நாட்டுப் போர் மூண்டது. ஏறத்தாழ 10,000 பேர் இதில் பலியாகினர். அன்றைய சோவியத் ஒன்றிய உதவியுடன் நன்கு பயிற்சி பெற்ற ராணுவமாக தெற்கு ஏமன் படைகள் இருந்ததால், வடக்கு ஏமன் படைகள் பின் வாங்க வேண்டியதாயிற்று. தலைநகரான ஏடன் துறைமுகத்தை தெற்கு ஏமன் படைகள் கைப்பற்றியதும் துணை அதிபர் சலீம் பியத் தெற்கு ஏமனை தனி நாடாக அறிவித்துள்ளார். தெற்கு-வடக்கு ஏமன் ஆளுங் கும்பல்களுக்கிடையிலான முரண்பாடும் மோதலும் முற்றி, கடைசியில் இரு நாடுகளாகப் பிளவு பட்டு விட்டன. ஐ.நா. மன்றம் தலையிட்டு போர் நிறுத்த உடன்பாடு உருவான போதிலும் இன்னமும் இரு தரப்புக்குமிடையே விட்டுவிட்டு போர் நீடித்துக் கொண்டிருக்கிறது.

இப்பிராந்தியத்தில் சௌதி அரேபியா ஆதரவோடு, அச்சுறுத்தும் அபாயமாக இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பலம் அதிகரித்து வருவதால், அதற்கு எதிராக போலிசோசலிச தெற்கு ஏமனை நிறுத்தி ஆதாயம் தேடவும், எண்ணெய் வளமிக்க தெற்கு ஏமன் தனியாகப் பிரிவதால் தமது ஆதிக்கத்துக்கு வாய்ப்பாக அமையும் என்பதால் ஏகாதிபத்தியங்கள் புதிய தெற்கு ஏமன் குடியரசை அங்கீகரித்துள்ளன.

கிழக்கு ஜெர்மனியை மேற்கு ஜெர்மனி விழுங்கி ஒரே நாடாக ஐக்கியப் பட்டதைப் போல, தெற்கு - வடக்கு ஏமன் நாடுகளது ஐக்கியமும் அமையும் என்று எதிர்பார்த்த ஏகாதிபத்தியவாதிகள், முதலாளிகளின் பகற்கனவு கடைசியில் நொறுங்கிப் போய் விட்டது. மக்களின் சுயவிருப்பத்தின் அடிப்படையில் அல்லாத எந்த ஐக்கியமும் நீடித்து நிற்காது என்பதை ஏமன் விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டது.

## கிழக்கு திமோர்: தொடரும் இன உரிமைப் போர்

நீண்டகாலமாக சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதமேந்திப் போராடிவரும் கிழக்கு திமோர் மக்களின் உரிமைக்குரல் உலக அரங்கில் மீண்டும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. அண்மையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில் நடந்த மாநாடும், அதில் வெளிநாட்டவர் யாரும் பங்கேற்கக் கூடாது என்று அந்நாட்டு அரசு விதித்த தடையும் கிழக்கு திமோர் விவகாரத்தை முன்னணிக்குக் கொண்டு வருவதில் போய் முடிந்துள்ளது.

பசிபிக் பெருங்கடலில் இந்தோனேசியாவுக்கு அருகே பிலிப்பைன்ஸ் நாட்டை அடுத்துள்ள சிறிய நாடுதான் கிழக்கு திமோர். போர்ச்சுகீசிய காலனி ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டிருந்த திமோர் மக்கள் ஃப்ரெடிலின் எனும் கொரில்லாப் போராளிகளின்



மணிலா மாநாட்டில் பங்கேற்க வந்த பிரதிநிதிகளுடன் கிழக்கு திமோர் ''ஃப்ரெடலின்'' இயக்கப் போராளி சானனா குஸ்மாவ்.

தலைமையில் ஆயுதமேந்திப் போராடி 1975-ல் விடுதலை அடைந்தனர். ஆனால் அடுத்த சில மாதங்களிலேயே விரிவாக்கப் பேராசை கொண்ட இந்தோனேஷிய சர்வாதிகார அரசு, கிழக்கு திமோரை ஆக்கிரமித்துக் கொண்டு அதைத் தனது 27-வது மாநிலமாகப் பிரகடனம் செய்தது. ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய மக்கள் மிருகத்தனமாக சுட்டுக் கொல்லப் பட்டார்கள். தென்னாப்பிரிக்காவை விடக் கேவலமான அடிமை நிலையில் அம்மக்கள் இருத்தி வைக்கப்பட்டார்கள். அன்னியர்கள் யாரும் கிழக்கு திமோரில் நுழைய முடியாதபடி தடுப்புக்காவல் போட்டும், இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்டும், கட்டாய கருத்தடை செய்தும் இந்தோனேஷியாவின் சுகர்தோ ராணுவக் கும்பல் வெறியாட்டம் போட்டது. கிழக்கு திமோரிலிருந்து இந்தோனேசியப் படைகள் வெளியேற வேண்டுமென ஐ.நா. மன்றமும் 75 நாடுகளும் பலமுறை கண்டனத் தீர்மானம் கொண்டு வந்த போதிலும், அமெரிக்காவின் அங்கியினுள் பதுங்கிக் கொண்டு சுகர்தோ கும்பல் தொடர்ந்து அட்டூழியம் புரிந்து வந்தது. ஆயினும் ஃப்ரெடலின் கொரில்லாக்கள் சுயநிர்ணய உரிமைக்காக தொடர்ந்து ஆயுதமேந்திப் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், கிழக்கு திமோரில் தொடரும் இனப்படுகொலையை உலக மக்களின் கவனத்துக்குக் கொண்டு வரவும், போராட்டத்துக்கு ஆதரவு திரட்டவும் பல்வேறு மனித உரிமை அமைப்புகள் மணிலாவில் மே மாத இறுதியில் ஓர் மாநாடு நடத்த தீர்மானித்தன. இம்மாநாட்டில் பிரெஞ்சு அதிபரின் மனைவி, அயர்லாந்தின் நோபல் பரிசு பெற்ற பிரமுகரான மேகயர் மற்றும் பல்வேறு நாடுகளது மனித உரிமை அமைப்புகளும் ஜனநாயகவாதிகளும் பங்கேற்பதாக இருந்தனர். இதைக்கண்டு ஆத்திரமடைந்த இந்தோனேஷிய ராணுவக் கும்பல், தமது நாட்டு உள்விவகாரங்களில் தலையிடுவதாகக் கூறி பிலிப்பைன்சு நாட்டை எச்சரித்தது. மாநாட்டைத் தடைசெய்யக் கோரியது. பிலிப்பைன்ஸ் நாட்டில்



படிப்பகம்

www.padippakam.com

''மாரோ'' தேசிய இனம் ஒடுக்கப்படுவதை ஒரு பிரச்சினையாக எழுப்புவோம் என்று மிரட்டியது. இதுதவிர நீண்டகாலமாக ஆயுதமேந்திப் போராடிவரும் கம்யூனிசப் போராளிகளுக்கு இந்தோனேஷிய ஆதரவு தெரிவித்தால் விபரீதமாகிவிடும் என்பதால் பீதியடைந்த பிலிப்பைன்ஸ் சர்வாதிகாரிகள், இம்மாநாட்டில் வெளிநாட்டினர் யாரும் பங்கேற்கக் கூடாது என தடைவிதித்தனர். வெளிநாடுகளிலிருந்து வந்த மனித உரிமை இயக்கத்தினரை மணிலா விமான நிலையத்திலேயே பிடித்து திருப்பியனுப்பினர். இக்கோழைத்தனமான நடவடிக்கையையும், இந்தோனேசியாவின் அடக்குமுறையையும் எதிர்த்து மனித உரிமை இயக்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தோனேசியாவும், பிலிப்பைன்சும் அமெரிக்காவின் நவகாலனிய நாடுகள்தான். இரண்டுமே ராணுவ சர்வாதிகார கும்பலின் பிடியில்தான் உள்ளன. ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் மற்றொரு நாடு தலையிடக் கூடாது என்பதைச் சாதகமாக்கிக் கொண்டு இருநாடுகளுமே சிறுபான்மை இனத்தவரை ஒடுக்கி அடக்குமுறையை ஏவி வருகின்றன. மனித உரிமை பற்றி வாய்கிழியப் பேசும் ஏகாதிபத்தியங்களும் தமக்கு ஆதாயமில்லாததால் கிழக்கு திமோர் பற்றி வாய் திறப்பதில்லை. பிலிப்பைன்சில் நடந்த மாநாடு வெற்றியடையாத போதிலும், அது கிழக்கு திமோர் விவகாரத்தை உலக மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதில் வெற்றி பெற்றுள்ளது.

## ஆபாச சீரழிவுக்கு எதிராக போராளிகளின் இயக்கம்

**ஆபாசப் புத்தகங்கள் - வீடியோ நாடாக்களை பொது மக்கள் முன்னிலையில் தீயிட்டுக் கொளுத்தும் மணிப்பூர் போராளிகள்.**

மணிப்பூரில் தேசிய சுய நிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் தடை செய்யப்பட்ட ஐக்கிய தேசிய விடுதலை முன்னணி (UNLF) போராளிகள், கடந்த ஏப்ரல் - மே மாதங்களில் சமூக சீரழிவுகளுக்கு எதிராக மாபெரும் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். தலைநகர் இம்பாலில் ஆபாச நீலத் திரைப்படச் சுருள்கள், வீடியோ நாடாக்கள், புத்தகங்கள், படங்கள் முதலானவற்றைக் கைப்பற்றி பொது



மக்கள் முன்னிலையிலேயே அவற்றைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். மாநில போலீசுத்தலைமையகத்துக்கு அருகிலேயே பகிரங்கமாக இப் போராட்டம் நடந்துள்ளது.

அரசு பயங்கரவாதத்தை ஏவி வட கிழக்கிந்திய மாநிலங்களில் தொடரும் சுய நிர்ணய உரிமைப் போரை ஒடுக்கிவரும் இந்திய அரசு இளைஞர்களைச் சீரழிக்கவும், போராளிகளின் பின்னே அணி திரளாமல் தடுக்கவும் ஆபாசச் சீரழிவைப் பரப்பி வருகிறது. இதன் விளைவாக வட கிழக்கிந்திய மாநிலங்களில் போதை மருந்து, எய்ட்ஸ், நீலத்திரைப் படங்கள், விபச்சாரம் முதலானவை நச்சுக் காளான்களாகப் பரவி வருகின்றன. இவை புரட்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறி விட்ட நிலையில், போராளிகள் இச் சீரழிவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர்.

போராளிகளின் எச்சரிக்கைக்குப் பிறகு, திரையரங்குகளில் ஆபாசப் படங்களைத் திரையிடுவது நிறுத்தப்பட்டது. மீறித் திரையிடப்பட்ட திரைப்படச் சுருள்கள் தீயிடப்பட்டன. வீடியோ பட விநியோகச் சுற்று மையங்களில் போராளிகள் திடீர் சோதனை நடத்தி ஆபாசப் படங்களைத் தீயிட்டனர். இதே போல் ஆபாசப் புத்தகங்களும் பறிமுதல் செய்யப்பட்டு நடுவீதியில் கொளுத்தப்பட்டன. இதுதவிர பாலியல் வன்முறை, கடத்தல், பெண்களை கேலி செய்தல் முதலான குற்றங்களில் ஈடுபடுவோரை மக்கள் மத்தியில் விசாரித்து போராளிகள் தண்டனை அளிக்கின்றனர். ஆபாசச் சீரழிவுகளுக்கு எதிராக போராளிகள் மேற்கொண்ட இயக்கம் வீச்சாகப் பரவத் தொடங்கியதும், பொதுமக்கள் - குறிப்பாகப் பெண்கள் தமது புகார்களைப் போராளிகளிடம் முறையிட்டு நடவடிக்கை எடுக்கக் கோரும் போக்கு பெருகி வருகிறது. அதே சமயம் போலீசையோ, கோர்ட்டையோ மணிப்பூர் மக்கள் நம்புவதில்லை.

## அழகிப் போட்டி: போலிகளின் பித்தலாட்டம்

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் அண்மையில் நடைபெற்ற உலக அழகிப் போட்டியில் மே. வங்கத்தைச் சேர்ந்த சுஷ்மிதா சென் தேர்வு செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து மே. வங்கத்தை ஆளும் 'மார்க்சிஸ்டு'களின் அதிகாரபூர்வ வங்க மொழி நாளேடான ''ஜன சக்தி'', இத்தகைய வக்கிரமான போட்டிகளைக் கண்டித்து நீண்ட கட்டுரையை வெளியிட்டது. இவற்றை ஆபாசச் சீரழிவுக் கலாச்சாரம், முதலாளித்துவ வக்கிரம் என்று சாடியதோடு, விபச்சாரிகளைப் பற்றியும் அவர்களை ஏலம்போடும் முதலாளிகள் பற்றியும் மார்க்சிய ஆசான் எங்கெல்ஸ் குறிப்பிட்டதை மேற்கோள் காட்டி அக்கட்டுரை எழுதப்பட்டிருந்தது. இக்கட்டுரையைப் படிக்கும் எவரும் 'மார்க்சிஸ்டுகள்' அழகிப் போட்டி முதலான ஆபாச கலாச்சாரத்துக்கு எதிரானவர்கள் என்றுதான் கருதுவார்கள்.

ஆனால், இதே 'மார்க்சிஸ்டுகள்' சில ஆண்டுகளுக்கு முன்பு நம்பிக்கை நட்சத்திர விழா, இந்திய மக்கள் நாடக மன்றத்தின் பொன்விழா முதலானவற்றை சினிமா நடிகர் - நடிகைகளைக் கொண்டு ஆபாசக் கூத்துக்களாக நடத்தினர். கல்கத்தாவில் நடந்த அழகிகள் அணிவகுப்பு, கல்கத்தா அழகிப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு பரிசும் வழங்கியுள்ளார். இந்த லட்சணத்தில் இப்போலிக் கம்யூனிஸ்டுகள் உலக அழகிப் போட்டியைக் கண்டிக்க என்ன அருகதை இருக்கிறது? அதைவிட, இப்போலிகளால்


படிப்பகம்

www.padippakam.com

சோசலிச நாடுகளாக சித்தரிக்கப்படும் சீனாவிலும் கியூபாவிலும் அழகிப் போட்டி நடத்தப்படுவது ஏன்? அது ஆபாசக் சீரழிவுக் கலாச்சாரமா அல்லது சோசலிசக் கலாச்சாரமா? — இப்படி பல தரப்பினரும் போலிகளின் யோக்கியதையை அம்பலப்படுத்தத் தொடங்கியதும், 'மார்க்சிஸ்டுகள்' வாயே திறக்கவில்லை.

போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் அழகிப் போட்டி நடந்தால் அது முற்போக்கு! முதலாளித்துவ ஆட்சியில் நடந்தால் அது ஆபாசம்! இதுதான் 'மார்க்சிஸ்டு'களின் நிலைப்பாடு. பெப்சி, கோகோ கோலா விளம்பரத்தை தமது ஏடுகளில் வெளியிட்டுக் கொண்டு, அமெரிக்காவை எதிர்ப்பதாகக் கூறும் இப்பச்சோந்திகளிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

## சிக்கிம் ஆட்சிக் கவிழ்ப்பு: காங்கிரசின் கைவரிசை

இமய மலையின் அடிவாரத்திலுள்ள வடகிழக்கிந்திய மாநிலமான சிக்கிமில், பல்வேறு இனங்களுக்கிடையே வெறுப்புணர்வைக் கிளறிவிட்டும், அதிருப்தியாளர்களை விலைபேசி அம்மாநில ஆளுங்கட்சியைப் பிளந்தும், காங்கிரசு கயவாளிகள் ஓர் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தியுள்ளனர். 1979 முதல் அம்மாநிலத்தில் தொடர்ந்து முதல்வராக நீடித்து வந்த நர்பகதூர் பண்டாரியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, அவரது கட்சியிலுள்ள அதிருப்தி கோஷ்டி காங்கிரசு தயவில் ஆட்சிக்கு வந்துள்ளது.

சிக்கிமின் மண்ணின் மைந்தர்களான புத்தியா, லேப்சா, லிம்போ முதலான இனத்தவர்கள் தாழ்த்தப்பட்ட பழங்குடி இனத்தவராவர். ஆனால் வெள்ளையர்களின் காலனியாதிக்கத்தின்போது நேபாளிகள் அம்மாநிலத்தில் குடியமர்த்தப்பட்டு இன்று மொத்த மக்கட் தொகையில் 75% ஆகப் பல்கிப் பெருகியுள்ளனர். இருப்பினும் 25% ஆக உள்ள சிறுபான்மை பழங்குடி இனத்தவருக்கு 34 பேர் கொண்ட சட்டசபைத் தொகுதிகளில் 13 தொகுதிகள் அவர்களுக்கான ரிசர்வ் தொகுதியாக உள்ளது. சிக்கிமை கடந்த 15 ஆண்டுகளாக ஆண்டுவந்த நர்பகதூர் பண்டாரி, நேபாளி இனத்தவராவார். இருப்பினும் அவரது ஆட்சியில் இனங்களுக்கிடையே மோதல் எதுவும் நடந்ததில்லை.

கடந்த ஏப்ரல் மாதத்தில்,. மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்த போது, சிக்கிமிலுள்ள புத்தியா, லேப்சா, லிம்போ மற்றும் பிற சிறுபான்மை பழங்குடி இனத்தவருக்கு மட்டும் வருமான வரிச்சலுகையை அறிவித்தது. சிக்கிமை ஆளும் சங்கராம் பரிஷத் கட்சியின் பெண் எம்.பியும், மாநில முதல்வர் பண்டாரியின் மனைவியுமான தில்குமாரி, இச்சலுகையை கடுமையாக எதிர்த்ததோடு, நேபாளிகள் உள்ளிட்ட அனைவருக்கும் வரிச் சலுகையைக் கோரினார்.

இதனால் ஆத்திரமடைந்த சிறுபான்மை பழங்குடியினர் முதல்வர் பண்டாரியையும் அவர் மனைவியையும் பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். பெரும்பான்மையினரான நேபாளிகள் அனைவருக்கும் வரிச்சலுகை கோரி எதிர் பேரணிகளை நடத்தினர். இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு பழங்குடி எம்.எல்.ஏக்களை காங்கிரசு தூண்டி விட்டது. அதிருப்தியாளர்கள் கலகத்தில் இறங்கினர். மே முதல் வாரத்தில் 18 எம்.எல்.ஏக்கள், தாங்கள் பண்டாரி மீது நம்பிக்கை இழந்துவிட்டதாக அறிவித்தனர். சட்டசபையில் அதிருப்தியாளர்கள் தமது பலத்தை நிரூபித்து புதிய அரசை நிறுவுமாறு கவர்னர் அழைப்பு விடுத்தார். அடுத்த இரு வாரத்திற்குள் சிக்கிம் சங்கராம் பரிஷத்தின் நிறுவனரும், மாநில முதல்வருமான பண்டாரி அக்கட்சியிலிருந்தே அதிருப்தியாளர்களால் வெளியேற்றப்பட்டார். அதிருப்தியாளர்கள் சங்கராம் பரிஷத் (எஸ்) எனும் புதிய கட்சியைத் துவக்கி சட்டசபையில் தமது பலத்தை நிரூபித்தனர். புதிய கட்சியின் தலைவரான சஞ்சமன் லிம்பூ புதிய முதல்வராக்கப்பட்டார்.

மத்திய அமைச்சர்களான அஜித் பாஞ்சா, ராஜேஷ் பைலட் மற்றும் காங்கிரசு பொதுச் செயலர்களில் ஒருவரான ஷிண்டே ஆகியோர் வெளிப்படையாகவே இந்த ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகளை இயக்கினர். சங்கராம் பரிஷத் கட்சியின் எம்.எல்.ஏ.க்களில் பலர் டெல்லிக்கும் பம்பாய்க்கும் கடத்திச் செல்லப்பட்டு, விருந்து - விபச்சாரத்துடன் நட்சத்திர ஓட்டல்களில் அடைத்து வைக்கப்பட்டனர். கட்சி மாறியவர்களுக்கு லட்சக் கணக்கில் பணம் தரப்பட்டதோடு, அமைச்சர் பதவி தருவதாகவும் வாக்குறுதி அளிக்கப்பட்டது.





முன்னாள் முதல்வர் பண்டாரி; காங்கிரசு தயவில் ஆட்சியைப் பிடித்துள்ள அதிருப்தி கோஷ்டித் தலைவர் லிம்பூ:

1975-இல் பாசிச இந்திரா, சிக்கிமை வலுக்கட்டாயமாக இந்தியாவுடன் இணைத்துக் கொண்ட பிறகு, இன்று வரை காங்கிரசுக்கு ஒரு எம்.எல்.ஏ. கூட அங்கு கிடையாது. 1984-இல் ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி பண்டாரி ஆட்சியை பாசிச இந்திரா கவிழ்த்த போதிலும், மீண்டும் அவரது கட்சியே அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. இப்போது மீண்டும் ஆட்சிக் கவிழ்ப்பு, ஆளும் கட்சி பிளவு ஆகியவற்றின் மூலமும், இனக்கலவரத்தைத் தூண்டுவதன் மூலமும் ஆட்சியைக் கைப்பற்ற காங்கிரசுக் கயவாளிகள் கீழ்த்தரமாக முயற்சிக்கின்றனர். பண்டாரி ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டதாக 1984-இல் கூறப்பட்ட புகாரை தூசுதட்டி இப்போது சி.பி.ஐ. மூலம் விசாரணை நடத்த மத்திய அரசு உத்திரவிட்டுள்ளது. அவர் திபேத் - சீனாவுடன் சேர்ந்து தேச விரோத சதிகளில் ஈடுபட்டதாக இப்போது புதிதாக குற்றச்சாட்டுக்களைக் கிளப்புகிறது. எதிர்பார்த்தபடியே, விலைபேசப்பட்ட அதிருப்தியாளர்கள் தமது புதிய கட்சியை காங்கிரசோடு ஐக்கியப் படுத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

காங்கிரசு அல்லாத அரசுகளைக் கவிழ்ப்பது, கட்சிகளைப் பிளவுபடுத்தி ஆதாயம் தேடுவது, இனக் கலவரத்தைத் தூண்டி விட்டு குளிர்காய்வது என்பதே பாசிச காங்கிரசின் பரம்பரைத் தொழில். சிக்கிம் ஆட்சிக் கவிழ்ப்பு இதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## இறால் மீன் பண்ணைகள் :

# தஞ்சை பஞ்ச பூமியாகிறது

**விவசாய நிலம் உவராகி, நிலத்தடி நீர் மாசுபட்டு விவசாயிகள் ஓட்டாண்டிகளாவது பற்றி அரசுக்கு அக்கறையில்லை.**

"தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்" என்ற பெருமையை தஞ்சை மாவட்டம் இனியும் தக்க வைத்துக் கொள்ளுமா? "காவேரியில் தண்ணீர் வரவில்லையென்றால் கடினம்தான்" என வெளி மாவட்டத்துக்காரர்களும் பிற மாநிலத்தவரும் வருத்தத்தோடு கூறலாம். ஆனால், இம் மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் புற்றீசல் போல் பெருத்துவரும் "இறால் மீன் பண்ணைகள்" அவ்வளமான பூமியைக் கூறு போட்டு, உவராக மாற்றிவரும் பொழுது, வருடம் முழுவதும் காவேரியில் தண்ணீர் கரை புரண்டு ஓடினாலும் தஞ்சை சீக்கிரமே பொட்டல் காடாய்ப் போய்விடுமோ என்ற அச்சம் தான் தற்பொழுது அப்பகுதி விவசாயிகளின் மனதில் குடிகொண்டிருக்கிறது.

வங்கக் கடலை ஒட்டி அமைந்துள்ள கீழ் தஞ்சை பகுதியில் மட்டும் - கொள்ளிடம் தொடங்கி காரைக்கால் வரையிலும் - 40-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் சுமார் 10,000 ஹெக்டேர் பரப்பளவில் இறால் மீன் பண்ணைகளை நடத்தி வருகின்றன. நாகப்பட்டினம் பகுதியிலோ பண்ணைகளின் எண்ணிக்கை 700-ஐ தொடப் போகிறது. இவற்றுள் ஸ்ரீராம், ஸ்பென்சர், ஹை-டே, மேக்னா ஃபுட்ஸ் போன்ற நாட்டின் மிகப் பெரிய தரகு முதலாளித்துவ நிறுவனங்களும் அடங்கும்.

ஸ்ரீராம் நிறுவனம் 350 ஏக்கர் பரப்பிலும், ஸ்பென்சர் நிறுவனம் 300 ஏக்கர் பரப்பிலும் பண்ணைகளை அமைத்துள்ளன. 4-லிருந்து 6 டன் எடையுள்ள இறால் மீன்களை இந்நிறுவனங்கள் 1 ஹெக்டேர் - கிட்டத்தட்ட 2.5 ஏக்கர் - பரப்பிலிருந்து பெறுகின்றன. 1 கிலோ இறாலின் சந்தை விலை ரூ. 300/- எனும் பொழுது, ஒரே அறுவடையில் இந்நிறுவனங்களின் வரவு - செலவு கிட்டத்தட்ட 25 கோடியைத் தொட்டுவிடும்.

இவ்வாளக மீன்கள் பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுவதால், அமெரிக்க டாலரில் கிடைக்கும் அதீத லாபம் காரணமாகத்தான் மிகப் பெரிய தரகு முதலாளித்துவ நிறுவனங்களும் பன்னாட்டு நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு இத்தொழிலில் முதலீடு செய்து வருகின்றன.

இடுபொருட்களின் விலையேற்றம், ஆற்றில் நீர் வராதது, மழையின்மை போன்ற பல காரணங்களால் விளைச்சல் குறைந்து மீள முடியாத கடன் தொல்லையில் சிக்குண்டு போயிருக்கும் சிறு-குறு விவசாயிகள்தான் மீன் வளர்ப்பு நிறுவனங்களின் முதல் குறி. "நிலத்திற்கு கூடுதல் விலை கொடுப்பது; தங்களது நிறுவனங்களிலேயே அவர்களுக்கு வேலை தருவதாக வாக்கு கொடுப்பது; கிராமத்து மக்களிடம் அங்கு மருத்துவமனை, பள்ளிக்கூடம் கட்டித் தருவதாக ஆசை காட்டுவது" - இப்படி வஞ்சகமான முறைகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை இடைவெளியின்றி வளைத்துப் போடுகின்றன, இவை.

நிலங்களை வாங்கிய பிறகு நிறுவனங்களின் வாக்குறுதியெல்லாம் காற்றில் கரைந்துவிடும் என சொல்லத் தேவையில்லை. இதோடு மீன் வளர்ப்பதற்காக குளங்கள் கட்டி முடித்த பிறகு, இந்நிறுவனங்கள் ஏற்படுத்தும் வேலை வாய்ப்பு, "தொழில் நுட்பங்களைக் கற்றுத் தருவதற்காக வெளிநாட்டினர்; உடல் உழைப்புக்காக உள்ளூர் விவசாயக் கூலிகள் சிலர்" என மிகக் குறைந்தபட்சமாக சுருங்கிப் போய்விடுகிறது. நிலத்தை விற்று கடனை அடைத்தபிறகு, மீன் பண்ணைகளிலும் வேலை வாய்ப்பற்ற நிலையில், சிறு-குறு விவசாயிகளும் நிலமற்ற கூலி விவசாயிகளாக மாறுவதைத் தவிர வேறுவழியில்லை.

ஒரு மீன் வளர்ப்பு பண்ணை உருவாகிறது என்றால், நூறிலிருந்து இருநூறு சிறு-குறு விவசாயிகள் தங்கள் நிலத்தை இழந்து போகிறார்கள். ஒரு ஹெக்டேர் நிலத்தில் நெல் பயிரிடப்படும் பொழுது 300 பேருக்கு வேலை தருவதாக அமைகிறது. இதை வைத்துக் கணக்கிடும்பொழுது இப்பகுதியில் மட்டும் 3 லட்சத்துக்கும் அதிகமான விவசாயக் கூலிகள் வேலை வாய்ப்பற்ற நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள். நிலமற்ற கூலி விவசாயிகள் இந்தியாவிலேயே அதிகம் வாழும் மயிலாடுதுறையைச் சுற்றியுள்ள பகுதிகள்தான் இப்பிரச்சனையால் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. இதோடு விளைநிலங்களின் விலையும் எட்டா உயரத்திற்குச் சென்றுவிட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒரு ஏக்கர் நிலத்தின் விலை ரூ. 10,000/- என்றிருந்தது; இன்று இருபத்தைந்தாயிரத்தைத் தொட்டுவிட்டது.

மேலும், பாதிப்புகளின் தீவிரம் இதோடு மட்டும் நின்றுவிடவில்லை. செயற்கை முறையில் இறால் வளர்ப்பதற்காக இப்பண்ணைகளில் குளங்கள் வெட்டப்பட்டு, அவற்றுள் உப்பளங்களைப் போல் கடல் நீர் சேமிக்கப்படுகிறது. கடல் நீரின் அதிகப்படியான உப்பு இறால் பண்ணைகளின் நிலங்களை மட்டுமல்லாது, நிலத்தடியின் வழியாக ஊடுருவி அருகிலுள்ள நிலங்களையும் நிலத்தடி நீரையும் மாசுபடுத்துகிறது.

இதோடு இக்குளங்களில் வளர்க்கப்படும் மீன்களுக்கு நோய் வராமல் தடுக்கவும், அதிக எடையுடன் வளர வேண்டும் என்பதற்காகவும் கூடுதலான அளவில் நோய் தடுப்பு மருந்துப் பொருட்களும் - இரசாயன உணவுப் பொருட்களும் நீரில் தூவப்படுகின்றன.

குளங்களில் புதிதாக நீர் நிரப்பப்படும் பொழுது, இந்த இரசாயனப் பொருட்கள் கரைந்த நீர் தூய்மையை

ஏற்றுமதிக்குத் தயாராகும் இறால் மீன்கள்





படிப்பகம்

www.padippakam.com


டுத்தப்படாமல் அருகிலுள்ள பொட்டல் வெளியிலோ, ஆற்றுப் படுகைகளிலோ வெளியேற்றப்படுகிறது. இது நிலம், நீர், நீர் வாழ் உயிரினங்களை மாசுபடுத்தி அழிப்பதோடு, அப்பகுதிவாழ் மக்களின் உடல் நலத்திற்கும் மிகக் கேடு விளைவிப்பதாக அமைகிறது.

இவ்வாறு பாதிக்கப்படும் அருகிலுள்ள விளைநிலங்களின் விவசாயிகள், பாசனத்திற்காக நீரை வெளியில் இருந்து கொண்டு வர வேண்டியுள்ளது. இதனால் செலவு கூடுதலாக அவர்கள் நிலங்களைத் தரிசாகப் போடுவது அல்லது இறால் வளர்ப்பு பண்ணைகளுக்கே விற்றுவிடுவதும் அதிகரித்த வண்ணம் நடைபெறுகிறது. தஞ்சையின் இப்பகுதிப் பெண்கள் குடிதண்ணீருக்குக் கூட மூன்று அல்லது நான்கு கிலோ மீட்டர்கள் நடந்து சென்று நீர் எடுத்துவர வேண்டிய அவலத்தில் தற்பொழுது தள்ளப்பட்டுள்ளார்கள். மேலும் ஒரு பண்ணையின் ஆயுட்காலமே ஐந்து வருடங்களுக்குள்தான். கடல்நீரை சேமித்து வைப்பதாலும், இரசாயனப் பொருட்களாலும் நிலம் முழுவதுமாக மாசுபட்டு, பின் எதற்குமே பயனற்றுப் போகிறது.

இப்பாதிப்புகளைத் தொடக்க நிலையிலேயே புரிந்து கொண்ட தஞ்சை விவசாயிகள் தற்பொழுது ''தமிழ்நாடு கிராம சுயாட்சி இயக்கம்'' எனும் அமைப்பின் கீழ் அணிதிரண்டு போராடத் தொடங்கியுள்ளனர். கடந்த சனவரி 28-ல், ''விளை நிலங்களை உப்பளமாக்காதே; விவசாயிகளின் வாழ்வைப் பறிக்காதே'' எனும் கோரிக்கைகளை முன் வைத்து மிகப் பெரிய ஊர்வலத்தையும், பொதுக்கூட்டம் ஒன்றினையும் நடத்தியுள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தின் அடிப்படையான விவசாயம் இப்படி பாழ்பட்டு வருகையில், மயிலாடுதுறை தொகுதி எம். பி. மணி சங்கர் அய்யரோ, ''இப்பகுதியை இந்தியாவின் துபாயாக மாற்றப் போவதாக'' பிதற்றித் திரிகிறார். ''போராட்டக்காரர்களை பொய்ப் பிரச்சாரம் செய்கின்றனர்'' என வசைபாடும் இவர், மீன் பண்ணை நிறுவனங்களின் அதிபர்களை இணைத்து, விவசாயிகளுக்கு எதிராக சங்கம் கட்டியுள்ளார். அதோடு, ''விவசாயம் நடைபெறாத இடங்களில்தான் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதாக'' பேட்டியளித்து மீன் பண்ணை நிறுவனங்களின் அறிவிப்பாளராகவே மாறிவிட்டிருக்கிறார்.

தஞ்சை என்றில்லாது, சிதம்பரனார் மாவட்டத்தின் தருவாய்குளம் பகுதியிலும் ஜெயா அரசு தனியாருடன் சேர்ந்து மீன் பண்ணைகள் அமைப்பதற்காக கடற்கரையை ஒட்டிய 50 ஹெக்டேர் நிலப்பகுதியைக் கையகப்படுத்தியுள்ளது. மீன் பிடிப்பதையே தங்கள் வாழ்க்கைக்கான தொழிலாகக் கொண்டுள்ள நாலாயிரத்துக்கும் அதிகமான அப்பகுதி மக்கள், ''நிலத்தடி நீர் மாசுபடும்; கடலினுள் இறங்கும் எங்கள் உரிமை பறிபோகும்; கடற்கரையோரங்களில் எங்களுக்கு கட்டுமரம் கட்டுவதற்குக்கூட இடம் இல்லாமல் போகும்'' என்ற காரணங்களைக் கூறி எதிர்த்து, நிலத்தை அளப்பதற்கு வந்த அதிகாரிகளைத் துரத்தியடித்துள்ளனர். அரசோ இதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்த ஒருவரை மிரட்டி பணிய வைத்ததுடன், ''வசிக்க வீடு, சுத்தமான குடிநீர், நல்ல சாலை வசதி'' என்ற ஆசை வார்த்தைகளைக் காட்டி போராடுபவர்களை மயக்கப் பார்க்கிறது.



குளங்களில் சேமிக்கப்படும் கடல் நீரால் அருகிலுள்ள விளை நிலங்களும் உவராகும் அபாயம்.

அதீத லாபம், ஏற்றுமதியினால் கிடைக்கும் அந்நிய செலாவணி இவை காரணமாக தரகு முதலாளிகளும் அரசும் கூட்டு சேர்ந்தே இந்தியாவெங்கும் வாய்ப்புள்ள கடற்கரையோரங்களில் எல்லாம் இப்பண்ணைகள் அமைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. தமிழ்நாட்டில் புதுக்கோட்டை, திருச்சி, தென்னாற்காடு மாவட்ட கடற்கரையோரப் பகுதிகளிலும், ஆந்திராவின் நெல்லூர் பகுதியிலும், ஒரிஸ்ஸாவின் சில்கா கடல் ஏரி, மேற்கு வங்கத்தின் சுந்தரவனக் காடுகள் பகுதிகளிலும் செயற்கை இறால் பண்ணைகளை தனியார் அமைப்பதற்கு நேரடியாகவே எல்லா வழிகளிலும் உதவி வருகிறது. அரசின் இந்த ஊக்குவிப்பும், தனியாரின் போட்டியும் பாரம்பரியமாக மீன்பிடி தொழிலிலும், விவசாயத்திலும் ஈடுபட்டுவரும் மீனவர்களின் - விவசாயிகளின் வாழ்க்கையைச் சீர்குலைப்பதாகத்தான் அமையும்.

உணவுத் தேவைக்காக இறால் பண்ணைகள், மூலப்பொருட்களுக்காக யூகலிப்டஸ் மரங்கள் என மூன்றாம் உலக நாடுகளின் சுற்றுப்புறச் சூழலை ஏகாதிபத்திய நாடுகள் நாசமாக்கி வருகின்றன.

இறால் பண்ணைகள் மட்டும் என்றில்லாது அந்நிய செலாவணி ஈட்டுவதற்காக சுற்றுலா பயணிகளைக் கவர்ந்திழுக்க கடற்கரையோரங்களில் ஐந்து நட்சத்திர விடுதிகளைக் கட்டுவது; சமூகக் காடுகள் திட்டம்; பழப்பண்ணைகள் அமைப்பது — போன்ற இவையாவும் சுற்றுப்புறச் சூழல் - இயற்கை வளங்களையும் பாதிப்பதோடு, பாரம்பரியமாக அப்பகுதிகளில் வாழ்ந்து தொழில் செய்து வரும் மக்களின் வாழ்க்கையைச் சீரழித்து, நாடோடிகளைப் போன்று துரத்தியும் விடுகிறது.

ஒரிஸ்ஸாவின் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பூரி மற்றும் கோனார்க் கடற்கரைப் பகுதிகளில் ஐந்து நட்சத்திர விடுதிகள் கட்டுவதற்காக 2227 ஏக்கர் நிலத்தை ''தாஜ்'' மற்றும் ''ஒபராய்'' நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விட்டுள்ளது மாநில பிஜூ பட்நாயக் அரசு. அப்பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களை வெளியேற்றுவதற்காக, ''விடுதிகள் கட்டினால் வேலை வாய்ப்பு பெருகும்; கூடுதல் சம்பளம் கிடைக்கும்'' எனப் புளுகியது. இதோடு, கடற்கரை ஓரங்களில் இருக்கும் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான சவுக்கு மற்றும் முந்திரி மரங்களையும் வெட்டுவதற்குத் திட்டம் தீட்டியது. அரசின் நோக்கங்களை அம்பலப்படுத்தி, அப்பகுதி மக்களைத் திரட்டி போராடத் துவங்கியதன் விளைவாக, தற்பொழுது இத்திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டது ஒரிஸ்ஸா அரசு.

கேரளாவின் கருணாகரன் அரசாங்



படிப்பகம்

www.padippakam.com

கம் சபரிமலைக்கு வரும் பக்தர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பது என்ற பெயரில், ஐந்து நட்சத்திர விடுதிகள், ஹெலிகாப்டர் இறங்கு தளங்கள், பூங்காக்கள் கட்டுவதற்காக மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்குப் பகுதி காடுகளை அழிக்கத் திட்டம் ஒன்றைத் தயாரித்தது. "இக்காடுகள் அழிந்து போனால் பம்பா நதியும் அதன் கிளை ஆறுகளும் வறண்டு போகும்; வன விலங்கு சரணாலயங்கள் அழிந்து போகும்" என எச்சரித்து, சுற்றுப்புற சூழல் இயக்கத்தினர் இத்திட்டத்திற்கு எதிராக வழக்கொன்றைத் தொடுத்தனர். இதனையடுத்து உயர்நீதிமன்றம் இத்திட்டத்திற்கு தடைவிதித்துள்ளது.

அடுத்து சமூக நலக்காடுகள் எனும் பெயரில் காகிதம் மற்றும் செயற்கை நூலிழை தயாரிக்கும் ஆலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களுக்காக யூகலிப்டஸ் மற்றும் ஊசியிலை மர வகைகளை வளர்க்க அரசு உதவி வருகிறது. இதற்காக வளமான காட்டுப்பகுதிகள் கூட அழிக்கப்பட்டு, அத்தகைய ஆலைகளுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. விரைந்து வளரும் இம்மரங்கள் முதலாவதாக நிலத்தடி நீரை அதிகரித்த அளவில் உறிஞ்சிக் கொள்ளும் தன்மையுடையன. குறிப்பிட்ட பகுதியின் மண் வளத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன்,




பாலையாகவும் மாற்றிவிடுகின்றன. இதோடு, வன விலங்குகளின் வாழ்விடங்களிலும் பெரிய மாற்றங்களை உண்டுபண்ணுகின்றன.

"மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் மலிவான உழைப்புசக்தி; நிலத்தின் மதிப்பு; அந்நியச் செலாவணியின் தேவை; இத்தகைய மரங்கள் விரைந்து வளர்வதற்கான சூழல்" - முதலியவற்றைக் கணக்கில் கொண்டு ஏகாதிபத்திய நாடுகள் தங்களது பன்னாட்டு நிதி நிறுவனங்கள் மூலமும், ஆலோசனைக் குழுக்கள் மூலமும் பல்வேறு மூன்றாம் உலக நாடுகளில் இந்த வகையான மரங்களை வளர்க்க நிர்ப்பந்திக்கின்றன. இதற்காக மானியம் கூட வழங்கி வருகின்றன. இதன் மூலம் தங்கள் நாட்டு சுற்றுச்சூழல் மாசுபடுவதில் இருந்து தப்பித்துக் கொள்கின்றன.

மேற்கத்திய நாடுகளின் உணவுத் தேவைகளுக்காக அமைக்கப்படும் இந்த இறால் பண்ணைகளும்கூட தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியப் பகுதிகளில் தான் அதிக அளவில் காணப்படுகின்றன. "அக்வா ஸ்டார் கார்ப்பரேஷன்", "மிட்சுபிஷி", "யுனிகார்டு" - போன்ற பன்னாட்டு நிறுவனங்களும் இறால் வளர்ப்புத் தொழிலில் நேரடியாக முதலீடு செய்து வருகின்றன. தாய்லாந்தில் 10 லட்சம் ஏக்கர் பரப்பில் பரந்து விரிந்திருந்த சதுப்பு நிலக்காடுகள், இறால் வளர்ப்பு காரணமாக முப்பதே ஆண்டுகளில் ஐந்து லட்சம் ஏக்கராக குறைந்து போனது; அந்நாட்டின் மேற்கு கடற்கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மீனவர்களின் வாழ்க்கையைச் சீரழித்தது. ஈக்குவேடார் நாட்டின் அடர்ந்த காடுகள் 80-களுக்குப் பின் வந்த இறால் பண்ணைகளால் முற்றிலும் அழிந்து போனது; "எங்கள் எதிர்ப்பை நாங்கள் வெளியே தெரிவிக்கவில்லையென்றால், இன்னும் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் முற்றிலுமாக அழிய வேண்டியதுதான்" என்கிறார்கள் அந்நாட்டு மீனவர்கள். பங்களாதேஷின் கடற்கரையையொட்டிய விவசாயிகளை ஒட்டாண்டிகளாக்கி, நகரங்களை நோக்கி துரத்தியடித்தது.

புதிய பொருளாதாரக் கொள்கை எனும் பெயரில் ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கு முக்கியத்துவமும், அந்நிய ஏகபோக நிறுவனங்கள் எத்துறையில் வேண்டுமானாலும் காலை ஊன்றலாம் என அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், பங்களாதேஷின் விவசாயிகளுக்கும், தாய்லாந்து நாட்டு மீனவர்களுக்கும் நேர்ந்த கதி நாளை நமது நாட்டு மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் நேராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

சில்கா பகுதியின் மீனவர்களின் போராட்டத்தையும், தஞ்சையின் விவசாயிகளின் போராட்டத்தையும் இணைத்து, அதனை நாடு மறுகாலனியாக்கப் படுவதற்கு எதிரான போராட்டமாக வளர்த்துச் செல்ல வேண்டும். இல்லையென்றால், நமது நாட்டு காடுகள் அழிந்து போய், நீர் நிலைகள் மாசுபட்டு வற்றிப்போய், நிலங்கள் உவராகி - தரிசாகி நாடு பாலைவனமாக மாறுவதைத் தடுத்துவிட முடியாது. பின் வறுமையையும் பட்டினிச் சாவையும்தான் நாம் நமது வருங்கால சந்ததிகளுக்கு விட்டுச் செல்ல முடியும். ● ரஹீம்

## சீரழிக்கப்படும் சில்கா ஏரி:

சில்கா - ஒரிஸ்ஸா மாநிலத்தில் அமைந்துள்ள மிகவும் புகழ்வாய்ந்த கடல் ஏரி. ஒரிஸ்ஸாவின் பூரி, கஞ்ஜம், குர்தா என்ற மூன்று மாவட்ட பகுதிகளையும் இணைத்து 900 கி.மீ. அளவிற்கு பரந்து விரிந்துள்ளது. இந்த ஏரி, இறால் மீன்கள் அதிகமாகக் காணப்படும் இந்த ஏரியை நம்பி வாழ்க்கையை நடத்தி வரும் இப்பகுதி மீனவர்களுள் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் இன்று இவர்களின் வாழ்க்கை அரசியல் தலைவர்கள் - ஆதிக்கசக்திகள் - போலீஸ் - கிரிமினல் பேர்வழிகளின் கூட்டு ஆதிக்கத்தினால் சிதைந்து போய் வருகிறது.

கடந்த 1991-ல் ஒரிஸ்ஸா மாநில அரசு இந்த ஏரியில் மீன் பிடிக்கும் இவர்களின் பாரம்பரிய உரிமையைப் பறித்ததோடு, ஏரிக்கரை பகுதியினை செயற்கை இறால் பண்ணைகள் அமைப்பதற்காகக் கையகப்படுத்திக் கொண்டது. பின் 24 கோடி ரூபாய் முதலீட்டில் டாடா நிறுவனத்துடன் சேர்ந்து இறால் பண்ணை அமைக்க திட்டம் தீட்டியது. மீனவர்கள் இதை எதிர்த்து இரண்டு ஆண்டுகள் கடுமையாகப் போராடிய பின், மாநில உயர் நீதிமன்றம் மீனவர்களின் உரிமையைப் பாதுகாத்தும், அரசின் திட்டத்தை ரத்து செய்தும் தீர்ப்பளித்தது.

ஆனாலும் 91-ல் அரசு கொண்டு வந்த "புதிய மீன் பிடிக்கொள்கை" சட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, "இறால் மீன் மாஃபியாக்கள்" எனும் மேலே கூறப்பட்டுள்ள கூட்டு கும்பல், அந்த ஏரியின் கரைப்பகுதியில் 80,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தை கூறு போட்டு இறால் பண்ணைகளை அமைத்துள்ளன. மீனவர்கள் கரை வழியாக ஏரிக்குள் இறங்கவும், கட்டு மரங்களை கரைக்குக் கொண்டு வரமுடியாதபடியும் தடுத்து வருகின்றனர். "இறால்தான் எங்களின் வாழ்க்கையைச் சீரழித்துவிட்டது" எனக் கதறும் மீனவர்கள் பலரின் கட்டுமரங்களையும் திருடிக் கொண்டுவிட்ட இக்கிரிமினல் பேர்வழிகள், ஏரியின் அருகே அமைந்துள்ள வளமான பூமியைக் கொண்ட பிதர்கனிகா சரணாலயத்தையும் விட்டு வைக்கவில்லை. கழிவுநீரை ஏரியிலே கொட்டுவதால், ஏரி மாசுபடுவதுடன் ஒரிஸ்ஸாவின் சதுப்பு நிலக்காடுகளும் பாதிப்புக்குள்ளாகும் அபாயம் நிலவுகிறது. ஆனால், அரசோ ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற கண்துடைப்பாக சில நடவடிக்கைகள் எடுத்ததற்கு மேல் ஒன்றும் செய்யவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# கருவறை நுழைவு போராட்ட நாள் பிரச்சார இயக்கம்



மே 24 '93 அன்று சீறிரங்கம் கோயில் கருவறையில் அம்பேத்கார் படத்துடன் ம.க.இ.கவினர்

கடந்த வருடம் மே 24-ம் தேதி திருச்சி - திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம் மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் அதன் தோழமை அமைப்புகளான பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்பினரால் இணைந்து நடத்தப்பட்டது. அது சனாதன - பார்ப்பனீய - இந்து மத சாதிய ஆதிக்கத்திற்கு கொடுக்கப்பட்ட பலமான அடியாகவும் இத்தகையப் போராட்டத்தைத் தொடர தொடக்கமாகவும் வெற்றியாகவும் அமைந்தது. ஓராண்டுக்குப்பின் இந்நாளை நினைவு கூறும் முகமாக பிரச்சார இயக்கம் திருச்சியில் மேற்கொள்ளப்பட்டது. ஆயிரக்கணக்கான பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலமும் திருவரங்கம், திருவானைக்காவல் பகுதிகளில் வீடுவீடாகவும் சென்று பிரச்சாரம் செய்தனர். இப்பகுதிகளில் 3 நாட்கள் கலைநிகழ்ச்சியோடு தெருமுனைப் பிரச்சாரம் செய்யப்பட்டது. பொதுக்கூட்டத்திற்கு போலீசு அனுமதி மறுத்துவிட்டது. எனினும் வீடுவீடாகச் சென்று ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் செய்த பிரச்சாரம் ஆயிரக்கணக்கான மக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றது. குளிர்பானம், நிதியளித்து ஆதரித்ததோடு பலர் இவ்வியக்கத்தில் தம்மையும் இணைத்துக் கொள்ள முன்வந்தனர். பல தி.க., தி.மு.க-வினர் உற்சாகமாக வரவேற்று ''நீங்கள்தான் சரியானவர்கள்'' என்று வாழ்த்திப் பேசினர்.

# தேவாரத்தில் சாதிக் கலவரம்

தேவாரத்தில் அம்பேத்கார் சிலை வைப்பது தொடர்பாக தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் தேவர் சாதியினருக்கும் இடையே மோதல் நடந்ததைத் தொடர்ந்து மே 2-ந் தேதி அப்பகுதியில் பதற்றம் நிலவியது. டீக்கடையில் சாதி வெறியன் ஒருவன் தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவரை சிலை தொடர்பாக வம்புக்கிழுத்து அசிங்கமாகத் திட்டினான். இதனால் கைகலப்பும் மோதல்களும் நடந்து இருசாதியினரும் தனித்தனியே போலீசில் வழக்கும் பதிவு செய்தனர். இதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் கோம்பை கிளைச்சாவடி முன்பு இருந்த அம்பேத்கார் மற்றும் முத்துராமலிங்கத் தேவர் சிலைகளை அகற்ற உத்தரவிட்டார். 18-5-94 அன்று இரவு 2 மணிக்கு 200-க்கும் மேற்பட்ட போலீசு பாதுகாப்போடு சிலையை இடித்தனர். செய்தி நிந்ததும் தாழ்த்தப்பட்ட சாதியினர் பெண்கள், குழந்தைகள் உட்பட 600-க்கும் மேற்பட்டோர் திரண்டு சுற்றி வளைத்துத் தடுத்தார்கள். வாகனங்களை மறித்து மறியல் செய்தார்கள். பின்பு தாசில்தார், டி.எஸ்.பி. முன்னிலையில் பாளையம் தாலுகா அலுவலகத்தில் 31-5-94 அன்று பேச்சு வார்த்தை நடக்கும் என்று அதிகாரிகள் அறிவித்த பின்னரே மக்கள் கலைந்து சென்றனர்.

குறிப்பிட்ட தேதியில் பேச்சு வார்த்தைக்காக பல கிராமங்களிலிருந்தும் தலித் மக்கள் தாலுகா அலுவலகம் முன் திரண்டனர். பா.ம.க. தலைவர்களும், தலித் இயக்கத் தலைவர்களும் பேச்சு வார்த்தைக்கு தயாராக இருந்தும் 6 மணி நேரமாகியும் மாவட்ட ஆட்சியாளர் பேசுவதற்கு வரவில்லை. இதனால் அவர்கள் முழக்கமிட்டு போராடவே, பிறகு வந்த டி.எஸ்.பி. பரசுராமன் ''இப்படி கத்திக்கிட்டிருந்தீங்கன்னா அடிச்சு உள்ள தள்ளி கேஸ் போட்டுடுவேன், ஒழுங்கா கலைந்து போங்கள்'' என்று மிரட்டியதோடு செயல்படுத்தவும் தயாராக இருந்தார். தலித் மற்றும் பா.ம.க. தலைவர்கள் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் அமைதியாக கலையவே மக்களும் கலைந்து சென்றுவிட்டனர். மதியம் பேச்சு வார்த்தைக்காக வந்த தேவர் சாதியினர், அகற்றிய முத்துராமலிங்கத் தேவர் சிலையை மீண்டும் வைத்துவிட்டதையறிந்து திரும்பிவிட்டனர். சாதிவெறியர்களைத் தண்டிக்காமல் அரசு, சாதிவெறிக்கு உரமிட்டு வளர்த்துவிட்டதுதான் இங்கு நடந்தது. தே. மீனாட்சிபுரம் - விவசாயிகள் விடுதலை முன்னணி கிளைச் செயலாளர் மகாலிங்கம், தலித் மக்களுடன் பாளையம் தாலுகா அலுவலகம் முன் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டு சில ஆலோசனைகள் கூறி போராட்டத்தை முன்னெடுக்க கூறியதை பா.ம.க. மற்றும் தலித் அமைப்பு தலைமைகள் நிராகரித்துவிட்டு கலைந்துவிட்டனர். தலித்மக்கள், தேவர் சாதியில் ஜனநாயக சக்திகளுடன் ஐக்கியப்பட்டு சாதி வெறியர்களையும், அரசையும் தனிமைப்படுத்தி பிரச்சினையில் பேசி தீர்த்துக் கொள்ள முன்வர வேண்டும். இதுவல்லாது உழைக்கும் மக்கள் சாதிவெறிக்குப் பலியாகி மோதிக்கொள்வது சாதி வெறியர்களும் அரசும் குளிர்காய்ந்து ஆதாயமடையவே பயன்படும்.

**தகவல் : வி.வி.மு., தே. மீனாட்சிபுரம்.**

# குடிநீர் கேட்டு போராட்டம்

திருச்சி - அரியமங்கலம் முதல் காட்டூர் வரையிலான பகுதிகளில் குடிநீர் வசதியின்றி மக்கள் அல்லாடுகின்றனர். எட்டு நாளைக்கு ஒருமுறை அதுவும் ஒரு குடும்பத்திற்கு நான்கு குடம் கிடைப்பதும் அரிது. நடுப்பகல் வெயிலிலும் நள்ளிரவிலும் தாய்மார்கள் கைக்குழந்தையுடன் மணிக்கணக்கில் தண்ணீருக்காக காத்திருக்கின்றனர். குழாய் இணைப்புகள் போதிய அளவிற்கு செய்து தரப்படாததோடு அரியமங்கலம் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிக் கட்டும் பணியும் ஆமை வேகத்தில் நடந்து வருகிறது. எனவே குடிநீர் வசதி செய்துதரக் கோரி பகுதியிலுள்ள புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் 27-5-94 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். பகுதியிலுள்ள பெண்கள் பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு முன்னதாக முன்னணியைச் சேர்ந்த வீரபாண்டியன், ஜெகதீசன் பகுதி மக்கள் சிலருடன் சென்று பேரூராட்சி அதிகாரியை சந்தித்து முறையிட்டனர். தினம் லாரிகளில் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யும்படி கோரியதற்கு ''அதிக செலவாகும், அந்தளவிற்கு நிதியில்லை; 31-5-94 அன்று நடைபெறும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியாளரிடம் பேசி ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறினார். வருகிற 15-6-94 முதல் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக் கட்டும் பணியும் குடிநீர் வாரியத்திடமிருந்து தமது பொறுப்பிற்கு வருவதால் விரைவில் கட்டப்படும் என்றும் தெரிவித்தார். குறிப்பிட்ட காலத்திற்குள் வேலைகள் முடிக்கப்படவில்லையெனில் போராட்டத்தை தொடர்வோம் என தோழர்களும் பகுதி மக்களும் எச்சரித்துவிட்டு வந்தனர்.

**தகவல்: பு.மா.இ.மு., திருச்சி**


படிப்பகம்

www.padippakam.com

# பெரியாரை வீரமணியிடமிருந்து விடுதலை செய்வோம், வாரீர்!

பார்ப்பன எதிர்ப்பு அமைப்புகளின் பார்ப்பனராகப் பிறந்த வர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றிய 'புதிய ஜனநாய க'த்தின் நிலைப்பாட்டிற்கு பதில் சொல்ல முடியாத தி.க. விடுதலை ஏடு தனது சத் தற்ற வாதங்களுக்கு முட்டுக்கொடுக்க முயன்றுள்ளது. ''புதிய ஜனநாயகம் ஒரு பெரியார் இயக்கத்தையும், பெரியாரை யும், அம்பேத்கரையும் பற்றி கேலியாக வும் அவதூறாகவும் விமர்சித்துள்ளது'' என்று புளுகி நமக்கு எதிராக ஆத்திரத் தைத் தூண்டுவதுதான் அந்த முயற்சி. அதற்காக பின்வரும் விவகாரத்தை எடுத் துக்கொண்டுள்ளது.

''மணியம்மையைப் பொருந்தாத் திருமணம் செய்து கொண்டு சொத்துக்கு வாரிசாக்குவது என்ற யோசனையை பெரியாருக்குக் கொடுத்த இராசாசி, அவ ரது திராவிட இயக்கத்தவரைவிட நம்பக மானவராக கருதப்பட்டார்'' - புதிய ஜனநா யகம் (1-15 ஆக '93)

''மேற்கண்ட கருத்துப்படி, 1. மணி யம்மையார் - தந்தை பெரியார் திரும ணம் பொருந்தாத் திருமணம். 2. மணி யம்மையாரைத் திருமணம் செய்து கொள்ள இராசாசி ஆலோசனை வழங்கி னார். 3. திராவிடர் இயக்கத்தவரைவிட பார்ப்பன ஆச்சாரியார் பெரியாருக்கு நம் பகமானவராகக் கருதப்பட்டார் என்பது போன்ற கருத்துக்கள் சுற்றிவளைத்துக் கூறப்படுகின்றன'' என்று எடுத்துச் சொல்லி பதிலளிக்க முயன்றுள்ளது, விடு தலை (7/1/94)

''என்பதாக''வோ, ''சுற்றி வளைத் தோ'' இல்லை. நேரடியாகவே இதைத் தான் குறிப்பிட்டிருந்தோம். ஆனால், வழக்கம்போல எதிராளியின் விமர்சனங் களுக்கு பதில் கூற முடியாதுபோது, பார்ப்பன முத்திரை குத்தி சமாளிக்கும் தனது கைதேர்ந்த உத்தியைத்தான் இந்த விவகாரத்திலும் விடுதலை, நம்பியிருக் கிறது. அதனால்தான் பின்வருமாறு அதை முடித்திருக்கிறது.

''தன் திருமண விஷயத்தில் ஆச்சா ரியாரின் ஆலோசனைப்படி செயல்பட் டார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. பெரியாரைக் கொச்சைப்படுத் தவே இவ்வாதம் அன்று சில பார்ப்பனீய பிற்போக்காளர்களால் பேசப்பட்டது. தற் போது அதே பிற்போக்குத்தனம், 'பார்ப் பனீய குணம்' (ம.க.இ.க.) புதிய ஜனநா யகத்திலும் வெளிப்படுவதில் ஆச்சரிய மில்லை'' என்கிறார், விடுதலை (7/1/94) அசுரன்.

இப்படிச் சொல்வது விடுதலை அசு ரனின் அப்பட்டமான, அறிந்தே செய்யும் புளுகுதான். ஆனால் அதைத் தந்திரமான சொற் பிரயோகம் செய்து மூடிமறைக்க முயலுகிறார். பெரியார் திருமண விஷ யத்தில் ஆச்சாரியாரிடம் ஆலோசனை பெற்றார் என்கிற வாதம் ''அன்று சில பாரப்பனீய பிற்போக்காளர்களால் பேசப்பட்டது'' என்றுதான் எழுதுகிறார். ''பார்ப்பனர்களால்'' என்றோ, ''பார்ப் பன பிற்போக்களார்களால்'' என்றோ எழுதவில்லை. அவருக்குத் தெரியும். இந்தவாதம் பின்னாளில் பெரியாரும் வீர மணியும் ''திராவிடப் பாரம்பரியத் தலை வர்கள்தாம்'' என்று ''புனிதப்படுத்திக் கொண்ட'' அண்ணாதுரை, சம்பத், நெடுஞ்செழியன், கருணாநிதி, மதியழ கன், அன்பழகன், என்.வி. நடராஜன் உட் பட எல்லா தி.மு.க. நிறுவனர்களால், தாய்க் கழகமான தி.க.வில் இருந்து பிரிந்து போனதற்காக வைக்கப்பட்ட வாதம்தான்; பார்ப்பனர் எவரும் வைத்த தில்லை.

இராசாசி ஆலோசனைப்படிதான் மணியம்மையைப் பெரியார் மணந்தார் என்பதற்கு ஆதாரம் இல்லை; பெரியா ரைக் கொச்சைப்படுத்தும் பிற்போக்குத்த னம் ''பார்ப்பனீய குணத்''தையே புதிய ஜனநாயகம் வெளிப்படுத்துகிறது என்று எழுதுகிறார், அசுரன்.

முதலாவதாக, அப்படி நாம் எழுதி யதற்கு பெரியாரே தம் கைப்பட எழுதிய விடுதலை விளக்கங்களே ஆதாரமாக உள்ளன. இரண்டாவது ஆதாரம், மேலே நாம் குறிப்பிட்ட தி.மு.க. நிறுவனர்கள் அனைவரும் அங்கீகரித்து அணிந்துரை எழுதிக் கையொப்பமிட்ட நூல். தி.மு.க. நிறுவனர்களில் ஒருவராகிய டி.எம். பார்த்தசாரதி எழுதிய ''தி.மு.க. வரலா று''. இந்நூலில் இராசாசியைப் பெரியார் சந்தித்த செய்தியைக் குறிப்பிடும் 54-ம் பக்கம் தொடங்கி, தி.மு.க. நிறுவப்பட் டது வரை, அதாவது 122-ம் பக்கம் முடிய 62 பக்கங்களில் இந்த வாதம்தான் உள்ளது.

இயக்கத்துக்காக தாம் எவ்வளவோ பாடுபட்டு உழைத்தும், தம்மை நம்பாது இராசாசியை நம்பி அவரது ஆலோச னையை ஏற்றதாகவும், தாம் எவ்வ ளவோ முயன்று அத்திருமணத்தை தடுக்க முடியாமற் போனதாகவும், பெரி யார் ஒரு பாசிச சர்வாதிகாரி என்றும் தி.மு.க. நிறுவனர்கள் வாதிட்டுள்ளனர். அந்நூலின் முதற்பதிப்பு 1961, ஜனவரி யில் வெளிவந்தது. பெரியார் இருந்த போதே மூன்றாம் பதிப்பும் வந்தது. அதை பெரியாரே அவரது வாழ்நாளில் மறுத்து எழுதவில்லை. இன்றைக்கு 32 ஆண்டுகளாகியும் வீரமணியும் அவரது கூலி எழுத்தாளர்களும் எவரும் மறுத்து எழுதவில்லை. ஆனால், பார்ப்பனர்கள் விஷயத்தில் திராவிடத் தலைவர்களின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தும் ஆதாரமாக இந்த வாதத்தை ''புதிய ஜன நாயகம்'' எழுதும்போது மட்டும் பிற் போக்குத்தனம் ''பார்ப்பனீய குணம்'' என்று முத்திரை குத்துகிறார். இதிலும் இரட்டை நாக்கு அணுகுமுறைதான்.

இருந்தாலும், நமது வாதத்திற்கான ஆதாரங்களைத் தேடி பழைய விடுதலை, தி.மு.க. வரலாறு ஆகியவற்றுக்குப் போக வேண்டியதில்லை. நமது வாதத் திற்கு பதில் என்கிற பெயரில் எழுது யுள்ள அதே விடுதலை தொடரின் அதே பகுதியில் நமது வாதத்திற்கு ஆதாரம் கொடுத்துள்ளார், அசுரன்.

''எனவே, சுமார் 4, 5 மாதங்களா கவே பொதுக்கூட்டங்களிலும், எனது பேச்சிலும், எழுத்திலும் தெரிவித்து வந்தி ருக்கிறபடியும், கோவை மாநாட்டில், எனக்கு வாரிசு ஏற்படுத்துவது பற்றித் தான் கவர்னர் ஜெனரலிடம் (சி.ஆர். அவர்கள்) பேசினேன்' என்று வெளி யிட்டபடியும், அதில் மக்களுக்கு உறுதி கூறினபடியும் சமீபத்தில் 19-ஆம் தேதி 'விளக்கம்' எனும் தலைப்பில் 'விடுதலை 'யில் குறிப்புக்காட்டி வந்திருக்கிற பகுதி

> இயக்கத்துக்காக தாம் எவ்வளவோ பாடுபட்டு உழைத்தும், தம்மை நம்பாது இராசாசியை நம்பி அவரது ஆலோசனையை ஏற்றதாகவும், தாம் எவ்வளவோ முயன்று திருமணத்தைத் தடுக்க முடியாமல் போனதாகவும், பெரியார் ஒரு சர்வாதிகாரி என்றும் தி.மு.க நிறுவனர்கள் வாதிட்டுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

யும், முதலில் எனக்கும், எனது பொருளுக்கும் சட்டப்படிக்கான வாரிசாக ஒருவரை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமும், அவசரமுமாகையால், நான் 5, 6 வருட காலமாகப் பழகி நம்பிக்கை கொண்டதும், என் நலத்திலும், இயக்க நலத்திலும் உண்மையான பற்றும், கவலையும் கொண்டு நடந்து வந்திருக்கிறதுமான மணியம்மையை எப்படியாவது வாரிசுரிமையாக்கிக் கொண்டு, அந்த வாரிசுரிமையையும் தனிப்பட்ட தன்மையும் சேர்த்து மற்றும் 4, 5 பேர்களையும் சேர்த்து இயக்க நடப்புக்கும் ஏற்பாடு செய்து இருக்கிறேன்''.

இதை 23.6.49 விடுதலையில் இருந்து அசுரன் 7/1/94 விடுதலையில் மேற்கோள் காட்டியுள்ளார். இதில் இருந்து தெளிவாகப் பெரியாரே ஒப்புக்கொண்டு, கோவை மாநாட்டில் அறிவித்துள்ளார் - தன் திருமண விஷயத்தில் ஆச்சாரியாரின் ஆலோசனைப்படிதான் அவர் செயல்பட்டார்! இந்த மேற்கோளில் குறிப்பிடும் 19.6.49 விடுதலை விளக்கம் இன்னும் நேரடியாகவே இருக்கிறது.

**''சி.ஆர். அவர்களிடம் நான் பேசியது (இரகசியம்) பற்றி கோவை மாநாட்டிலேயே பிரஸ்தாபிக்கப்பட்டது யாவருக்கும் தெரியும்.**

**''அது மிகுதியும் என் சொந்த விஷயம் என்று நான் முதலிலேயே தெரிவித்துவிட்டேன். கோவையிலும் அதை நான் தெரிவித்ததோடு ஒரு விஷயம் அதிகமாகவும் சொல்லிவிட்டேன். அதாவது இயக்க விஷயத்தில் இதுவரை அலைந்ததுபோல் அலைய உடல் நலம் இடம் கொடுக்கவில்லை என்றும் என்னைப்போல் பொறுப்பு எடுத்துக் கொள்ளத்தக்க ஆள் யார் இருக்கிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளவர்கள் கிடைக்கவில்லை என்றும், அவர் மூலம் ஏற்பாடு செய்துவிட்டுப் போக வேண்டுமென்று அதிக கவலை கொண்டு இருக்கிறேன் என்றும் இதுபற்றி சி.ஆர். அவர்களிடம் பேசினேன் என்பதாகவும் சொல்லியிருக்கிறேன். இதுதவிர உண்மையில் சி.ஆர். பேச்சில் இரகசியம் இல்லை.''** (அழுத்தம் எம்முடையது) இதை விடுதலை (19.6.49) ஏட்டில் இருந்து, தி.மு.க. வரலாறு (டி.எம். பார்த்தசாரதி) மேற்கோள் காட்டியுள்ளது. மூலமும் அப்படித்தான் உள்ளது.

இப்படி பெரியாரே தனது கைப்பட எழுதிய, விடுதலை ஏட்டிலேயே ஆதாரங்கள் இருந்தும், ஒருபுறம் அதே ஆதாரத்தை உள்ளடக்கி மேற்கோள் காட்டிவிட்டு மறுபுறம், தன் திருமண விஷயத்தில் ''இராசகோபாலாச்சாரியாரின் யோசனையைப் பெற்றார் என்பது அப்போது பெரியார் மீது ஏவப்பட்ட பார்ப்பனீய விஷமப் பிரச்சாரமாகும்'' என்று புளுகியிருக்கிறார்கள் வீரமணியும், அசுரனும்.

இதற்கு வசதியாக, அன்று தி.க.வில் எழுந்த உட்கட்சி எதிர்ப்பை சமாளிப்பதற்கு, பெரியாரே உண்மையே மூடி மறைக்க முயன்றதை வீரமணியும், அசுரனும் இப்போது பயன்படுத்திக் கொள்கிறார்கள். தன் திருமணம் - வாரிசு விஷயமாகத்தான் இராசாசியை (சி.ஆர்.) சந்தித்ததாக '49 ஜூன் மாத விடுதலை மூலம் ஒப்புக் கொண்ட பெரியார் அடுத்த மூன்றாம் மாதம் அதாவது '49 அக்டோபரில் பின்வருமாறு திருவாரூர் மாநாட்டில் பேசினார்.

''நான் எனக்கு நம்பிக்கையான ஆள் கிடைக்கவில்லை என்பதைத் திருமணத்தின் போது மட்டும் சொல்லவில்லை. அதற்கு முன்பாக இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். சுற்றியுள்ள ஆட்கள் மீது நம்பிக்கையில்லை என்று வெளிப்படையாக நான் தெரிவித்துவிடவே, சுற்றியிருந்த நபர்களும் வெளிப்படையாகவே தம் கிளர்ச்சியைத் துவக்கினர். கடைசியாக திருவண்ணாமலையில் நான், தோழர் இராசகோபாலாச்சாரியாரை சந்தித்ததையொட்டி கோவை மாநாட்டிலேயே தவறான பிரச்சாரம் செய்ய ஆரம்பித்த விஷமப் பிரச்சாரம் தஞ்சை மாணவர் மாநாட்டில் வளர்ந்து காட்டியது.

''திருவண்ணாமலைக்கு பாதாள லிங்கக் கோவிலைத் திறக்க வரும் கவர்னர் ஜெனரல் (ஆச்சாரியார்) என்னை அங்கு வந்து சந்திக்கும்படி தந்தி கொடுத்திருந்தார் என்றால் அதற்கு காரணம் என்னவாக இருக்க முடியும்? தனிப்பட்ட காரணம் எவ்வளவு இருந்தாலும், தென்னாட்டில் விரைவாக செல்வாக்கு பெற்று வரும் நம் கழகத்திற்கு தான் எதிரி அல்ல என்று காட்டிக் கொள்ளும் எண்ணமும் இருந்துதானே இருக்கும்?'' (திருவாரூர் மாநாடு -2.10.49- பெரியார் சொற்பொழிவு). விடுதலை (7/1/94) மேற்கோள் காட்டியவாறு, பெரியார் ''விஷமப் பிரச்சாரம்'' என்றுதான் குறிப்பிடுகிறார். ஆனால் வீரமணி, அசுரன் அதையே ''பார்ப்பனீய விஷயப் பிரச்சாரம்'' என்று அடைமொழி போட்டு எழுதுகின்றனர். அந்த அளவு ''பார்ப்பன'' வியாதி பிடித்துள்ளது. பெரியார் ''தனிப்பட்ட காரணம் எவ்வளவு இருந்தாலும்'' என்றும் இன்னும் ''உம்காரம்'' போட்டும் மழுப்ப முயன்றுள்ளார். ஆனால் வீரமணி, அசுரன் அப்பட்டமாகப் புளுகுகின்றனர்; பெரியார் ''தன் திருமண விஷயத்தில் ஆச்சாரியாரின் ஆலோசனைப்படி செயல்பட்டார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.'' பெரியாரைக் கொச்சைப்படுத்த பார்ப்பனீய பிற்போக்காளர்கள் முன்பு வைத்த வாதம், இதையே பு.ஜ. வெளிப்படுத்துகிறது என்று சாதிக்கின்றனர்.



ஆனால் அவர்களின் இந்த முயற்சியிலேயே புதிய ஜனநாயகத்தின் அடுத்த வாதமும் நிரூபிக்கப்பட்டுவிட்டது. ''திராவிட இயக்கத்தவரைவிட பார்ப்பன ஆச்சாரியார் பெரியாருக்கு நம்பகமானவராக கருதப்பட்டார்'' என்பதற்கு விடுதலையே கொடுத்துள்ளது, ஆதாரம். இன்னும் இதை மறுப்பார்களேயானால், அன்றைய தி.க.வின் அடுத்த மட்டத் தலைமையில் இருந்த அண்ணாதுரை, சம்பத் போன்றவர்கள் பணமோசடி செய்து தன்னை ஏமாற்றிவிட்டதாகவும், தனது சம்மதமின்றி, தனக்குத் தெரியாமலேயே விடுதலையில் அறிக்கை - கட்டுரைகள் வருவதாகவும் கூட குற்றஞ்சாட்டினார். சிலர் தம்மைக் கொலை செய்ய முயலுவதாகவும், நம்பகமான பொது மனிதர்களும் உளவுத் துறையினரும் தம்மை எச்சரித்து வந்ததாகவும் பெரியாரே எழுதினார்; இதற்கும் விடுதலையில் இருந்தே ஆதாரங்கள் தரமுடியும் என்று கூற விரும்புகிறோம்.

பார்ப்பனர்கள் அனைவருமே நம்பிக்கை துரோகிகள், வஞ்சகம் - சூழ்ச்சி அவர்களது பிறவிக் குணம் என்று எச்சரித்துவரும் திராவிட இயக்கத் தலைவர்களே தமது இயக்கத்தவரைவிட பார்ப்பனர்கள் மீது மிகவும் நம்பிக்கை வைத்து வருகின்றனர் என்பதுதான் நமது வாதம்; பெரியாருக்கும், அவரது இயக்கத்தின் பிற தலைவர்களுக்கும் இடையிலான உறவு பற்றிய பிரச்சினை இங்கு பிரதானமில்லை என்பதால் இதை இத்தோடு நிறுத்திக் கொள்கிறோம். அதேபோல பெரியாரின் பொருந்தாத் திருமண விஷயத்தில் பார்ப்பன ஆச்சாரியார் மீது நம்பிக்கை வைத்து ஆலோசனை கேட்டதைத்தான் நமது வாதத்தில் வலியுறுத்த விரும்பினோம். ஆனால் விடுதலை அசுரன், ''பொருந்தாத் திருமண'' விவகாரத்துக்கு வாதத்தை இழுத்துச் சென்றுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

முன்பு பெரியார் குறித்து கேடயம் - மன ஓசை கும்பல் தவறாகக் குறை கூறிவிட்டார்கள் என்பதற்காக, அதற்குப் பதில் சொல்வதைவிட்டு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் மீது அவதூறு எழுதியது, வீரமணி கும்பல். இப்போது பெரியாரின் பொருந்தாத் திருமணத்தை நியாயப்படுத்துவதற்காக, இன்சா என்கிற பெண்ணுடன் லெனின் ''உறவு'' வைத்துக் கொண்டிருந்ததாக எழுதிய முதலாளித்துவ எழுத்தாளன் ஒருவனது அவதூறை விடுதலை அசுரன் விழுங்கி, வாந்தி எடுத்திருக்கிறார். அந்த உறவு பொருந்துமா? பொருந்தாதா? என்று விளக்கம் வேறு கேட்டுள்ளார். மிகத் தெளிவாகவே கூறுகிறோம். கம்யூனிசத்துக்கும், அதன் தலைவர்களுக்கும் எதிராக ஏகாதிபத்திய - முதலாளித்துவ உலகம் எப்படிப்பட்ட அவதூறுகளை, கொடிய நஞ்சைப் பரப்பி வருகிறது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அத்தகைய அவதூறுகளில் ஒன்றுதான் இதுவும். அப்படி இல்லை, உண்மைதான் என்று ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டால், லெனினோ, வேறு யாராக இருந்தாலும் ''தகாத உறவு'' தான் என்று ஒப்புக் கொள்வோமே தவிர, வீரமணிகள் - அசுரன்கள் செய்வதைப் போல நியாயப்படுத்தவோ, மழுப்பவோ மாட்டோம்.

ஆனால் அவர்கள், பெரியாரின் திருமணத்தை நியாயப்படுத்த 80 வயது பெர்ட்ரண்ட் ரசல், 18 வயதுப் பெண்ணை நான்காவது முறையாக மணந்து கொண்டதை மேலை நாட்டுப் பகுத்தறிவாளர்கள் பொருந்தாத் திருமணம் என்று கண்டிக்கவில்லை என்று சான்று காட்டுகிறார்கள். அதுசரி, ஆனால், பெரியாரே மணியம்மையை மணமுடிப்பதாக முடிவு செய்வதற்கு முன்புவரை அத்தகைய திருமணத்தைக் கண்டித்தாரா, இல்லையா? வயது வேறுபாட்டைக் காரணமாக வைத்து ''பொருந்தாத் திருமணங்கள்'' என்று பெரியார் அவற்றை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வந்தாரா, இல்லையா? அதைத் தானே மீறித் திருமணம் செய்து கொண்டது சரியா, தவறா?

''பொருந்தாத் திருமணத்தை அவர் கண்டித்ததைக் கேட்டு கிழவர்கள் கலங்கினர்; குமரிகள் குதூகளித்தனர். காமப் பித்து கொண்டலையும் ஆண்கள் வயோதிகப் பருவத்திலே வாலிபப் பெண்ணைச் சொத்து சுகம் கிடைக்கும் என்று ஆசை காட்டியோ, வேறு எந்தக் காரணம் காட்டியோ, திருமணத்துக்குச் சம்மதிக்கச் செய்தால், மானரோஷத்தில் அக்கறையுடைய வாலிபர்கள் அந்தத் திருமணம் நடைபெற இடந்தரலாமா என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே முழக்கமிட்டார் - நமக்கெல்லாம் புதுமுறுக்கேற்றினார்.

''பிள்ளையில்லை என்ற காரணத்



துக்காக, சொத்துக்கு வாரிசு இல்லை என்ற காரணத்துக்காக மனைவியைத் தேடும் கொடுமையை ஆயிரமாயிரம் மேடைகளிலே கண்டித்தார்.

''பொருந்தாத் திருமணம் நாட்டுக்கு பெரியதோர் சாபக்கேடு என்று முழக்கமிட்டார். அந்தக் காலத்துத் தசரதன் முதற்கொண்டு இந்தக் காலத்து 'தங்க பஸ்பம்' தேடும் கிழவர் வரையிலே எள்ளி நகையாடினார். தன்மான இயக்கம் தழைத்திருக்கும் இடத்திலே ''பொருந்தாத் திருமணம்'' யார் வீட்டிலாவது எந்தக் காரணத்திலாவது நடைபெற இருந்தால் போலீஸ் பந்தோபஸ்து தேட வேண்டி அளவுக்கு நாட்டு மக்களின் உணர்ச்சி வேகம் உருவெடுத்தது.

''ஏற்கனவே பொருந்தாத் திருமணம் செய்து கொண்டவர்கள் கூட வெட்கத்தால் - வேதனையால் தாக்கப்பட்டனர்.

''என் போன்ற வயதானவர்கள் கல்யாணம் செய்து கொள்ள எண்ணக் கூடாது - எப்படியாவது அப்படி ஓர் எண்ணம் வந்து தொலைந்தால், தும்பு அறுந்ததாக, (அதாவது விதவையாக) ஒரு நாற்பது, ஐம்பது வயதானதாக ஒரு கிழத்தைப் பார்த்துக் கல்யாணம் செய்து தொலைக்கட்டுமே - பச்சைக் கொடி

திக.வின் அடுத்த மட்டத் தலைமையில் இருந்த அண்ணாதுரை, சம்பத் போன்றவர்கள் பண மோசடி செய்து தன்னை ஏமாற்றி விட்டதாகவும், தனது சம்மதமின்றி விடுதலையில் அறிக்கை - கட்டுரைகள் விடுவதாகவும் சிலர் தம்மைக் கொலை செய்ய முயலுவதாகவும் பெரியாரே எழுதினார்.

போன்ற ஒரு பெண்ணை, வாழ்வின் சுகத்தை அறிய வேண்டிய வயதும், பக்குவமும் கொண்ட பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதா? - காரணம் ஆயிரம் காட்டட்டுமோ, எந்த மானமுள்ளவன் அந்தக் கல்யாணத்தைச் சரியென்று சொல்லுவான்? யாருக்குச் சம்மதம் வரும்?'' என்று அவர் பேசிய பேச்சுக் கேட்காத ஊரில்லை'' (தி.மு.க. வரலாறு பக்-68)

ஆகவே, பொருந்தும் திருமணம், பொருந்தாத் திருமணத்திற்கு, புதிய ஜனநாயகத்திடம் விளக்கம் கேட்கும் முன்பு விடுதலை வீரமணியும் அசுரனும் தமது அறிவு ஆசான் பெரியாரைத் திருப்பிப் பார்த்தாலே புரியும். திருமணம் என்பது அடிப்படையில் ஆணும், பெண்ணும் ''மண உறவு'' கொண்டு வாழும் நோக்கமுடையதுதான். அதற்கான தகுதி உடையவர்கள் தானா என்பதே அடிப்படை. வயது வேறுபாடு அதைத் தீர்மானிக்கும் ஒரு அளவாக அமைகிறது. ''மண உறவு' 'க்கான தகுதி இல்லாவிட்டாலும், அந்த வயதை கடந்த இருவர் ஒருவருக்கொருவர் நேசங்கொண்டு, இணைந்து, ஆதரவு பரிமாறிக் கொள்வதற்காக மணம் புரிந்து கொள்வதானால் இருவருமே அந்த வயதைக் கடந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதையே முன்பு பெரியார் வலியுறுத்தி வந்தார்; வாழ வேண்டிய பெண்ணின் உணர்வுகளைக் கொன்றுவிடக் கூடாது, மதிக்க வேண்டும் என்பதற்காகவே அப்படிச் சொன்னார். தமக்கு வாரிசுகள் இல்லை. தாலி பாக்கியம் நீண்ட ஆயுளைத் தரும் என்ற மூடநம்பிக்கை, மனவக்கிரங்கள் போன்ற காரணங்களால் கிழவர்களான செல்வச் சீமான்கள் கன்னிப் பெண்களை மணப்பது வழக்கமாக உள்ள சமூகக் கொடுமையை எதிர்த்து பெரியார் எடுத்து இயக்கம்தான் பொருந்தாத் திருமண எதிர்ப்பு. மண உறவு கொண்டு வாழும் நோக்கம், தகுதி தவிர வேறு எந்தக் காரணத்தைச் சொன்னாலும், அதை மணப்பெண் ஏற்கும்படி செய்தாலும் அது பொருந்தாத் திருமணமே என்றார் பெரியார்.

ஆனால், பெரியாரே பொருந்தாத் திருமணம் செய்து கொண்டதை இரண்டு காரணங்கள் கூறி நியாயப்படுத்த முயலுகிறது, விடுதலை. முதலாவதாக, ''வயது வந்த இருவர் எவ்வித பித்தலாட்டமும் இன்றி விரும்பி இணைவதை மேலை நாட்டில் பகுத்தறிவாளர்கள் பொருந்தாத் திருமணம் என்று நிலைப்பாடு எடுத்ததில்லை'' என்கிறது, விடுதலை. மேலை நாடுகளின் சமூகப் பண்பாட்டு மதிப்பீடுகளை அப்படியே ஏற்றுக் கொள்வது சரிதானா? அங்கு பொது இடங்களில் ஆணும் பெண்ணும் கட்டிப் பிடித்து முத்தமிடுவது, அரைகுறை ஆடையுடன் அலைவது முதல் நிர்வாண நடனவிடுதிகள், நிர்வாண பூங்காக்கள், ஓரின உல்



படிப்பகம்

www.padippakam.com

லாச வாழ்வு வரை சட்டபூர்வமாக ஏற்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் ஏற்க முடியுமா? இல்லை, அரபு நாட்டுக் கிழவர்கள் இங்கே வந்து கன்னிப் பெண்களை 'மணந்து' கொள்வதையும், அதற்கு அந்த மணப்பெண்களையே சம்மதம் தெரிவிக்க வைப்பதையும் ஏற்க முடியுமா?

இரண்டாவதாக, திருமணத்தின் போது மணியம்மையார் சுய அறிவும், மனப்பக்குவமும் உள்ள பெண்ணாக இருந்தார். பகுத்தறிவும் சீர்திருத்த எண்ணமும், சுயமரியாதை உணர்வும் பெற்றிருந்தார். அவர் மனம் ஒப்பியே திருமணம் நடந்தது. கட்டாயப்படுத்தியோ, பலவந்தமாகவோ, பணம் கொடுத்து விலைக்கு வாங்கியோ நடந்ததல்ல. எந்த நிமிடத்திலும் ரத்து செய்துவிட்டு மறுமணம் செய்து கொள்ள அவருக்கு உரிமை இருந்தது என்கிறது விடுதலை.

''பெரியார் தனது சொத்துக்களுக்கு வாரிசு ஏற்படுத்த முனைந்தார். அன்றைய கட்டத்தில் ஒருவர் ஓர் ஆண்பிள்ளையை தத்து எடுத்தோ, அல்லது ஒரு பெண்ணை மணந்தோ வாரிசு ஏற்படுத்த முடியும் என்ற நிலையில் இருந்தது. இந்நிலையில் பெரியார் தனது அண்ணன் மகன் ஈ.வெ.கி. சம்பத்தை தத்து எடுக்கும் முயற்சி ஈடேறாமல் தடுக்கப்பட்டதால், தன்னுடன் 6 ஆண்டுகள் உதவியாளராக இருந்த தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான மணியம்மையாரை மணந்தார். மணியம்மையார் மூலம் தனக்கு குழந்தை பிறக்கும் என்ற நோக்கில் இந்தத் திருமணம் நடைபெறவில்லை'' என்கிறது, விடுதலை.

மணியம்மையைத் தனது மனைவியாகவும், சொத்துக்களுக்கு வாரிசாக்கவும் மட்டும் பெரியார் பொருந்தாத் திருமணம் செய்யவில்லை. ''இயக்கத்திலே உள்ள எவரிடமும் எனக்கு நம்பிக்கையில்லை. எனக்கு, என் நம்பிக்கைக்கு உரியவர்களாக யாரும் தென்படவில்லை. இயக்கத்தை நடத்திச் செல்லும் தகுதியும் திறமையும் வேறு யாருக்கு இருப்பதாக நான் எண்ணவில்லை'' என்று பலமுறை கூறி வந்த பெரியார், மணியம்மையை மணப்பது ''என் ஆயுள்வரையும், கூடுமான அளவு என் ஆயுளுக்குப் பின்னும், ஒழுங்காக இயக்கத்தை நடத்துவதற்கான ஏற்பாடு'' என்றே கருதினார். இதன்மூலம் இயக்கத் தலைமைக்கும் மணியம்மையை வாரிசாக்கினார்.

தி.மு.க. நிறுவனத் தலைவர்கள், தமிழக மக்கள் மன்னிக்க முடியாத ஆயிரம் தவறுகள் செய்துள்ள போதிலும், அவர்கள் இது குறித்து எழுப்பிய பிரச்சினைகள் எதுவுமே பெரியாராலோ, ''அவரது'' சொத்துக்களுக்கு வாரிசான வர்களாலோ இன்னும் பதிலளிக்கப்படாமலேயே உள்ளன. அவை:



''ஐயோ, என் புருஷனை ஏன் கொல்லுகிறாய் என்ற பதைபதைத்துக் கேட்கும் பாவையைப் பார்த்து, அவனைக் கொல்வது காரணமற்றது என்றா கருதுகிறாய், உன்னைப் பெண்டாளவே அந்தக் காரியம் செய்கிறேன்'' என்று கூறுவதுபோல இயக்கத்தையும் இயக்கச் சொத்தையும், இயக்க நடப்பையும் எனக்குப் பிறகு மணியம்மைக்குத் தருவதற்காகவே ''அதை'' எப்படியாவது சட்டபூர்வமாக என் ''வாரிசு'' ஆக்கிக் கொள்ளத் தீர்மானித்துவிட்டேன் என்று தெரிவிக்கிறார், பெரியார்.

''ஒரு தவறு இன்னொரு தவறுக்குக் காரணமாகக் காட்டப்படுகிறது. பொருந்தாத் திருமணத்தால் ஏற்படும் இழிவையும், பழியையும் நாம் தாங்கிக் கொள்வதுமல்ல, இந்தத் தகாத முறையினால் ''தலைவி'' ஆகப்போகும் மணியம்மையின் கீழிருந்து நாம் எதிர்காலத்தில் பணியாற்றவும் தயாராக வேண்டும்!

''அவர் நலத்திலும், இயக்க நலத்திலும், உண்மையான பற்றும் கவலையும், இயக்கம் இருபது முப்பது பேர் கொண்டவர்களாக இருந்த காலம் முதற்கொண்டு பாடுபட்டு வந்த, எதிரிகளிடம் அடி உதைபட்டு வந்த யாருக்கும் கிடைக்காதது, இந்த அம்மைக்கு உண்டு. இந்த சூட்சுமம் நமது தலைவர் அம்மையுடன் பழகிய 5, 6 வருட காலத்திலே கண்டறிந்து கொள்கையை மறந்து, பொருந்தாத் திருமணம் புரிந்து கொண்டாவது, அந்த அம்மையை நமக்குத் ''தலைவி'' ஆக்குகிறார், இயக்கத்துக்கு வாரிசாக வேண்டுமாம்!!

> பெரியாரே மணியம்மையை மணமுடிப்பதாக முடிவு செய்வதற்கு முன்புவரை பொருந்தா திருமணத்தைக் கண்டித்தாரா, இல்லையா? அவற்றை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வந்தாரா, இல்லையா? அதை தானே மீறித் திருமணம் செய்து கொண்டது சரியா, தவறா?

''ஐதராபாத் நிஜாமுக்கு இருக்க வேண்டிய கவலை, ஆதீன கர்த்தர்களுக்கு ஏற்பட வேண்டிய கவலை, பகுத்தறிவு இயக்கத் தலைவருக்கு ஏன் ஏற்படுகிறதோ தெரியவில்லை. கட்சிக்கு வாரிசு! வாரிசு முறை எதற்கு? யார் செய்யும் ஏற்பாடு? எந்தக் காலத்து முறை!

''ஒரு இயக்கத்துக்கு ''வாரிசு'' ஏற்படுத்துவது என்பது ஜனநாயக முறைக்கு ஏற்றது தானா? அல்லது நடைமுறையிலே வெற்றிதரக் கூடியது தானா? திராவிடர் கழகம், அதற்கென உள்ளதாகக் கூறப்படும் சொத்து என்பது இன்னொருவருக்கு வாரிசு முறைப்படி தரப்பட வேண்டிய காட்டு ராஜாங்கம்தானா?

''இயக்கத்திலே, இன்று தலைவராக இருப்பவருக்கு, இயக்கத்திலுள்ள யாராவது துரோகி, கேடு செய்பவன் என்று தோன்றினால், நிரூபிக்க முடியுமானால், அப்படிப்பட்டவர்களை விரட்டிவிட்டு, இயக்கத்தை, உண்மையான இயக்கப் பற்றும் செல்வாக்கும் உள்ளவர்கள் தனக்குப் பிறகு நடத்திச் செல்வதற்கு இடமளித்து விடுவது முறையேயொழிய, என் வாரிசிடம் ஒப்படைக்கிறேன் என்று பரம்பரை பாத்தியதைப் பேசுவதா? அதற்காகப் புதிய பரம்பரையைத் தேடுவதா?'' (தி.மு.க. வரலாறு பக் 77-79)

இந்த வாதங்கள், கேள்விகள் எல்லாம் பார்ப்பனீய விஷமப் பிரச்சாரம்; பார்ப்பனீய குணம் - பார்ப்பனீயப் பிற்போக்காளர்களின் புளித்துப்போன வாதம் என்று முத்திரை குத்துவதால் ஓய்ந்துவிடாது.

ஆகவே, ஊருக்குக் குறிசொல்லும் பல்லி கழுநீர் தொட்டிக்குள் விழுந்து செத்துப்போன கதையைப்போல புத்தர் காலத்தில் இருந்து பார்ப்பனர்களின் அடுத்துக்கெடுக்கும் நரித்தனம், சதி, சூழ்ச்சி குறித்து தமிழ் மக்களை எச்சரித்து வரும் இந்தத் திராவிட இயக்கத் தலைவர்களின் தலைவர் பெரியாரே ஆச்சாரியாரின் யோசனை கேட்டு பொருந்தாத் திருமணம் செய்து கொண்டார்; அவரது இயக்கத்தவரைவிட ஆச்சாரியாரையே நம்பகமாக கருதினார் என்று நம் எடுத்துக்காட்டியதில் என்ன தவறு? ஒருபுறம் பார்ப்பனர்களோடு இரகசிய உறவு வைத்துக் கொள்வது, மறுபுறம் தகுதியுடைய பார்ப்பனப் பிறப்பாளர்களை பார்ப்பனீய எதிர்ப்பு அமைப்புகளில் சேர்ப்பதில் தவறில்லை எனப் பகிரங்கமாக அறிவித்துச் செயல்படும் அமைப்புகள் மீதும் பார்ப்பன முத்திரை குத்துவது - இப்படி விடுதலை வீரமணிகள் இரட்டை நாடகமாடுகிறார்கள் என்று நாம் கூறிவதில் என்ன தவறு? (தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

## 'டான்சம்' ஆலையில் அநாகரிகப் போர்வழி

தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ், மாயனூர் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு கோரிக்கையை பேச்சுவார்த்தை நடத்தி இழுத்தடித்து வருகிறது, ஆலை நிர்வாகம். இதனால் தொழிலாளர்கள் தரப்பில் வேலை நிறுத்த அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை விளக்கி பொது தொழிற்சங்கத்தின் சார்பாக வாயில் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் அண்ணாவி என்பவர் பேசும் போது நக்சல்பாரிகளை சமூகவிரோதிகளாக சித்தரித்துப் பேசினார். பேசி முடித்தபின் இவரிடம் கரூர் பகுதி புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி அமைப்பாளரும் இவ்வாலைத் தொழிலாளியுமான பி.தவமணி ''உழைக்கும் மக்களுக்காக பாடுபடுகிற நக்சல்பாரிகளை இப்படி பேசியது சரியா'' என்று கேட்டுள்ளார். அதற்குள் பொது சங்கத்தின் செயலர் செங்குட்டுவன் இடைபுகுந்து தகராறு செய்யவே தவமணியும் அவரது நண்பர்களும் கண்ணியமாக ஒதுங்கிக் கொண்டன'

வாயில் கூட்டம் முடிந்து திரும்பும்போது செங்குட்டுவன் வேண்டுமென்று வம்புக்கு வந்து தகாத வார்த்தைகளால் திட்டியதோடு தவமணியை தாக்கவும் செய்தார். மேலும் கைகலப்பு நடப்பதற்குள் தொழிலாளர்கள் தலையிட்டு தடுத்து விட்டனர். செங்குட்டுவனின் இந்த அடாவடித்தனத்திற்கு ஒரு பின்னணி பகை உள்ளது. புதிய ஜனநாயகம் பத்திரிக்கையில் தி.க. வீரமணியை அம்பலப்படுத்தி அட்டைப்படத்துடன் (பார்ப்பன ஜெ. பாத பூஜையில் மானமிழந்த கி. வீரமணி) ஒரு கட்டுரையும் புதிய ஜனநாயகத் தலைமை மீது பார்ப்பன முத்திரை குத்திய ''விடுதலை''க்கு பதில் தொடர் கட்டுரையும் அண்மையில் வெளிவந்து கொண்டிருக்கிறது. புதிய ஜனநாயகம் பத்திரிக்கையின் முகவராக உள்ள தவமணி, ஆலைத் தொழிலாளர்களிடம் பத்திரிக்கையை விநியோகித்தும் கருத்து பரப்பியும் வருவது தி.க.வைச் சேர்ந்த செங்குட்டுவனுக்கு முகங்கொடுக்க முடியாத நிலையை உருவாக்கியது. அரசியல் ரீதியாக பதில் சொல்ல வக்கில்லாத செங்குட்டுவன், வாய்ப்பைப் பயன்படுத்தி கைநீட்டி தமது இயலாமையை நிரூபித்துள்ளார். இப்பிரச்சினை தொடர்பாக செங்குட்டுவனின் அடாவடித்தனத்தை அம்பலப்படுத்தி பிரசுரம் விநியோகித்துள்ளார், தவமணி.

## பு.மா.இ.மு. செயலருக்கு இந்து வெறியர்களின் மிரட்டல்

நாடு மறுகாலனியாவதை எதிர்த்தும் இந்துமதவெறி பாசிசத்தை எதிர்த்தும் கடந்த மார்ச் மாதம் மதுரையில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி கருத்தரங்கம் மற்றும் பொதுக்கூட்டத்தை நடத்தியது. இதில் 1500 பேர் வரை கலந்து கொண்டனர். பு.மா.இ.மு.-வின் வளர்ச்சியையும் அதன் கூர்மையான அரசியல் கருத்துக்களையும் பார்த்து பொறுமுகிற எதிரிகளுள் ஆர்.எஸ்.எஸ். கும்பல் குறிப்பிடத்தக்கது. திருச்சி திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டத்திற்குப் பின் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளை தமது தாக்குதல் இலக்காக வைத்துள்ள ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி கும்பல் ம.க.இ.க. கோவை கிளைச் செயலர் மணிவண்ணனுக்கு தொடர்ந்து கொலை மிரட்டல் விடுத்து வருகின்றனர். தற்போது பு.மா.இ.மு. திருச்சிக் கிளை செயலர் தா. வீரபாண்டியனுக்கும் பல மொட்டை கடிதங்கள், ஆர்.எஸ்.எஸ். - இந்து மத வெறியர்களிடமிருந்து வந்துள்ளன.

பெயரைக் கிறுக்கியும், ''உன் நலம் விரும்பி'' என்றும், பகத்சிங் பெயரிலான அமைப்பு - போலியான முகவரி எழுதியும் வரும் இந்த மொட்டை கடிதங்கள் சில வாதங்களை வைத்து நயவஞ்சகமாக மிரட்டுகிறது. பகத்சிங்கை இந்துமத - இந்திய தேசியவாதியாகவும் ஏ.வைத்தியநாத ஐயரை, தாழ்த்தப்பட்ட மக்கள் மதுரை மீனாட்சி கோயிலில் நுழையப் போராடிய புரட்சி வீரராகவும் வாதங்களை முன்வைத்து தாக்கி எழுதப்பட்டுள்ளது. திலகரிலிருந்து இன்றைய இந்துவெறித் தலைவர்கள் வரை உதாரணம் காட்டி அக்கடிதம் எழுதியோர் இந்துவெறியை கக்கியுள்ளனர். ''அடுத்த நூற்றாண்டு ஹிந்து நூற்றாண்டு; சகோதரனே திருந்திவிடு'' என்றும் ''ஆன்மீக லட்சியத்தைப் (இந்துமதத்தை - நாம்) புறக்கணித்து விட்டு மேலைநாட்டு நாகரிகத்தினர் (கிறிஸ்து, முஸ்லீம்) பின்னால் நீ செல்வாயானால் அதன் விளைவாக மூன்றே தலைமுறைகளில் உனது இனம் (கம்யூனிஸ்டுகள்) அழிந்துவிடும்'' என்றும் எச்சரிக்கை - மிரட்டலும் உள்ளன.

ஒருபடி மேலேபோய் தா. வீரபாண்டியன் திருச்சியிலிருந்து மதுரை பகுதிப் பொறுப்பாளர் ரவீந்தரனுக்கு எழுதியது போல் ஒரு போலிக் கடிதமும் அதே கையெழுத்துக் கொண்ட நபரால் அனுப்பப்பட்டுள்ளது. அதில் லெனின் என்பவரை வெடிகுண்டு ஆயுதங்களுடன் மதுரையில் நாசவேலை செய்வதற்காக வீரபாண்டியன் அனுப்பி வைப்பதாகவும் அவரையும் ஆயுதங்களையும் திட்டத்தையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள ரவீந்தரனிடம் கோருவதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. "RSU, RYL தோழர்கள் நமக்கு எதிரியாக வேலை செய்கிறார்கள்'' என்று இடையில் குறிப்பிட்டு எச்சரிக்கை செய்வதன் மூலம் பிரித்து இனம் காட்டும் வேலையையும் செய்துள்ளது. அஞ்சலட்டையில் எழுதப்பட்ட இக்கடிதம், போலீசின் தாக்குதலை தூண்டி ''தீவிரவாதிகள்'' என்ற முத்திரைக் குத்தி தனிமைப்படுத்தும் முயற்சியில் - நோக்கில் தான் ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் தனியாகவோ, உளவுத்துறை போலீசு கூட்டுடனோ செய்யப்பட்டுள்ளது. எப்படி இருப்பினும், இவற்றால் எல்லாம் புரட்சியாளர்கள் வீழமாட்டார்கள். வீழ்த்தவும் முடியாது.

## தலித்களின் குடியிருப்புப் போராட்டம்

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் தின்னனூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள், இலவசக் குடியிருப்பு - காலனி வேண்டி 1976-ம் ஆண்டு முதல் பல முறை மனு போட்டனர். கிராம நிர்வாகி, வட்டாட்சியாளர், ஒன்றியத் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர், அமைச்சர், முதலமைச்சர், ஆளுநர் என எல்லோரிடமும் முறையிட்டு வந்ததன் விளைவாக 1985-ம் ஆண்டுதான் அரசு நடவடிக்கை எடுக்க முற்பட்டது. தின்னனூர் - அண்ணாநகர் தென்புறத்தில் உள்ள நிலத்தை குடியிருப்புக்காக தமிழக அரசின் சமூக நலத்துறை ஒதுக்கிக் கொடுத்தது. தமிழக அரசாணை எண் 2648-1894-ம் ஆண்டு சட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு உரிய சட்டத்தின் கீழ்தான் வீட்டு மனை நிலம் வழங்கப்பட்டது.

ஆனால் இந்த நிலத்தை அரசுக்கு கொடுத்த வெள்ளாளர் சாதியினர் நிலத்தை மீண்டும் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களை விரட்டுகின்றனர். இதனால் 300 குடும்பத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு அவதியுறுகின்றனர். அரசு அதிகாரிகளை பணபலத்தால் வளைத்துப் போட்டுக் கொண்டும், பெரும்பான்மை வெள்ளாளர் சாதியினர் அ.தி.மு.க.வை ஆதரித்து ஆளுங்கட்சி செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டும் இந்நில ஆக்கிரமிப்பை தொடர்கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிவெறிக்குப் பலியாகாமல் வெள்ளாளர் சாதியிலுள்ள ஜனநாயக சக்திகளுடன் ஐக்கியப்பட்டு சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்தி இக்குடியிருப்பு பிரச்சினைக்காகப் போராட, சரியான - புரட்சிகரத் தலைமையின் கீழ் அணி திரள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ இலங்கையின் கிழக்கு பொலனருவா மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களுக்குள் 18 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக விஜயதுங்கா அரசு அறிவித்துள்ளது. விவசாயம் செய்வதற்காக வாங்கிய கடனை அடைக்க முடியாத அளவு வறுமை வாட்டியதன் காரணமாகவே அவ்விவசாயிகள் அனைவரும் பூச்சி மருந்தைக் குடித்து இறந்து போயுள்ளனர். தொடர்ச்சியான உள்நாட்டு போரின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து போய்விட்டது; அதிகரித்துவரும் ராணுவச் செலவுகளுக்காக கூடுதல் வரி போட்டு விவசாயிகளையும் தொழிலாளிகளையும் ஒட்டச் சுரண்டி வருவதோடு, நாட்டையும் ஏகாதிபத்தியங்களுக்கு அகலத் திறந்துவிட்டுள்ளது, இலங்கை ஆளும் கும்பல். இப்படி காரணங்கள் வெளிப்படையாக இருக்க, விஜயதுங்கா அரசு கண்துடைப்புக்காக விசாரணை கமிஷன் அமைத்து நாடகமாடத் தொடங்கியுள்ளது.

★ பம்பாய் குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரித்து வரும் நீதிபதி ஜே.என். பட்டேல், இவ்வழக்கிற்கான புதிய நீதிமன்றக் கட்டிடத்தை ''சத்ய நாராயண'' பூஜை செய்து திறந்து வைத்துள்ளார். அதோடு அந்நீதிபதி தனது இருக்கையின் பின்புற சுவற்றில் எந்த நீதிமன்றத்திலும் இல்லாதவாறு ''ஸ்ரீ கணேஷ நமஹ'' என்ற பார்ப்பன மந்திரத்தையும் எழுதி வைத்துள்ளார். இதனால் எதிர் தரப்பு வக்கீல்கள் அனைவரும், ''இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுள் பெரும்பாலோர் முஸ்லீம்கள்; நீதிபதியின் நடவடிக்கைகளோ ஆர்.எஸ்.எஸ். - சிவசேனையின் சித்தாந்தத்தை ஒத்ததாக இருக்கிறது. எனவே இவரது விசாரணையை நம்ப முடியாது'' எனக் கூறி நீதிபதியை மாற்றக் கோரி வருகின்றனர்.

★ பன்னாட்டு நிறுவனங்களைத் தானும் தீவிரமாக எதிர்ப்பதாக மார்தட்டி வரும் ஆர்.எஸ்.எஸ்.-ன் துணை அமைப்பான வி.இ.ப. கடந்த பல ஆண்டுகளாகவே அமெரிக்காவின் பன்னாட்டு தொலை தொடர்பு நிறுவனம் எ.டி.டி. (A.T. & T.) யிடமிருந்து கமிஷன் பெற்று வந்துள்ள விவகாரம் தற்பொழுது அம்பலமாயுள்ளது. இதன்படி இவ்வமைப்பின் உறுப்பினர்கள் இந்நிறுவனத்தின் வாயிலாக தொடர்பு கொள்ளும் தொலைதூர தொலைபேசி கட்டணத்தில் 5 சதவீதத் தொகை கழித்துக் கொள்ளப்படுமாம். அமெரிக்காவில் இயங்கும் வி.இ.ப. கிளையுடனான இந்த ஒப்பந்தத்தை எ.டி.டி நிறுவனம் ரத்து செய்துவிட்டாலும், இந்தியாவில் இது இன்னும் செயல்பாட்டில் உள்ளது. இக்கழிவு போக, பல கோடி பெறுமான 'அன்பளிப்புகளை'யும் வி.இ.ப., எ.டி.டி - யிடமிருந்து பெற்றுள்ளதாக காங்கிரசு கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

★ பம்பாயின் கடற்பகுதியில் இருந்து எண்ணெய் எடுத்து வரும் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு நிறுவனம் (ONGC) தனது உற்பத்தி திறனை இருமடங்காக உயர்த்தும் பொருட்டு பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டு சேர உள்ளது. 200 கோடி டாலர் மூலதனமிடவுள்ள இப்பன்னாட்டு நிறுவனங்கள், ஏற்கனவே ஓ.என்.ஜி.சி. நிறுவனம் உற்பத்தி செய்து வரும் 1 கோடி டன் எண்ணெயிலிருந்து கிடைக்கும் இலாபத்திலும் தங்களுக்குப் பங்கு தர வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளன. இதுதவிர எண்ணெய் எடுக்கும் தொழில் நுட்பம் ஓ.என்.ஜி.சி. பெற்றுள்ள போதிலும், பன்னாட்டு நிறுவனங்கள் அதற்கும் தங்கள் தொழில் நுட்ப ஆலோசகர்களைப் பயன்படுத்த வேண்டும்; இதற்குத் தனியாக கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் நிர்ப்பந்தித்துள்ளன. உமி கொண்டு வந்தவன் அவலைத் தின்ற கதைதான் இது.

★ பிரதமர் ராவ் அமெரிக்கா சென்றிருந்த பொழுது, பாஸ்டன் நகரின் விடுதியொன்றில் அவருக்குப் பணிவிடை செய்ய வெள்ளை இனத்தைச் சேர்ந்த பணியாளர்களை மட்டுமே அனுமதித்துள்ளது, அவ்விடுதி நிர்வாகம். இதன் காரணமாக, ''தாங்கள் இனரீதியாக திட்டமிட்டே ஒதுக்கப்பட்டோம்'' என இரு கறுப்பின ஊழியர்கள் அந்நாட்டின் ''இன ஒதுக்கலுக்கு எதிரான கமிஷனிடம்'' நிர்வாகத்தின் மீது புகார் கொடுத்தனர். இதனால் நாடு முழுவதும் தனது பெயர் கெட்டுவிடும் என அரண்டு போன நிர்வாகம், ''கறுப்பு இன ஊழியர்களிடம் மன்னிப்பு கேட்டும், நஷ்ட ஈட்டுத் தொகை கொடுத்தும்'' வழக்கை முடித்துக் கொண்டுள்ளது. இந்த விவகாரத்தை விசாரிக்கப் போக நரசிம்மராவுடன் போன உளவுப் படைதான் அவ்வாறு கேட்டுக் கொண்டது எனத் தெரியவந்து இந்தியாவின் நிற வெறி எதிர்ப்பு அம்பலமானது.

★ ஈராக் நாட்டில் இருதய கோளாறுகளால் பாதிப்படைந்துள்ள நோயாளிகள் பலர் தொடர்ந்து இறந்து வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்நோய்க்கான மருந்தை ஈராக்குக்கு ஏற்றுமதி செய்வதற்கு பிரிட்டன் மறுத்துள்ளதன் காரணமாக மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டு, அதன் விளைவாகத்தான் இந்நோயாளிகளுள் பலர் இறந்து போயுள்ளனர். ''உணவுப் பொருட்களுக்கும் மருந்து பொருட்களுக்கும் ஐ.நா. தடை விதிக்கவில்லை'' என ஈராக் நிலைமையை விளக்கி கடிதம் எழுதிய பின்னும்கூட, ''அக்குறிப்பிட்ட மருந்தில் கதிரியக்க இரசாயனப் பொருட்கள் உள்ளதாகவும், அதைக் கொண்டு ஈராக் குண்டுகள் தயாரித்துவிடும்'' என காரணங்களைக் கூறி பிரிட்டன் ஏற்றுமதியினை தடுத்தி நிறுத்திவிட்டது.

★ தாய்லாந்தில் எட்டு லட்சத்துக்கும் குறைபடாத எண்ணிக்கையில் 16 வயதுக்கும் குறைவான சிறுமிகள், விபச்சாரத்தில் கட்டாயமாக ஈடுபடுத்தப்படுவதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. இதையே தொழிலாக நடத்தி வரும் கிரிமினல் கும்பல்களை அந்நாட்டு அதிகாரிகள் கண்டு கொள்வதேயில்லை என்றும் அவ்வமைப்பு குற்றம் சுமத்தியிருக்கிறது. இதுதவிர, எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், எம்.பி.களுமான இருவர் மீது, அவர்கள் அதிகாரத்தில் இருந்த பொழுது அமெரிக்காவுக்கு போதை மருந்து கடத்தியது தொடர்பாக வழக்கு தொடரப்படவுள்ளது. இவர்கள் தவிர இன்னும் 10 எதிர்கட்சி எம்.பி.களும் இக்கடத்தலில் பங்கு பெற்றுள்ளார்கள். தாய்லாந்து என்றாலே போதை மருந்தும் விபச்சாரமும் என்றாகிப் போனதற்கு ''சனநாயகத்தின் பாதுகாவலர்கள்'' என்ன பதில் தரப் போகிறார்கள்? ●

காட் ஒப்பந்தத்தை எரிக்கும் பா.ஜ.க. மகளிர் அணியினர்: ஓட்டுப் பொறுக்க 'சுதேசி' அரிதாரம்.



Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

PUTHIYA JANANAYAGAM R.N. 42046/85 Regd.No. TN/MS(S) 622
www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

மடிப்புக் கலையாத உடை; நிமிர்ந்த நேர்பார்வை; என்ன 'சாதனை' படைத்துவிட்ட 'வீரர்கள்' இவர்கள் எனக் கேட்கத் தோன்றும். ஆனால் உண்மையோ நேர்மாறானது. முத்தாண்டிகுப்பத்தில் வசந்தா என்ற இளம்பெண்ணை காவல் நிலையத்தில் கற்பழித்துக் கொலை செய்த போலீசுக்காரன்கள் இவர்கள். விடுதலைப் புலிகளையும், 'தீவிரவாதிகளையும் விரட்டிப் பிடித்த' தமிழ்நாடு காவல்துறை, 75 நாட்கள் 'தலைமறைவாக' சுற்றித் திரிந்த தனது இந்த சகோதரர்களைப் பிடிக்க முடியாமல் மூச்சு திணறிப் போனது. தனிப்படை அமைத்து தேடுதல் வேட்டை என்றது. அவர்களும் போலீசுகாரர்கள் என்பதால் சாமர்த்தியமாக தப்பி விடுகிறார்கள் என்றெல்லாம் பூ சுற்றியது. போலீசாரின் கள்ளத் தனத்தை எதிர்த்து மகளிர் அமைப்புகள் போராடவே, 'இதோ சரணடைந்து விட்டார்கள்' என சட்டபூர்வ பாதுகாப்பு கொடுக்கத் தொடங்கி விட்டது.



இதோ இப்படம் அடங்காத தமிழக போலீசின் கொலைவெறிக்கு மற்றுமொரு சான்று. வாழ வேண்டிய மகன் அற்ப ஆயுளில் இறந்து போவதை எந்தத் தாயால் பொறுத்துக் கொள்ள முடியும்? அதுவும் சிறுவன் என்றும் பாராது போலீசுக்காரன்களால் அடித்தே கொல்லப்பட்டான் என்றால் நெஞ்சே விம்மி வெடித்துப் போகும். ஆனாலும் துக்கத்தையும் மீறிவரும் ஆத்திரம். அதனால்தான் அந்தத் தாய் கொலைகாரர்களை எதிர்த்து வீதிக்கே வந்துவிட்டார். சென்னையைச் சேர்ந்த பதின்மூன்றே வயதான சதீஷ்குமாரை விசாரணைக்கு அழைத்துச் சென்ற போலீசார், அவன் கதற கதற தொடர்ந்து இரண்டு நாட்களாக அடித்துக் கொன்று போட்டனர்; பிணத்தையும் வீட்டுவாசலிலேயே தூக்கி எறிந்துவிட்டு ஓடிவிட்டது அக்கொலைகார கும்பல். ஓசூரைச் சேர்ந்த 15 வயது ராஜானைக் கொன்று எரித்த இடத்தின் சூடு தணியும் முன்பே, சதீஷைக் கொன்று தனது இரத்தப் பசிக்கு தீனி போட்டுக் கொண்டுள்ளது தமிழக போலீசு.

அதிகார மமதை கொண்டு கொடிய குற்றங்கள் புரிந்த பின்னும் தண்டிக்கப்படாது சுற்றித் திரியும் கிரிமினல் போலீசும், அதற்கு ஆசி வழங்கும் ஜெயா கும்பலும் ஒரு புறம்; குற்றங்கள் நிரூபிக்கப்படாமலேயே உயிரைப் பறி கொடுத்த ராஜாவும் சதீஷ்குமாரும், தவறே செய்யாது தண்டிக்கப் பெற்ற சுமதியும் ரெங்கம்மாவும் வசந்தாவும் மறுபுறம்; இன்னும் இந்தப் பட்டியல் நீளுவதை நாம் கையைக் கட்டிக் கொண்டு பார்க்கத்தான் வேண்டுமா?

படிப்பகம்